DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1390
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 25, 2022

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# அகதிக் கோரிக்கையாளர்களை விட அனுபவமுள்ள தொழில்சார் வல்லுனர்களையே கனடிய தேசம் உடனடியாக வரவேற்கின்றது

கடந்த காலங்களில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக கனடா தேசமானது அகதிக்கோரிக்கையாளர்களை அதிகளவில் தனது நாட்டுக்குள் அனுமதித்தது. அனால் தற்போது கனடா முழுவதிலும் தொழில்சார் வல்லுனர்களுக்கு அதிகளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் சாதாரண தொழிலாளர்களும் விவசாயத் தொழிலாளர்களும் பல மாகாணங்களில் தேவைப்படுகின்றார்கள். எனவே. அகதிக் கோரிக்கையாளர்களை விட அனுபவம் உள்ள தொழில்சார் வெளிநாட்டவர்களையே கனடா உடனடியாக நாட்டிற்குள் வரவேற்கின்றது.

கனடா மற்ற பெரிய நாடுகளைவிட திறமையான புலம்பெயர்ந்தோரை வரவேற்பதோடு மட்டுமின்றி, தங்கள் தங்கள் நாடுகளில் பல்வேறு அடக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டு அங்கிருந்து வெளியேறத்துடிக்கும் மக்களையும் அகதிகள் என்ற அடிப்படையில் அவர்களை கனடாவில் குடியேறுவதற்கும் வாய்ப்புக்களை அளிக்கும் நாடுகளில் சிறந்த ஒன்றாகவும் விளங்குகின்றது.

(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

# HERITAGE BEYOND BORDERS ANNUAL AWARDS AND GALA NIGHT

## இவ்வருடத்திற்குரிய Excellence Award விருது வழங்கப்பெற்ற தமிழ்க் கனடியர் வாசன் பரமேஸ்



கடந்த 19-11-2022 சனிக்கிழமை மாலை நகரில் அமைந்துள்ள **Woodbine Banquet and Convention Centre** மண்டபத்தில் நடைபெற்ற **HERITAGE BEYOND BORDERS ANNUAL AWARDS AND GALA NIGHT** என்னும் பிரமாண்டமான நிகழ்வில் நிகழ்வில் கனடா வாழ் தமிழ் பேசும் சமூக சேவையாளரும் கணக்காளருமான திரு வாசன் பரமேஸ் இவ்வருடத்திற்குரிய **Excellence Award** கௌரவ விருது வழங்கப்பெற்றது. இந்த வருடத்தின் விருதுகளைப் பெற்ற பல்லின மக்களைச் சார்ந்தவர்களுள் வாசன் பரமேஸ் அவர்கள் மட்டுமே தமிழ் பேசும் வெற்றியாளர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி கடைசிப் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC, BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்


தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Rich Cakes by Araviram

றிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**

**Contact:**
**Raguram - 647 648 1154**

### காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.

**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net

1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, கனடாவில் பிறந்த எனது 29 வயது மகளுக்கு நன்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: RAJ
(647) 293-2784
(phone or text)

### KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

### Basement for Rent

**Denison and Featherstone** சந்திப்பிற்கு அருகில் உள்ள ஒரு அறை கொண்ட **basement with separate entrance** உடனடியான வாடகைக்கு உண்டு. **Laundry separate.** பெண்கள் விரும்பத்தக்கது.

**Call: John**
**647-965-0754**

### தையல் வேலைக்கு பெண்கள் தேவை

**Scarborough** நகரத்தில் **Markham & Steels** சந்திப்புக்கு அருகில் உள்ள தொழிலகம் ஒன்றுக்கு தையல் வேலைக்கு பெண்கள் தேவை. சாறி பிளவுள் மற்றும் சிறுவர்களின் ஆடைகள் ஆகியவற்றை தைக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**416 419 3078**
**Call after 6.00 P.M only**

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# வரவு செலவுத்திட்ட உரையின் போதும் மக்கள் எழுச்சியை கொச்சைப்படுத்திய தகைமையற்ற ஜனாதிபதி

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் 2023 வரவு-செலவுத் திட்டம் உரையானது வருமானம் மற்றும் செலவினங்களைப் பற்றிய விபரங்களை விட நாட்டு மக்களை நச்சரிக்கும் வகையிலேயே அதிகமாக கருத்துக்களை கொண்டு அமைந்துள்ளது.

இலங்கையில் வாழும் புத்திஜீவிகளும். மத்தியதர வர்க்கம் மற்றும் உழைக்கும் வர்க்கம் அத்துடன் மாணவர் சமூகம் என அனைத்து தரப்பினரையும் கொண்டு நிறுவப்பட்ட 'அரசலய' என்னும் போராட்டக் குழுவை விமர்சனம் செய்தும். இவ்வகையான போராட்டங்களோ அன்றி எழுச்சியோ ஆளும் வர்க்கத்தையோ அன்றி அதிகாரத்தைக் கையில் எடுத்து வைப்பதற்கு பயன்படுத்தப்படும் இராணுவத்தையோ அச்சுறுத்தாது என்று தனது உரையில் ஆரம்பித்து இறுதியில் இனிமேல் எழுச்சி என்ற போர்வையில் எந்தப் போராட்டம் இடம்பெற்றாலும், அது இராணுவத்தின் துணை கொண்டு அடக்கப்படும் என்ற இழிவான வார்த்தைகளால் 'இடித்துரைத்துள்ளார் இந்த நவீன 'ஹிட்லர்' ரணில் வி(அ)க்கிரமசிங்க.

இந்த 'உப்புச் சப்பற்ற' வரவு செலவுத்திட்டத்தை எதற்காக சமர்ப்பித்தோம் என்ற அர்த்தமே எடுத்தியம் இயலாத வகையில், பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தற்போதைய அரசியல் குழப்பத்தை கருத்தில் கொண்டு,அந்த வரவு-செலவுத் திட்டம், உள்ளூர் பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் பிரிவுகளின் பரந்த ஆதரவைப் பெறுவது மட்டுமல்லாமல், சர்வதேசஅவதானிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற உதவி நிறுவனங்களின் நம்பிக்கை மற்றும் பாராட்டை பெறவும் தந்திரமாக வடிவமைக்கப்பட்ட ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றே நாம் கூறவேண்டும்.

.மேலும் முக்கியமாக ஜனாதிபதியின் தேர்தல் பிரபல்யத்தையும் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் தனது செல்வாக்கை மேம்படுத்தும் என்ற சுயநல நோக்கமும் இந்தவரவு-செலவுத் திட்ட த்தின் ஊடாக எடுத்துச் செல்லப்படுகின்றது என இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளதையும் நாம் இந்த இடத்தில் எடுத்துக் கூற விரும்புகின்றோம்..இந்த வகையில் இந்த ஆண்டு முடிவடையும் வேளையில், நாடு அரசியலமைப்பு ரீதியாக இன்னொரு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிவிடும் என்ற உண்மையைக் ரணில் விக்கிரமசிங்கா என்னும் தந்திரசாலி கொண்டிருப்பதையும் , 2023 வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கம் நன்கு படம் போட்டுக் காட்டியுள்ளது என்றே நாம் கவனித்துள்ளோம்.

இவை யாவற்றிற்கும் மேலாக, ரணில் விக்கிரமசிங்கவின் இவ்வாண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் எந்த வெற்றியும் முக்கியமாக பொருளாதார சமன்பாட்டினை நிலை நாட்டவில்லை என்றே பொருளாதார வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் . எவ்வாறாயினும் மேலும் கூறுவதானால் ரணில் விக்கிரமசிங்கவின் 2023 வரவு செலவுத் திட்டம் வெளியில் உள்ள யதார்த்தத்தின் உண்மையான பிரதிபலிப்பைக் காட்டிலும் எதிர்பார்ப்புகள் மற்றும் அரசியலை அடிப்படையாகக் கொண்டு ஒரு கபடத்தனமான இன்னொரு பதவியேற்பு வைபவத்தை நோக்கியதாகவே காணப்படுகின்றது என்றும் கூறலாம்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## அகதிக் கோரிக்கையாளர்களை விட அனுபவமுள்ள தொழில்சார் வல்லுனர்களையே...

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை ஒட்டாவா நகரில் இடம்பெற்ற குடிவரவாளர்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் குடிவரவு ஆலோசகரான வில்லியம்ஸ் ஜோன் என்பவர் தெரிவித்தார்.

கனடாவிற்கு தற்போது அகதிகளாக வர விரும்பும் வெளிநாட்டவர்களை கனடிய குடிவரவுத் திணைக்களம் முன்னரைப்போன்று அனுமதிக்குமா என்று தேசிய ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்

கனடா தேசம் தனது பொருளாதாரத்தை காப்பாற்றுவதற்காக எதிர்காலத்திற்கான இலக்குகளை நிர்ணயித்திருந்தாலும், அது எப்போதும் தனது சொந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை வரலாறு காட்டுகிறது. 2021ஆம் ஆண்டில், கனடா சுமார் 59,000 அகதிகளை குடியேற்றுவதை இலக்காகக் கொண்டிருந்தது. இது முன்னர் ஏற்றுக்கொண்ட அளவைவிட மூன்று மடங்கு அதிகமாகவே காணப்பட்டது.

எவ்வாறாயினும் 2023ஆம் ஆண்டளவில், 76,000 அகதிகளை குடியேற்ற கனடா தீர்மானத்தை எடுத்துள்ளது.

கனடா 2025ஆம் ஆண்டுக்குள் 15 லட்சம் புலம்பெயர்ந்தோரை அனுமதிப்பதாக இலக்கு நிர்ணயித்துள்ளது.

வயது முதிர்ந்த தலைமுறையினர் தொழிற் சந்தையிலிருந்து விலகிக் கொண்டு வருவதால் அதன் பொருளாதாரத்தில் எஞ்சியிருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கனடா குடியேற்றத்தை எதிர்பார்க்கிறது.

ஆனால், இவ்வளவு வெளிநாட்டவர்களின் வருகையை அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொள்ளவில்லை.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் ஒவ்வோர் ஆண்டும் இங்கிலாந்தில் குடியேறுகிறவர்கள் எண்ணிக்கையைவிட 8 மடங்கும், அமெரிக்காவில் குடியேறுவோரை விட 4 மடங்கும் என அதிகளவில் கனடாவில் குடியேற்றம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்

எனினும் பல ஆண்டுகளாக, மக்கள்தொகை மற்றும் பொருளாதாரத்தை வளர்த்துகொள்வதற்காக கனடா குடியுரிமை இல்லாமல் காலவரையறையின்றி நாட்டில் தங்குவதற்கு உரிமையுள்ள நிரந்தர குடியிருப்பாளர்களை ஈர்க்க முயன்று வருகிறது.

கடந்த ஆண்டு, அந்நாடு 405,000 நிரந்தர குடியிருப்பாளர்களை வரவேற்றது. இந்தத் தொகை கனடிய குடிவரவு வரலாற்றில் மிக அதிகமான எண்ணிக்கை. எனவும் கருதப்படுகின்றது.

"எமது கனடிய தேசம் வளர்ச்சியடைய வேண்டுமானால், புலம்பெயர்ந்தவர்களைக் கொண்டு வர வேண்டும். குடியேற்றம் செயலூக்கம் கொண்ட மக்கள்தொகையின் வளர்ச்சியை அதிகரிக்கிறது. எனவும் வில்லியம்ஸ் ஜோன் தெரிவித்தார்.

# இலங்கை போன்ற நாடுகளில் ஹிட்லர் போன்ற கொடிய மனிதர்கள்போல எவரும் வர முடியாது என்கிறார் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி

### பாராளுமன்றத்தில் ரணில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக அவர் உரை அமைந்தது

இலங்கை போன்ற நாடுகளில் ஹிட்லர் போன்ற கொடிய மனிதர்கள்போல எவரும் வர முடியாது என்று பாராளுமன்றத்தில் தனது உரையில் தெரிவித்தார் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி.



நேற்று முன்தினம் இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அச்சமயத்தில் இலங்கையில் மக்கள் செல்வாக்கு இல்லாத ஜனாதிபதி என்ற பெயர்பெற்றுள்ள ரணில் அவர்களும் பிரசன்னமாகியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி. தொடர்ந்த உரையாற்றுகையில் இராணுவத்தில் இருக்கும் தொழிலாளிகளின் பிள்ளைகளின் கைகளில் துப்பாக்கிகளை கொடுத்து பட்டினியில் இருக்கும் மக்களின் தலையில் வைக்குமாறு கூறுவது நியாயமானதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பயங்கரமான கருத்தை வெளியிட்டார். மக்கள் உரிமைகளை கோரி



வீதியில் இறங்கினால், அவசர காலச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி, இராணுவத்தை கொண்டு அடக்க போவதாக கூறினார். ஜனாதிபதியின் இந்த கருத்து முழு நாட்டு மக்களுக்கு செய்த அவமதிப்பு. இப்படியான கருத்தை வெளியிட்டிருக்கக்கூடாது என்பது எனது கருத்தாகும்.. மக்கள் ஆட்சி இங்கு மலர்ந்தவுடன் ஹிட்லர்களுக்கு இலங்கை போன்ற நாடுகளில் வாய்ப்பு கிடைக்காது.

மக்களுக்கு எதிரான ஆட்சியை நடத்தி அவர்களுக்கு கஸ்டங்களையும் பிரச்சினைகளையும் உருவாக்கிய காரணத்தால் தான் கோட்டாபய ராஜபக்ச துரத்தியடிக்கப்பட்டார் எனவும் ஹெக்டர் ஹப்புஹாமி மேலும் தெரிவித்துள்ளார்.

# இ.தொ.காவின் சாவிக்கொத்து தொண்டமான் குடும்பம் வசம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



தெற்காசியாவின் சாபக்கேடு குடும்ப ஆட்சி. இதில் எந்த நாடும் கட்சியும் விதிவிலக்கல்ல. இலங்கையில் தற்போது நடைபெறும் ஆட்சியும், அத்துடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகளும் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ராஜபக்ச சகோதரர்கள் நால்வரும் ஆட்சியின் உயர் பொறுப்புகளில் உள்ளனர். "இளவரசர்" நாமல் அமைச்சர், மற்றும் சில ராஜபக்சக்கள் வேறு சில அமைச்சு மற்றும் இதர பொறுப்புகளில்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். பெரியவர் தொண்டமான், பின்னர் ஆறுமுகன் தொண்டமான், பிறகு அவரது என்று வரிசை செல்லுகிறது.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும், பொதுச் செயலராகவும், நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பு ஆகியவை தொண்டமான் குடும்பத்தினர் வசம் சென்றுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற அக்கட்சியின் தேசிய சபை? கூட்டத்தில் நடந்தது என்ன?

மலையகத் தமிழர்களுக்கான மாபெரும் அரசியல் மற்றும் தொழிற்சங்க இயக்கமாக கருதப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவி மீண்டுமொருமுறை தொண்டமான் குடும்பம் வசம் சென்றுள்ளது. காங்கிரஸின் புதிய தலைவராக செந்தில் தொண்டமானை, எதிர்ப்பின்றி - ஏகமனதாக தேசியசபை புதன்கிழமை (30) ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவி ஜீவன் தொண்டமான் வசம் உள்ள நிலையில், கட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜி தொண்டமான் கைகளுக்குள் உள்ளது. தற்போது தலைமைப்பதவி செந்தில் தொண்டமானின் கைகளுக்குள் வந்துள்ளது. அந்தவகையில் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் முழுமையான சாவிகொத்து தொண்டமான் குடும்ப வசம் சென்றுவிட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இ தொ கா தலைவராக செயற்பட்ட அமரர். ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அப்பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. எனவே, புதிய தலைவர் உட்பட இதர பதவிகளுக்காக உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கொட்டகலையில் கூடியது.

தலைவர் பதவிக்கு செந்தில் தொண்டமானை நியமிக்க வேண்டும் என ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டதால், அப்பதவிக்கு போட்டி நிலவவில்லை. அவர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைப்பதவிக்கு சவால் விடுப்பாரென பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மருதபாண்டி ராமேஸ்வரனுக்கு நிதிச்செயலாளர் பதவிக்கு மேலதிகமாக கட்சியின் தவிசாளர் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்கும் தேசிய சபையில் ஆட்சேபனை எதுவும் முன்வைக்கப்படவில்லை. பிரதி தவிசாளர் பதவி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான ராஜதுரையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர்களாக மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜும், அனுசியா சிவராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காங்கிரஸின் சார்பில் ஆசிரியர் சார் தொழிற்சங்க விவகாரத்தை கணபதி கனகராஜ் கையாண்டுவருகின்றார். பொதுச்செயலாளர் உட்பட முக்கிய பதவிகளை அனுசியாவும் வகித்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் அவைத் தலைவராக செயற்பட்ட அதேபோல காங்கிரஸின் நீண்டகால உறுப்பினரான துரை மதியுகராஜா திட்டமிட்ட அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ளார். பிரதித் தலைவருக்கான போட்டியில் அவர் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் சூழ்ச்சி இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் தோல்வி ஏற்படும் என தெரிந்ததால் கடந்த பொதுத்தேர்தலில் களமிறங்கும் வாய்ப்பை மதியுகராஜா மறுத்தார். அவரின் எதிர்ப்பையும்மீறி பாரத் அருள்சாமி களமிறக்கப்பட்டார். அவரால் வெற்றிபெறமுடியாமல்போனது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே துரை மதியுகராஜா (கண்டி துரை) ஓரங்கப்பட்டுள்ளார். பிரஜாசக்தி திட்ட பணிப்பாளராக செயற்படும் பாரத் அருள்சாமிக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனுக்கும், சிவராஜாவுக்கும் போஷகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பி.சக்திவேல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அரசியல் பிரிவுக்கான உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந்தும், தொழிற்சங்க பிரிவுக்கான தேசிய அமைப்பாளராக பழனி சசிகுமாரும் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவர்களின் எண்ணிக்கை இம்முறை குறைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புமூலமும், பரிந்துரைமூலமும் சுமார் 12 உப தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிலிப்குமார், சென்பகவள்ளி, யோகராஜ், சச்சிதானந்தன் ஆகியோருக்கும், பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அசோக்குமார், சிவலிங்கம் ஆகியோருக்கும் உப தலைவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் உப தலைவர் பதவி சிவஞானத்திடமும், இரத்தினபுரி மாவட்ட உப தலைவர் பொறுப்பு ராஜமணியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தை சேர்ந்த பாஸ்கரன், களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த எம்.மேரி, கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் செல்லசாமி திருகேதீஸ் ஆகியோரும் உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இரத்தினபுரி மாவட்ட அரசியல் அமைப்பாளராக ரூபன் பெருமாளும், நுவரெலியா மாவட்ட அரசியல் அமைப்பாளராக பாரதிசாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் கட்டுப்பாட்டுக்குள் காங்கிரஸ் வந்த பிறகு, இரு தசாப்தங்கள்வரை அவர் தலைமைப்பதவியில் நீடித்தார். அதன்பிறகு ஆறுமுகன் தொண்டமான் தெரிவானார், இடையில் முத்துசிவலிங்கத்துக்கு தற்காலிகமாக தலைமைப்பதவி ஒப்படைக்கப்பட்டது. தற்போது அப்பதவியை செந்தில் தொண்டமான் பொறுப்பேற்றுள்ளார்.

"சந்தா பெறாத கட்சியாக காங்கிரஸை மாற்ற வேண்டும் என்பதே மறைந்த தலைவரின் இலட்சியம். அந்த இலக்கை அடையவே நாம் எதிர்ப்பார்க்கின்றோம்." - என்று தலைமைப்பதவியை ஏற்ற பிறகும் அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார் செந்தில் தொண்டமான்.

அதேபோல இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி பதவி பங்கீடு இடம்பெற்றுள்ளது எனவும், காங்கிரஸின் இனி தனிநபர் முடிவுக்கு இடமில்லை எனவும் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவித்தார். ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் தனிநபர் முடிவே ஆதிக்கம் செலுத்தியது என்ற விடயத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

"சந்தா வாங்காத சங்கம்" என்ற இலக்கு சாத்தியமா? "கண்டி துரை"க்கு "வெட்டு" - பாரத்துக்கு பதவி!!

# முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் யானை தாக்கி ஒருவர் பலி

இலங்கை செய்திகள்
Sri Lanka News



**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 20 ஆவது கிலோமீற்றர் வனப்பகுதியில் காட்டுயானை தாக்கி சின்னசாளம்பனைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மண்வெட்டி பிடி வெட்டுவதற்காக சென்ற வேளையிலே இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இந்த அனர்த்தத்தில் வவுனியா மெனிக்பாம் கிராமத்தை சேர்ந்த ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பனில் வசித்து வருகின்ற பச்சைமுத்து-புலேந்திரன் (வயது48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஒட்டுசுட்டான் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லைத்தீவு ஊடக அமையத்துக்குள் இராணுவ சீருடையில் நுழைந்த இராணுவம்!

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு ஊடக அமையத்துக்கு வியாழக்கிழமை (24) காலை வருகைதந்த முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள 591 ஆவது பிரிகேட் முகாம் படையினர் ஊடக அமையத்தின் தகவல்கள் தருமாறு கோரியுள்ளனர்.

சீருடை தரித்த இரண்டு இராணுவத்தினர் தம்மை 591 ஆவது படைமுகாமிலிருந்து வருகின்றதாக அடையாளப்படுத்தியதோடு தமக்கு ஊடக அமையம் தொடர்பில் சில தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளனர்.

ஊடக அமையத்தின் தலைவரோ அல்லது முகாமையாளரோ இருப்பார்கள் எனில் அவர்களது பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்ற தகவல்களை வழங்குமாறும் அவ்வாறான தகவல்களை பெற்றுவருமாறு தமது 591 பிரிகேட் படைமுகாமின் கட்டளை அதிகாரி பணித்துள்ளதாகவும் இதே போன்றே முல்லைத்தீவு நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களின் தகவல்களும் தம்மால் திரட்டப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையிலேயே ஊடக அமையத்தின் தகவல்களையும் கோருவதாக வருகைதந்த படையினர் ஊடக அமையத்தின் பொருளாளர் கணபதிப்பிள்ளை குமணனிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு வருகைதந்த படையினருக்கு பதில் வழங்கிய ஊடக அமையத்தின் ஊடகவியலாளர் குமணன் என்ன நோக்கத்துக்காக இந்த தகவல்களை திரட்டுகின்றீர்கள் என நாம் தெரிந்துகொள்ளவேண்டும். என கோரிய நிலையில் எமக்கு தெரியாது எமது முகாமின் அதிகாரி விபரங்களை திரட்டுமாறு பணித்துள்ளார் அதற்காகவே திரட்டுகிறோம் முன்னர் இருந்த அதிகாரி மாற்றலாகி சென்றுவிட்டார் இப்போது புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் அவரின் கூற்றின் படியே பதிவுகளை மேற்கொள்கின்றோம் எமக்கு என்ன நோக்கத்துக்கு என தெரியாது என தெரிவித்துள்ளனர்.

இதற்க்கு பதிலளித்த ஊடகவியலாளர் என்ன நோக்கத்துக்காக படையினர் எமது தகவல்களை கோருகின்றார்கள் என்பதை சரியாக தெரிந்து கொள்ளாது எம்மால் நீங்கள் கேட்ட உடனே உடனடியாக தகவல் வழங்க முடியாது என மறுத்த நிலையில் அங்கிருந்து படையினர் திரும்பி சென்றுள்ளனர்.

இவ்வாறு படையினர் வருகைதந்த நேரம் ஊடக சந்திப்பு ஒன்று இடம் பெறுவதற்கான ஏற்பாடுகளில் ஊடகவியலாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.



முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடக சந்திப்புகளோ அல்லது நிகழ்வுகளோ இடம்பெறும் சந்தர்ப்பங்களில் ஊடக அமையத்துக்கு அருகில் உள்ள பகுதிகளில் இராணுவ புலனாய்வாளர்கள் தொடர்சியாக கண்காணிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நிலையில் இன்று படையினர் வருகைதந்து தகவல்கள் கோரிய செயற்பாடு ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சதச்சத்தை ஊட்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் மாவீரர் நாள் அன்று முல்லைத்தீவு நகர வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடி இருப்பதோடு மாவீரர் நாள் நினைவேந்தல் செயற்பாடுகளை வர்த்தகர்கள் தொடர்சியாக மேற்கொண்டு வருவது வழமை.

இவ்வாறு தமது கடைகளை மூடியுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை தொலைபேசியில் தொடர்புகொள்ளும் படையினர் கடைகளை திறக்குமாறு அச்சுறுத்தும் சம்பவங்கள் கடந்த வருடங்களில் பதிவாகியிருந்த நிலையில் இவ்வருடமும் மாவீரர் நாள் நெருங்கி வரும் நிலையில் முல்லைத்தீவு நகரில் உள்ள வர்த்தக நிலையங்களின் தகவல்களை படையினர் திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாங்குளத்தில் இடம்பெற்ற போலீசார் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான சந்திப்பு





போலீசார் மற்றும் பொதுமக்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று இந்ரு முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமுத்திர ஜீவ அவர்களின் ஒழுங்குபடுத்தலில் குறித்த கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பாக மாவட்டத்தில் இடம்பெறும் பெண்கள் மீதான துஸ்பிரயோகங்கள், பாடசாலை மாணவர்களின் கற்றல் இடைவிலகல் மற்றும் போதை வஸ்து பாவனையின் அதிகரிப்புக்களும் அதன் தாக்கங்களும், அதனூடு உருவாகும் சட்டவிரோத செயற்பாடுகள் பற்றியும் குறித்த கலந்துரையாடலில் மக்களால் கருத்துரைகளும் வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் பற்றியும் பிரதேச போலீசார் அசண்டையீனமாக இருப்பதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் மக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

மக்காளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளித்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் சம்பவங்கள் தொடர்பில் தான் கூடிய கவனம் எடுப்பதாகவும் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு ஒரு வாரத்துக்குள் தன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் உதவி பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸ் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# மன்னாருக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட ரணில்

ரணில் விக்ரமசிங்க கடந்த ஞாயிறு காலை மன்னார் மாவட்டத்திற்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

மன்னார் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஆராய்வதும் அந்தப் பிரச்சினைகளுக்கு வழங்கக் கூடிய தீர்வுகள் குறித்து கலந்து ரையாடுவதுமே ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் நகருக்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதலில் மன்னார் ஒல்லாந்து கோட்டையின் புனரமைப்பு பணிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

அதன் பின்னர், நடுக்குடா கடற்றொழிலாளர் கிராமத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கடற்றொழிலாளர் சமூகத்தவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியதுடன், அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.



நடுக்குடா கடற்றொழிலாளர் கிராம மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவு படுத்தப்பட்டதோடு, அது தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து தேவையான தீர்வுகள் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.



மன்னார் காற்றாலை மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரதேசத்தையும் ஜனாதிபதி அவதானித்ததுடன் காற்றாலை மின் நிலையத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி கேட்டறிந்துள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க,மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி. ஸ்ரான்லி டிமேல் மற்றும் அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# திருக்கேதீஸ்வர ஆலய பகுதியில் தொடர்ச்சியாக திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர் மக்களினால் மடக்கி பிடிக்கப்பட்டார்



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பகுதி மற்றும் கிராமப் பகுதியில் தொடர்ச்சியாக திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வந்த அடம்பன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (20) மதியம் அப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு உயிலங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், குறித்த இளைஞன் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பகுதி மற்றும் கிராமப் பகுதியில் தொடர்ச்சியாக ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பணப்பைகள் திருடுவதும் ஆலய பகுதியில் உள்ள கிராமத்தில் மக்களின் வீடுகளில் திருடுவதை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (20) மதியம் திருக்கேதீஸ்வர ஆலய மக்களினால் குறித்த இளைஞர் மடக்கி பிடிக்கப்பட்டார்.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் வாகனங்கள் உடைத்து பணம் தேடுவதும் அவர்களின் உடமைகளை திருடுவது தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது தெரிய வந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கோயில் வளாகத்தில் வாகனம் ஒன்றை உடைத்து திருட முற்பட்ட போது மக்கள் அவரை துரத்திச் சென்றபோது தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை மதியம் குறித்த நபர் ஆலய வளாகத்தில் நடமாடிய போது மக்கள் மடக்கி பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# ஆட்சியை கவிழ்க்க முயன்றால் இராணுவத்தை பயன்படுத்துவேன்

## மக்கள் ஆதரவு இலலாத "நவீன ஹிட்லர்" ரணில் கொக்கரிப்பு



அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்குடன் மற்றுமொரு போராட்டம் நடைபெற ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, விசேட உரை நிகழ்த்திய போதே அவர் இதைக் குறிப்பிட்டார்.

இவ்வாறு போராட்டங்களை நடத்த முயற்சிக்கும் பட்சத்தில், ராணுவம் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டு, போராட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும்.

உரிய தரப்பிடம் அனுமதி பெற்று, வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் போராட்டங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அனுமதியின்றி போராட்டங்களை நடத்தினால், ராணுவத்தை ஈடுபடுத்தி, அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியேனும், அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

போராட்டங்கள் நடந்த முந்தைய காலங்களில் தீ வைப்பு சம்பவங்கள் பதிவான நிலையில், அதைத் தூண்டி விட்ட ஊடகம் எது என்பது குறித்து ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் ரணில் விக்ரமசிங்க கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில், தான் சாட்சியமளித்ததை இன்றைய உரையின்போது ஜனாதிபதி ரணில் நினைவுகூர்ந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

# ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கைக்குழந்தையுடன் இலங்கையர்கள் போராட்டம்!



ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியர் அடிப்படை வசதிகள் செய்து தரவில்லை என குற்றச்சாட்டி அவரை உடனடியாக பணியிட மாற்றம் செய்ய கோரி செவ்வாய் இரவு (22) இலங்கை தமிழர்கள் தொடர்ந்து பல மணி நேரம் முகாம் நுழைவாயில் அமர்ந்து கைக்குழந்தைகளுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு முகாமிற்குள் சென்றனர்.

இலங்கையில் ஏற்பட்ட இறுதி கட்ட போரின் போது தங்கள் உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் பலரும் தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் தஞ்சம் அடைந்து கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மண்டபம் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ளனர்.

அதேபோல் இலங்கை தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் அடைக்கலம் தேடி தமிழகத்திற்கு அகதிகளாக வரும் சுமார் 200 பேர் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியர் சிவக்குமாரி என்பவர் பணியாற்றி வருகிறார். அவர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதாகவும், அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மறுப்பதாகவும், இலங்கைத் தமிழர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் வழங்கவும், தனி பதிவு வழங்கவும் லஞ்சம் கேட்பதாக மண்டபம் மறு வாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்த நிலையில் இது குறித்து இலங்கை தமிழர் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மற்றும் ராமநாதபுரம் ஆட்சியரிடம் பல முறை புகார் மனு அளித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் கும்மிடிப்பூண்டி முகாமில் இருந்து பிரசவத்திற்காக மண்டபம் முகாமில் உள்ள தனது அம்மா வீட்டிற்கு வந்த குடும்பத்தை கைக்குழந்தையுடன் முகாமை விட்டு வெளியே அனுப்பியதாகவும், மண்டபம் முகாமிற்குள் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நான்கு சக்கர வாகனத்தை முகாமிற்குள் கொண்டு செல்ல அனுமதி இல்லை என உத்தரவிட்டதாக சொல்லப்படுகிறது.

இதனை கண்டித்து உடனடியாக மண்டபம் முகாம் தனித்துணை ஆட்சியர் உடனடியாக மாற்ற கோரி நூற்றுகணக்கான இலங்கை தமிழர்கள் மண்டபம் முகாம் நுழைவு வாயிலின் தரையில் அமர்ந்து கைக்குழந்தையுடன் தர்ணா போராட்டம் நடத்தினர்.

இது குறித்து தகவல் அறிந்த ராமேஸ்வரம் துணை காவல் கண்காணிப்பாளர் தனஞ்ஜெயன் மற்றும் மாவட்ட நிர்வாகம் அதிகாரிகள் தர்ணாவில் ஈடுபட்ட இலங்கை தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் தனித்துணை ஆட்சியர் மாற்றி உத்தரவிட்டால் மட்டுமே தர்ணா போராட்டத்தை கைவிடுவதாக திட்டவட்டமாக தெரிவித்து தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.

இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்று தனித்துணை ஆட்சியர் மீது மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அளித்ததன் பெயரில் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் வாசலில் சுமார் நூற்றுக்கணக்கான இலங்கை தமிழர்கள் கைக்குழந்தைகளுடன் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் அப் பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

- மன்னார் நிருபர்



# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் வாய்மொழிமூல ஆங்கில பயிற்சி



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் தரம் 1 மற்றும் தரம் 2 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான மேற்படி பயிற்சி சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள சர்வோதய வளாகத்தில் சென்ற வாரம் 19,20 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் 34 பாடசாலைகளைச் சேர்ந்த 68 ஆசிரியர்களும் சேவைக்கால ஆலோசகர்கள் மற்றும் உதவிக்கல்விப்பணிப்பாளர்களும் பங்கேற்றிருந்தனர். இவர்களுக்கான பயிற்சிகள் RESC இன் ஓய்வுபெற்ற பயிற்சியாளர்களினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சியின்போது ஆசிரியர்களுக்கான துணைநூல்கள், பதிவேற்றம் செய்யப்பட்ட விரலிகள், 16 கருப்பொருட்களுடனான 130 பட அட்டைகள் கொண்ட பொதி மற்றும் காகிதாதிகள், எழுதுகோல்கள் வழங்கப்பட்டு செயற்பது சார் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை பற்றிய விளக்கங்கள் வளவாளர்களினால் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறான ஆங்கில மொழி மேம்பாட்டுத் திட்டங்களை வடக்கு, வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் செயற்படுத்து வரும் ஐக்கிய அமெரிக்காவை தளமாக கொண்ட அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் (IMHO-USA) ஐக்கிய இராட்சியத்தை தளமாக கொண்ட இரட்ணம் பவுண்டேசனும் (Ratnam Foundation-UK) இப்பயிற்சிக்கான முழுமையான நிதிப்பங்களிப்பையும் வழங்கியிருந்தன. இவ்வாறான பயிற்சிகள் மேற்படி மாகாணங்களில் 550 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இவ்வமைப்பால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா செய்திகள் India News

# நளினி உள்ளிட்ட 6 பேர் விடுதலைக்கு எதிராக காங்கிரசும் சீராய்வு மனு தாக்கல் செய்கிறது



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட நளினி உள்ளிட்ட 6 பேர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய காங்கிரஸ் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. நன்னடத்தை காரணமாக பேரறிவாளன் கடந்த மே மாதம் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். சட்டப்பிரிவு 142ன் கீழ், உச்சநீதிமன்றம் தனக்கு இருக்கும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுவித்தது.

பேரறிவாளன் விடுவிக்கப்பட்ட அதே முறையில், நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட 6 பேரும் கடந்த 11-ம் தேதி உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். 6 பேர் விடுதலையை எதிர்த்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் கடந்த வாரம் சீராய்வு மனு தாக்கல் செய்தது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியும் தனியாக சீராய்வு மனு தாக்கல் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மத்திய அரசு சீராய்வு மனு தாக்கல் செய்ததை அடுத்து காங்கிரஸ் கட்சியனரிடம் இருந்தே அக்கட்சிக்கு அழுத்தம் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்தே, சீராய்வு மனு தாக்கல் செய்ய அக்கட்சி திட்டமிட்டிருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அடுத்த சில நாட்களில் இந்த சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 6 பேரில் முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயகுமார் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவர்கள் திருச்சியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு திருச்சியில் சிறப்பாக நடைபெற்ற "குழந்தைகளைக் கொண்டாடுவோம்" விருது விழா




தமிழ்நாட்டில் திருச்சியில் இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன் இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம், திருச்சி வாசவி கிளப் எலைட் கப்புல்ஸ் இணைந்து நடத்திய குழந்தைகளைக் கொண்டாடுவோம் சிறார் இலக்கிய விருது மற்றும் சாதனை மாணவர் விருது வழங்கும் விழா 20-11-2022 அன்று திருச்சியியில் சிறப்பாக நடைபெற்றது இந்திய தேசிய நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் ப.நரசிம்மன் தலைமையில் நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பால சாகித்திய புரஸ்கர் விருதாளர் மு. முருகேஷ் மலேசியா செந்நூல் முத்தமிழ்ப்படிப்பகத் தலைவர் பெ. இராமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விருதுகள் வழங்கினர்.

நிகழ்வில் மு. முருகேஷ் தனது சிறப்புரையில் "நவீன கருவிகளின் வரவால் தற்போது குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதே அரிதாக உள்ளது. பெற்றோர் குழந்தைகளின் பேச்சைக்காது கொடுத்து கேட்க வேண்டும். குழந்தைகளுடன் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும். அப்போதுதான் குழந்தை உணர்வு நமக்கும் ஏற்படும்.

அதனால் பெரிய பிரச்சனைகளும் சாதாரணமாத் தெரியும். படிப்பு மட்டுமே வளர்ச்சிக்கான அறிகுறியல்ல. அதையும் தாண்டி உலகில் பல்வேறு விஷயங்கள் உள்ளன. அவற்றைத் தெரிந்துகொள்ள குழந்தை உள்ளம் வேண்டும் என்றார்.

தொடர்ந்து விழாவில் புதுச்சேரி பாரதி வாணர் சிவா, சிங்கப்பூர் டி.என். இமாஜான், ஆமீரகம் துரை ஆனந்த்குமார், ஈரோடு உமையவன், வந்தவாசி ஜு.. மைத்ரேயி, சேலம் சே. மதுரம் ராஜ்குமார், திருச்சி தீப் ஷிகா, ஆசியோருக்கு சிறார் இலக்கிய விருதுகளும், மலேசியா யோகன் சுகுமாறன், திருச்சி, ஸ்ருதிகா தீப்தி, சஞ்சீவ் ஜெயப்பிரகாஷ், ரமாதேவி, ஜெயுதீஷ், தன்யா சக்தி, ஹர்சினி, தர்ஷினி ஆகியோருக்கு சாதனை மாணவர் விருதுகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக உரத்தசிந்தனை திருச்சிக்கிளைத்தலைவர் பா. சேதுமாதவன் அனைவரையும் வரவேற்க நந்தவனம் பவுண்டேசன் பொருளாளர் பா. தென்றல் நிகழ்வை தொகுத்து வழங்க மருத்துவக்கலாநிதி வே.த. யோகநாதன் நன்றி கூறினார்.












Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை?

(கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம்-05)

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




கார்த்திகை மாதம் ஈழத்தமிழர்களுக்கு மிகவும் உணர்வுபூர்வமானது. சமூக சமய ரீதியாகவும் முக்கியத்துவம் உள்ளது.

ஈழத்தில் கார்த்திகை மாதம் மாவீரர்கள் தினத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. தமிழர்களுக்கு தனி தேசமே தீர்வு என்ற கொள்கையை அடிப்படையாக வைத்து ஆயுதக் குழுக்கள் அரசிற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்தன. இதன் முன்னணியில் இருந்து இறுதிவரை விடுதலைப் புலிகள் அமைப்பினர் மட்டுமே இருந்தார்கள். உள்நாட்டுப் போரின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் கார்த்திகை மாதம் மூன்றாம் வாரம் "மாவீரர் வாரம்" அனுசரிக்கப்படுகிறது.

அதிலும் முல்லைத்தீவு மாவட்ட மண்ணே போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள், கல்விச்சாலைகள் மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதல் ஆகிய அவலங்களுக்கு இன்றளவும் மௌனமான சாட்சியாக உள்ளது.

முல்லைத்தீவு எக்காலத்திற்கும் சிவந்த மண்ணாகவே இருக்கும். அந்தளவிற்கு ரத்தக்களறி இடம்பெற்ற பூமி அது.

இறுதிப்போர் வரை வலி சுமந்த முல்லைத்தீவு பூமியில் அந்த மாவட்ட மக்களின் அவலத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த இனத்தின் அவலத்திற்கும் சாட்சியாகவுள்ளது. அந்த மண்ணில் நாளை மறுதினம் (27) தமது உறவுகளை நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தி நினைவுச் சுடர் ஏற்றப்படுமா என உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் ஏங்குவதுபோல் முல்லை மக்களும் ஏங்கி நிற்கின்றனர்.

ஏனெனில் வடக்கு கிழக்கில் அதிக துயிலும் இல்லங்களைக் கொண்ட மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டமே காணப்படுகின்றது. முள்ளியவளை, விசுவமடு, வன்னிவிளாங்குளம், ஆலங்குளம் என்பன ஆரம்பக்காலம் முதல் பகிரங்கமாக இருந்தாலும் இறுதிப் போரின் போதும் இந்திய இராணுவத்தின் காலத்து துயிலுமில்லங்கள் எனவும் அதிக துயிலுமில்லங்கள் கொண்ட அந்த மாவட்டம் மாவீரர் நாளன்று விளக்கேற்ற காத்திருக்கின்ற நிலையில் இதிலும் என்ன அவலம் ஏற்படுமோ என்று கவலைப்படுகின்றனர்.



முல்லைத்தீவு மாவட்டமானது அவலங்கள் இடம்பெற்ற, இடம்பெறுகின்ற மாவட்டங்களில் ஒன்றாகவே இருப்பதனால் அவலங்கள் இடம்பெறும் மாவட்டமாகவே வைத்திருக்க விரும்புகின்றனரோ என்ற சந்தேகம் அந்த மாவட்டத்தவர்கள் மத்தியில் நிலவுகின்றது என்பதை இந்தத் தொடருக்காக அங்கு பயணித்த போது அவதானிக்க முடிந்தது.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஓர் விடிவை வேண்டி இந்த மண்ணில், அந்த மண்ணிற்கு தன்னையே அர்ப்பணித்து வீரவித்தாக விதைக்கப்பட்ட ஆயிரமாயிரம் வீரர்களின் வரிசையிலே எனது உடன் பிறந்த சகோதரனான லெப்ரிணன் கேணல் இனியவனையும் சுமந்து நிற்கும் மண்ணும் இதுதான் என்ற வகையில் எனக்கும் அதிக ஆர்வம் உண்டு.

தாய் நாட்டின் விடுதலைக்காக தம்மையே உயிர்க்கொடையாக அளித்த ஏராளமானவர்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த கடற்தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற பல சமர்களில் அவர்களின் பங்களிப்பு பாரியளவில் இருந்துள்ளது.

போரின் போது காக்கப்பட்ட பல பிரதேசங்களை நம்பி அதனை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த கடற்தொழிலாளர்கள் இன்று தமது தொழில் பிரதேசத்தை இழந்து தவிக்கின்றனர். யுத்த காலத்தில் போது வடக்கே இருந்த பொருளாதாரத் தடையின் மத்தியிலும் அந்த மக்களைக் காத்த ஜீவனோபாயமாக விவசாயமும் மீன்பிடியும் இருந்தன. விவசாய திணைக்களங்களின் நில அபகரிப்பில் அந்த தொழில் நலிவடைய கடற்றொழில் எவ்வாறு அழவடைகின்றது. அதற்கு காரணம் என்ன?

இதனால் இந்த மாவட்டத்தின் அவலங்களிற்கு காரணிகளாக இருப்பவை என்ன என்று முல்லைத்தீவைச் சேர்ந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் கடற்றொழில் சங்கங்களில் நீண்டகால அனுபவமும் கொண்டவருமான து.ரவிகரனை நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை என்று இந்தச் சிறப்புத் தொடருக்காக கேட்டேன்.

"முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் கிராமத்தில் 1983ஆம் ஆண்டுவரையில் 12 கரைவலைப்பாடுகள் இருந்தபோது ஒரேயொரு பாடுமட்டும் தென்னிலங்கையரிடம் இருந்தது. மற்றவை தமிழர்கள் கையில் இருந்தன. இன்று 12 பாடுகளுமே தென்னிலங்கையர்களிற்கு தாரைவார்க்கப்பட்டு விட்டது. முல்லைத்தீவு நகரின் மத்தியிலே உள்ள கோட்டபாய கடற்படை முகாமானது கரைவலைப்பாடுகளிற்கு வாகனம் மற்றும் தொழிலாளர் சென்று வந்த இடம். இரு அரிச்சலப்பாடுகள் இருந்த இடங்களுடன் 617 ஏக்கர் காணிகளையும் ஆக்கிரமித்தே இந்த கடற்படை முகாம் காணப்படுகின்றது".



காரணங்களைத் தொடர்ந்து அடுக்கிய அவர், "முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் பின்பு மட்டும் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர்களை மாற்றுமாறிகோரி 3 முறை போராடினோம். இதே சமயம் நாடு முழுவதும் தடை செய்யப்பட்ட தொழில் முறைமை முல்லைத்தீவில் தென்னிலங்கையர்கள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது" என்றார்.

கடற்றொழில் அமைச்சும் திணைக்களமும் பரிந்துரைக்கும் தென்னிலங்கையர்களிற்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்றும் நாயாற்றிலே அனுமதி இன்றி தென்னிலங்கையர்கள் 350 படகில் இன்றும் தொழில் புரிகின்றனர் என்றார் ரவிகரன்.

"கரைவலைப்பாடு என்பது மீனைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டும் நோக்கம் கொண்டதல்ல. அது அதிக தொழிலாளர்களிற்கு வேலை வாய்ப்பை வழங்க்கூடிய முறைமைகளில் ஒன்று. ஆனால் முல்லைத்தீவில் தென்னிலங்கையர்கள் மேற்கொள்ளும் கரைவலைப்பாடுகள் இன்றுவரை கையால் இழுக்காது உழவு இயந்திரங்கள் மூலமே இழுக்கின்றனர். அதற்கு எவருமே நடவடிக்கை எடுக்க முதுகெலும்பு இல்லை".

சுருக்கு வலைத் தொழிலை விஜயமுனி சொய்சா அமைச்சராக இருந்த காலத்தில் இந்த மாவட்டத்தில் தடை செய்திருந்தார். ஆனால் இப்போதுள்ள அமைச்சரின் காலத்தில் நாடு முழுவதும் தடை செய்யப்பட்டுள்ள தொழிலை கொக்குளாயில் 3 சங்கங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 75 கிலோ மீற்றர் நீளமான கடல் இருந்தாலும் அதிலும் சுமார் 20 கிலோ மீற்றர் நீளமான கடல்பகுதிகள் இந்த மாவட்ட தொழிலாளர்கள் செல்ல முடியாத பகுதியாகவே காணப்படுகின்றது. தடை செய்யப்பட்ட தொழிலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 600 வரையான படகுகள் ஈடுபடுகின்றன.

தமிழர்களின் பூர்வீக பூமியான கொக்குளாய் கடற்றொழில் பிரதேசம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. இங்கே வாழ்ந்த தமிழ் மக்கள் தற்போது புளியமுனை என்னும் கிராமத்தில் வாழ்கின்றனர்.

இவ்வாறெல்லாம், மீன்பிடி, விவசாயம், வீதி, வனப் பகுதிகளில் உள்ள அவலம் பட்டியலிடப்படும் முல்லைத்தீவு மாவட்டத்திலே படையினரின் பிரசன்னமே இல்லையா அல்லது அந்த அவலம் மறைக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு விட்டதோ என வாசகர்கள் எண்ணக் கூடும். அந்த தரவுகளை உறுதிப்படுத்துவதில் ஏற்பட்ட கால தாமதமே முதல் 04 பாகத்திற்குள் அதனைக் கொண்டு வர






முடியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திலே தற்போதும் படையினர் வசம் உள்ள நிலங்கள் தொடர்பாக மாவட்டச் செயலகம் உறுதிப்படுத்தும் 2022 ஆம் ஆண்டின் தகவலின்படி அரச காணிகளில் தனியாருக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கிய நிலத்தில் 143 பேருக்குச் சொந்தமான 1,569 ஏக்கர் நிலமும் தனியார் காணிகளில் 114 பேருக்குச் சொந்தமான 528 ஏக்கர் நிலமுமாக மொத்தம் 257 பேருக்குரிய 2096 ஏக்கர் நிலமே படையினர் வசம் உள்ளது. உண்மையில் படையினரிடம் இதைவிட பல மடங்கு உள்ளது. பல திணைக்களங்களிற்குச் சொந்தமான நிலங்களில் படையினர் நிலைகொண்டுள்ள அளவோ அல்லது மாற்று நிலம் வழங்கியதாகக் கூறப்படும் பகுதிகள் எவையும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

இப்பட்டியலில் கேப்பாபுலவு விமானப்படைத் தளம் தொடர்பான எந்த தகவலும் கிடையாது. இதேபோன்று அம்பகாமத்தில் இருக்கும் பல ஆயிரம் ஏக்கர் விமானப்படைத் தளம் தொடர்பான தகவலும் இல்லை. உண்மையான அளவுகளெனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் தற்போதும் 20,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அளவு நிலத்தில் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்பதே உண்மை. அதில் பல நிலங்கள் பாதுகாப்பு அமைச்சிற்கே கையளிக்கப்பட்டிருக்கலாம் என்பதனால் மாவட்டச் செயலகம் இவற்றை உள்ளடக்காது.

இந்த நிலைமையிலேயே 2022-11-19 அன்று வவுனியாவிற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவைகள், உடனடிப் பிரச்சினைகள் அடங்கிய பெரும் பட்டியலை மாவட்ட அதிகாரிகள் முன் வைத்தனர்.

இதில் மாவட்ட மக்களின் அபிவிருத்தி மற்றும் கால் நடைகளின் மேய்ச்சல்த்தரை பயன்பாட்டிற்காக வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ள நிலங்களில் 43,501 ஏக்கர் நிலத்தை மாவட்ட நிர்வாகத்திற்கு விடுவிக்குமாறு கோரப்பட்டது. அதேபோன்று "ஒதுக்கக்காடுகள்" என விரைவில் வர்த்தமானி அறிவிக்கவுள்ளதாகக் கூறப்படும் 17,260 ஹெக்டேயர் நிலத்தின் பெரும் பகுதி நிலம் தனியாருக்குச் சொந்தமான நிலம் என்பதனால் அந்த நிலத்தை வனவளத் திணைக்கள ஆளுகையில் செல்லாது தடுக்க வேண்டும். குறுந்தூர்மலைப் பகுதியில் விகாரை உள்ள தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு பகுதியாக 78 ஏக்கர் நிலம் உள்ளது.



அந்த 78 ஏக்கருடன் அருகில் இருக்கும் 300 ஏக்கர் நிலத்தையும் தொல்லியல்த் திணைக்களம் கேட்கின்றது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கடும் ஆட்சேபனையில் அப்பகுதி மக்களின் வாழ்விடம் வயல் உள்ளிட்ட நிலத்தையே தொல்லியல்த் திணைக்களம் கோருகின்றது, அதனால் இந்த நிலங்களை தொல்லியல்த் திணைக்களம் மக்களிடம் விடுவித்தே ஆக வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இதன்போது விகாரை அருகே பாவனைக்கு உரிய இடம் வேண்டும் அதனால் அந்த 300 ஏக்கரும் தமக்கு வேண்டும் என தொல்லியல்த் திணைக்களம் சார்பிலும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விட்ட நிலையில் "அங்கே எத்தனை விகாரை அமைக்கப் போகின்றீர்கள் தற்போதுள்ள 78 ஏக்கர் நிலமே போதுமானது இருப்பினும் ஒரு திசையில் அருகே வருவதனால் அந்த திசையில் 6 ஏக்ரை மட்டும் தொல்லியல்த் திணைக்களத்திற்கு வழங்குங்கள் எஞ்சிய நிலத்தை அதன் உரிமையாளர்களிடமே விடுவியுங்கள்" என ஜனாதிபதி பணிப்புரை விடுத்த அதே நேரம் எஞ்சிய நில விவகாரங்கள் எவற்றிற்குமே தீர்வு முன் வைக்கப்படவில்லை. வழமை போன்று குழு அமைத்து காலம் கடத்தும் செயல்பாடே முன்னெடுக்கப்பட்டது.

(அவலப் பட்டியல் தொடரும்)

# "அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்ட விவசாயக் காணிகளை விடுவித்தால் மட்டுமே உற்பத்தியைப் பெருக்கும் 6 திட்டம் வெற்றிபெறும்" என்கிறார் ரிஷாட் எம்.பி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

விவசாய உற்பத்திகளை பெருக்க வேண்டும் என்ற அரசின் திட்டத்திற்கு நேர்மாறாக, விவசாயக் காணிகள் அரச இயந்திரங்களால் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளமை கவலை தருகின்றது எனவும் அந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"எமது நாடு சுதந்திரமடைந்த பின்னர், ஆசியக் கண்டத்தில் ஜப்பானுக்கு அடுத்ததாக இரண்டாவது அந்தஸ்தை பெற்றிருந்த நாடாகும். ஆனால், இன்று இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் ஆட்சிக் கதிரையில் அமர வேண்டும் என்பதற்காக, மக்களை மடையர்களாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை நாசமடையச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் எடுத்த பிழையான முடிவுகளும், பிழையான செயற்பாடுகளுமே இதற்குக் காரணம். தங்களுடைய இருப்பை மாத்திரம் கருத்திற்கொண்ட அவர்கள், நாட்டைப் பற்றியும் நாட்டினது பொருளாதாரத்தை பற்றியும் சிந்திக்காத காரணத்தினால், நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டு, இன்று உலகிலே கரும்புள்ளியிட்டுப் பார்க்கப்படுகின்ற ஒரு நாடாக காணப்படுகின்றது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழலிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர், இந்த நாட்டின் ஜனாதிபதி மக்களால் விரட்டப்பட்ட வரலாறு காணப்படுகிறது. ஏன் இவ்வாறு நடந்தது? அதிகபட்ச மக்களுடைய ஆணையைப் பெற்ற ஜனாதிபதி ஒருவர், தனக்குரிய பதவிக்காலத்தைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல், நாட்டை மிகவும் மோசமான நிலைக்கு ஆளாக்கிவிட்டு, நாட்டை விட்டு ஓடுகின்ற அளவுக்கு அவருடைய செயல்பாடுகள் அமைந்திருந்தன.

அவரது முறையான திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளினால், வரியை இரவோடு இரவாக குறைத்ததன் மூலம் 2020ஆம் ஆண்டு 600, 700 பில்லியன் ரூபாய் வருமானம் குறைக்கப்பட்டது. அதேபோன்று, 40 வீதமான மக்கள் விவசாயத்தில் தங்கியிருக்கின்ற ஒரு விவசாய நாட்டிலே, இரவோடு இரவாக உர இறக்குமதி தடை செய்யப்பட்டு, சேதனப் பசளைகள் பயன்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. விவசாயிகள் மற்றும் நிபுணர்களுடைய ஆலோசனைகளைப் பெறாமல் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்பாடுகளினால், விவசாயிகள் மிகவும் மோசமான ஒரு பொருளாதார நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

அத்துடன், கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து, தங்களுக்கு ஆணை வழங்கிய நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதை விட, தங்களின் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக, இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, நாட்டை அதலபாதாளத்திற்கு கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளையே முன்னெடுத்திருந்தனர்.

இன்று நாட்டின் நிலைமையைப் பார்க்கின்றபோது மிகவும் வேதனையாக உள்ளது. புத்திஜீவிகள், வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றார்கள். வைத்தியசாலைகளிலே மருந்துகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். மருந்துகளை வெளியில் வாங்குவதற்குக் கூட கையில் பணம் இல்லை. வைத்தியசாலைகளிலே முறையான சிகிச்சைகள் இன்றி, மருந்துகள் இல்லாமல் நோயாளிகள் மரணித்துக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு இக்கட்டான நிலையில், வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி, வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்வது என்பது மிகப்பெரும் ஆபத்துகளை தோற்றுவிக்கும்.

அதேபோன்று, பாடசாலை கல்வி இலவச கல்வியாக இருந்தபோதிலும், மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை வாங்குவதில் பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இன்று காலை முன்னாள் இராணுவ வீரர் ஒருவர், "பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்வது இயலாத காரியமாக இருக்கின்றது" என்று என்னிடம் சொன்னார். முன்னர் ஒரு பிள்ளைக்கு 5000 ரூபா தேவை என்றால், இன்று 20000 ரூபா தேவைப்படுகின்றது. அப்பியாசக் கொப்பி போன்றவற்றின் விலை 300 மடங்காக அதிகரித்திருக்கின்றது. சாதாரண குடும்பத்தில் உள்ள மாணவர்களால், ஏழை மாணவர்களால் கல்வியை தொடர முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், பொருட்களின் விலையேற்றம் என்பது இன்று கேள்விக்குறியாக உள்ளது. கேட்பார் பார்ப்பார் அற்ற ஒரு நாடாக மாறியுள்ளது. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சராக நாங்கள் இருந்த காலத்தில் அதிகாரிகளை பயன்படுத்தி, மாவட்ட, கிராமிய மற்றும் பிரதேச ரீதியாக விலைகளை மதிப்பீடு செய்து, மிகக் கவனமாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றோம். முறைகேடான வர்த்தகர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்தோம். அப்போது விலைகளை தீர்மானிப்பது அரசாங்கமாக இருந்தது. ஆனால், இன்று எல்லாப் பொருட்களுடைய விலைகளையும் வியாபாரிகளே தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில், ஓமான் நாட்டிலே தொழிலுக்காக சென்றவர்கள் படும் துயரங்களை நாம் அவதானிக்கு கூடியதாக இருந்தது. இந்த விடயம் தொடர்பில், அடிக்கடி என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு முறையிடுகின்றார்கள். வேலை வாய்ப்புக்களுக்காக ஓமான் சென்ற பெண்கள் விபச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறார்கள். நாட்டுக்கு மீண்டும் வர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இது குறித்து கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கின்றது. நாட்டுக்கு அதிகளவிலான அந்நியச்செலாவணியை பெற்றுத்தருகின்ற அந்தத் தொழிலாளர்களின் விடயத்தில், குறித்த நாட்டிலே இருக்கின்ற தூதரகம் அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்கம் பாராமுகமாக இருக்காமல், அதற்கான பொறுப்பையேற்று, அவர்களை மீட்டு நாட்டுக்குக் அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், இதற்குப் பின்னால் இருக்கின்ற சக்திகளையும் அடையாளம் கண்டு, அவர்களுக்கு தண்டனை வழங்குவதன் ஊடாக, எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுக்க முடியும்.

அதேபோன்று, அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியிடம், அரசுடைமையாக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள் தொடர்பில் எடுத்துரைத்தோம். கடந்த இரண்டு வருடங்களாக இந்த உயர் சபையிலும் பல முறை இது குறித்து பேசி வருகின்றோம். அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அக்கரைப்பற்று, வட்டமடு உள்ளிட்ட இன்னோரன்ன பல பிரதேசங்களில், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டிருப்பதால், அவற்றை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்த காலத்தில், அவர்களுடைய விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாத காரணத்தினால், இன்று இவர்களுடைய சொந்தக் காணிகள் எல்லாம் அரச இயந்திரங்களுக்கு கீழ் கெசட் செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தமது தொழிலை செய்ய முடியாமல், மிகவும் மோசமான பொருளாதார நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது குறித்து, நாங்கள் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடமும் பாராளுமன்ற ஆலோசனை சபை கூட்டத்திலும் இன்னும் பல சந்தர்ப்பங்களிலும் பலமுறை சுட்டிக்காட்டியும் அதற்கான தீர்வுகள் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. "விவசாய உற்பத்திகளை பெருக்க வேண்டும்" என்ற அரசின் திட்டத்திற்கு நேர்மாறாக, விவசாயக் காணிகள் அரச இயந்திரங்களால் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளமை கவலை தருகின்றது. அந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று, தனியார் துறையில் வேலை செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசிய பொருட்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ள போதும், அவர்களுடைய சம்பளங்களில் எந்தவொரு மாற்றத்தையும் காண முடியவில்லை. அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுயதொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சுயதொழிலை மேற்கொள்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இவ்வாறான ஒரு மோசமான நிலையிலேயே நாங்கள் இருந்துகொண்டிருக்கின்றோம். எனவே, எதிர்காலத்தில் வருகின்ற ஆட்சியாளர்கள் இனவாத, மதவாதங்களுக்கு அப்பால், நாட்டின் நலனுக்கான திட்டங்களை பொருளாதார நிபுணர்களின் மூலம், கொள்கை ரீதியாக வகுத்துச் செயற்பட வேண்டும். ஆட்சிக்கதிரைகள் மாறுகின்ற பொழுதும் கொள்கைகளில் மாற்றம் செய்யாத ஒரு நல்ல நிலை ஏற்படவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்" என்று கூறினார்.



# மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உணவுப் பாதுகாப்பு பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார பிரச்சினை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கிராமப் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவுகளையும் கிராமிய புத்தெழுச்சி மையங்களாக அரசாங்கம் அறிவித்து அதன் செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமிய புத்தெழுச்சி குழுவின் கலந்துரையாடலானது வியாழக்கிழமை (24) மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இரு பிரிவுகளாக இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலானது மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ந.ரஞ்சனா ஏற்பாட்டில், மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலதாதன் தலைமையில் காலை 10 மணிக்கு கொல்லவிளாங்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், தொடர்ந்து 2.30 மணியளவில் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் அலுவலகத்திலும் இடம்பெற்றன.

குறித்த கலந்துரையாடலில் தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது, சத்துணவினை பெற்றுக் கொடுக்கும்வழிமுறைகள், வறுமையிலும் பட்டினியாலும் வாடும் குடும்பங்களை மீட்டெடுப்பது, சிறுவர்களின் போசாக்கு, பாடசாலை இடைவிலகலைத் தவிர்த்தல் முதலான முக்கியமாக பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் மாவட்ட உலகஉணவுத்திட்ட பொறுப்பதிகாரியுமான க.ஜெயபவாணி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர், பாண்டியன்குளம் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமிய புத்தெழுச்சி குழுவின் அங்கத்தவர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் 213 குடும்பங்கள் உணவு பாதுகாப்பு நெருக்கடியை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதே வேளை ஐந்து வயதுக்கு உற்பட்ட போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் 106 எனவும் வறுமைக்கோட்டிற்கு உற்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் 36 எனவும் தெரிவிக்கப்பட்டது.







# 'அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டந்தான்'

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

2009க்குப் பின்னரான 14 ஆவது மாவீரர் நாள் வருகிறது. கடந்த 13 ஆண்டுகளாக தாயகத்தில் மறைவாகவும், ரகசியமாகவும், வெளிப்படையாகவும் ஏதோ ஒருவிதத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நினைவு கூர்தல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அழுவது, துக்கிப்பது என்பவற்றிற்கும் அப்பால் ஆழமான பரிமாணங்களைக் கொண்டது. 2009க்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது, இழப்புக்கு நீதி கோரும் அரசியல்தான். ஈழப் போரில் இதுவரை கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டி முன்னெடுக்கப்படும் ஓர் அரசியல்தான். நீதிக்கான போராட்டத்தில் நினைவு நாட்கள் பின்வரும் முக்கியத்துவங்களை கொண்டிருக்கின்றன.

முதலாவதாக, அவை உளவியல் அர்த்தத்தில் அல்லது மருத்துவ அர்த்தத்தில் துக்கத்தைக் கொட்டித் தீர்க்கும் சந்தர்ப்பங்கள் ஆகும். குறிப்பாக அது கடந்த 13 ஆண்டுகளாக நாட்டில் வெளிப்படையாக நினைவுகூர முடியாத காலகட்டங்களில், அடக்கப்பட்ட துக்கத்தை வெளியே கொட்டும் சந்தர்ப்பங்களாக அந்நாட்கள் அமைகின்றன. இந்த வகையில் அது ஒரு உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்வாகும். அடக்கப்பட்ட துக்கமானது ஒரு கட்டத்தில் உடல் நலத்தையும் மனநலத்தையும் பாதிக்கும். வெளிப்படுத்தப்படாத துக்கம் வேறு விதங்களில் ஆவேசமாக வெளிப்படும். எனவே துக்கத்தை வெளிவழிய விடுவது என்பது உளவியல் அர்த்தத்தில் ஒரு ஆற்றுப்படுத்தல் செய்முறைதான். ஒரு கவுன்சிலிங்தான்.

இரண்டாவதாக, ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத்துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். நினைவு நாட்களில் தமிழ் மக்கள் திரளாக கூடுகின்றனர். தாயகத்திலும் புலம் பெயர்ந்த பரப்பிலும் அவை தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கூட்டிக் கட்டுகின்றன.

தேசியம் என்பது அதன் பிரயோக அர்த்தத்தில் திரளாக்கந்தான். நினைவு நாட்கள் தமிழ் மக்களை எல்லை கடந்து,பிரதேசம் கடந்து, மதம் கடந்து, வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, ஒரு திரள் ஆக்குகின்றன. அவை தமிழ் மக்களை ஒரு கூட்டமாக திரட்டிக் கட்டும் உணர்ச்சிகரமான நிகழ்வுகள்.

தமிழ் மக்கள் தமது கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் போது அது நீதிக்கான போராட்டத்தின் உந்துவிசையாக மாறும். எனவே அந்த அடிப்படையில் கூறின், நினைவு கூர்தல் என்பது, நீதிக்கான போராட்டத்திலிருந்து பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

மூன்றாவது, தாயகத்தைப் பொறுத்தவரை, நினைவு கூர்தலில் ஓர் எதிர்ப்பு இருக்கிறது. அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவு கூர்தலை சட்டப்படி தடுக்கின்றது. அல்லது மறைமுகமாக மிரட்டித் தடுக்கிறது. அல்லது நினைவுச் சின்னங்களை இடித்து அழிக்கின்றது. இவ்வாறு நினைவுச் சின்னங்களை இடிக்கின்ற, நினைவு கூர்தலைத் தடுக்கின்ற, ஒடுக்கும் அரசியலுக்கு எதிராக நினைவு கூர்தலுக்கான தமது உரிமையை "கூட்டுரிமையை பண்பாட்டு உரிமையை" தமிழ் மக்கள் நிலைநாட்டும் களங்களாக அவை காணப்படுகின்றன.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை வரலாறு என்பது ஒரு விதத்தில் நினைவுச் சின்னங்களை இடிக்கும் வரலாறும், அவ்வாறு இடிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை திரும்ப கட்டும் வரலாறுந்தான். கடந்த 13 ஆண்டுகளாக பல மாவீரர் துயிலும் இல்லங்கள் இலங்கை அரச படைகளின் படைத்தளங்களாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய மாவீரர் துயிலும் இல்லம் கோப்பாயில் காணப்பட்டது. அது இப்பொழுது அப்பகுதிக்கான படைத் தலைமையகமாகக் காணப்படுகிறது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மட்டுமல்ல, சிவகுமாரனின் சிலை, தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுச் சின்னம், திலீபனின் நினைவுச் சின்னம் போன்ற பல்வேறு நினைவுச் சின்னங்கள் காலத்துக்கு காலம் இடித்து அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் இடிக்க இடிக்க தமிழ் மக்கள் தொடர்ந்து புதிதாக கட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் கூறுவது போல, இடிக்கப்பட முடியாத, எரிக்கப்பட முடியாத, தடுக்க்கப்பட முடியாத நினைவு கூரும் வழிமுறைகளை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும். உதாரணமாக முள்ளிவாய்க்கால் நினைவு சின்னத்தை அழித்தாலும், அந்த மைதானத்தில் மக்கள் கூடுவதை தடுத்தாலும், அந்த தடைகளையும் மீறி தமிழ்மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தங்கள் வீடுகளில் தயாரித்து அருந்த முடியும். தமிழ் மக்கள் கஞ்சி குடிப்பதை யாரும் தடுக்க முடியாது. எல்லாக் குசினிகளிலும் கஞ்சி காய்ச்சப்படுவது என்பது முள்ளிவாய்க்காலில் ஒரு நிலத் துண்டில், ஒரு நினைவுச் சின்னத்தின் முன் கூடியிருந்து அழுவதை விடவும் ஆழமானது, பரவலானது.

எனவே நினைவுகளை அழிக்கும் ஓர் அரசியலுக்கு எதிராக, தமிழ் மக்கள் நினைவுகளைப் பேணும் ஓர் அரசியலை தொடர்ச்சியாக விடாது முன்னெடுத்து வருகிறார்கள். குறிப்பாக 2009க்குப் பின்வந்த உடனடுத்த ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நினைவு கூர்தலை பெருமெடுப்பில் முன்னெடுத்தது. இந்த விடயத்தில் குளறுபடிகளும் ஒற்றுமையின்மையும் உண்டு. தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மனோநிலையும் உண்டு. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல தாயகத்திலும் இப்பொழுது நினைவு நாட்களுக்கு உரிமை கோரி நினைவுச் சின்னங்களை தத்தெடுக்கும் ஓர் அரசியல் தலையெடுக்கப் பார்க்கிறது. அது ஒரு தமிழ் வியாதி. அதைத் தனியாக ஆராய வேண்டும். ஆனால் இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்படுவது என்னவென்றால், நினைவைக் கண்டு அல்லது ஒரு கூட்டு நினைவைக் கண்டு அஞ்சும் ஓர் அரசியலுக்கு எதிராக நினைவையே ஒரு போராடும் கருவியாக தமிழ் மக்கள் திருப்பிப் பிடிக்கிறார்கள் என்பதுதான். நினைவு கூர்தலுக்குள்ள மிக ஆழமான பரிமாணம் இது. அந்த அடிப்படையில் அரசாங்கம் அனுமதிக்காத எல்லா நினைவு நாட்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டக் களங்கள்தான்.

நாலாவதாக, நினைவு கூர்தல் எனப்படுவது நினைவுகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றது. இதன் மூலம் நினைவின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு போராட்டத்தின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியும் பேணப்படுகிறது. அதாவது தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தும் பொழுது தேசமும் தலைமுறைகள் தோறும் நிலைபேறு உடையதாக மாறுகிறது.

கனடாவில் வசிக்கும் கவிஞர் சேரன் கூறுவது போல முதலாவது தலைமுறை நிலத்தை இழந்தது. ஆனால் மொழியை நினைவுகளை வைத்திருக்கிறது. அந்தத் தலைமுறையிடம் காணப்படும் பிரிவேக்கந்தான் போராட்டத்தின் உந்து சக்திகளில் ஒன்று. ஆனால் இரண்டாவது தலைமுறையைப் பொறுத்தவரை நிலத்தைப் பற்றிய நினைவுகளும் குறைவு. மொழியும் முதன்மையிழக்கிறது. பண்பாடும் மாறுகின்றது. அப்படியென்றால் மூன்றாவது தலைமுறையின் நிலை? இவ்வாறு புலப்பெயர்ச்சியால் திரைந்து போகும் ஒரு தேசம் நினைவு கூர்தலின் போது ஓரளவுக்காவது தன் தொடர்ச்சியை பேணக் கூடியதாக இருக்கும்.

ஐந்தாவது, நினைவு கூர்தல் என்பது யாரை நினைவு கூர்கிறோமோ அந்த தியாகியின் அரசியலைத் தொடர்வது மட்டுமல்ல, அதைவிட ஆழமான பொருளில் அந்த தியாகியின் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பை, அந்த தியாகியில் தங்கியிருந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதும்தான். தாயகத்தில் எல்லா மாவீரர் குடும்பங்களும் அல்லது தியாகிகளின் குடும்பங்களும் மகிழ்ச்சியாக, நிறைவாக வாழ்கின்றன என்று கூற முடியாது. குடும்பத்தின் அச்சாணி போன்ற பிள்ளை தியாகியான காரணத்தால் குலைந்து போன குடும்பங்கள் உண்டு. அவற்றிற்கெல்லாம் உதவி வேண்டும். யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ் மக்கள் பொது வெளியில் விளக்குகளை ஏற்றுகிறார்களோ, அந்த தியாகிகளின் வீடுகளில் அடுப்பு எரிகிறதா என்றும் பார்க்க வேண்டும். யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ்மக்கள் பெருமைப்படுகிறார்களோ, அந்த தியாகியின் இளம் மனைவி கடந்த 13 ஆண்டுகளில் என்னவானாள் என்று தேட வேண்டும். எத்தனையோ பெண்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. பல இடங்களில் புதிய திருமணங்களும் கசந்து போய்விட்டன. இது தொடர்பாக யாரிடமும் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. ஒரு பிள்ளையை இழந்ததால் கைவிடப்பட்ட பெற்றோர் உண்டு; சகோதரர்கள் உண்டு; மனைவியர் உண்டு பிள்ளைகள் உண்டு. எனவே தியாகிகளைப் போற்றுவது என்பது தியாகிகளின் இழப்பினால் அவர்களுடைய குடும்பத்தில் விழுந்த வெற்றிடத்தை நிரப்புவதுந்தான். தமிழ் மக்கள் அதை நோக்கிச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்திப்பதற்குரிய சூழலை நினைவு நாட்கள் உருவாக்குகின்றன.

எனவே மேற்சொன்ன காரணங்களை தொகுத்துப் பார்த்தால் நினைவு கூர்தலின் பல்பரிமாணம் தெரியவரும். அது ஒரு கவுன்சிலிங். அது ஒரு அரசியற் செயற்பாடு. அது ஒரு போராட்டம். மிலன் குந்தேரா கூறியதுபோல "அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டந்தான்".

# வனப்புறு கனடா
## (இன்னிசை வெண்பா)



கனடா எனுமோர் கனிவுறு தேசம்.
இனவெறி இல்லா இனிப்புறு தேசம்
வனவளம் எங்கும் வளர்ந்து இருந்து
கனமாய் வருமதி கொண்டது.

பல்லின மக்களும் பரந்து வசிக்கிற
தொல்லை அகன்ற சுதந்திர பூமியே!
அல்லும் பகலுமே ஆலைகள் ஓடிட
செல்வம் கொழிக்கும் சிறப்பு.

வந்தோரை ஆதரிக்கும் வண்ணத் தலமது
நொந்தோர் பிணிகளை நீக்கிடும் தேசமாம்
சொந்தம் அறுந்தோர் சுகம்பெறு நாடிது
சந்தம் வருமெனச் சாற்று.

கல்வி வசதியும் காணி உரிமையும்
பல்வகை மக்களின் பண்புகள் காத்திடும்
பல்லோரும் போற்றும் பரப்பு நிலந்தனை
எல்லோரும் கூடியே ஏற்று.

அகதியாய் வந்த அனைத்து மனிதர்
சுகமாய் இருக்கச் சமத்துவம் ஈந்தே
தனத்துடன வாழ்விடம் தந்திடும் நாட்டை
வனப்புடன் வாழவே வாழ்த்து.

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**

**(416) 844-7453**

# கார்த்திகைப்பூச்சூடி கோலாகலமாக ஆரம்பமாகிய கார்த்திகை வாசம்







**த**மிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மலர்முற்றம் திடலில் "கார்த்திகை வாசம்" என்ற மலர்க்கண்காட்சியை ஆரம்பித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (18.11.2022) கார்த்திகைப்பூச்சூடி கோலாகலமாக இக்கண்காட்சி ஆரம்பமாகியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற தொடக்கவிழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்கள் கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற்பாட்டாளர் ம. இரேனியஸ் செல்வின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ச. ரவி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள். இதன்போது நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடாத்தும் இக்கண்காட்சி இம்மாதம் 27 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியில் மாணவர்களுக்கும் ஆலயங்களுக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

# எதிர்பார்ப்புகளை பொய்யாக்கிய ரணியில் வட மாகான விஜயம்

**- எமது செய்தியாளர் நடராசா லோகதயாளன்**





**ஜ**னாதிபதி ரணிலின் வவுனியா விஜயம் தமக்கு ஏதேனும் ஒரு வகையில் சிறியளவிலான விமோசனத்தையாவது தரும் என்ற எதிர்பார்ப்பு பொய்யாகிப் போனது என்று வட மாகாண தமிழ் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் போர் முடிந்து 13 ஆண்டுகளுக்கு மேலானாலும் தமிழ் மக்களின் துன்பங்களும் துயரங்களும் சற்றேனும் குறையவில்லை. எதிர்க்கட்சி தலைவராகவும் முன்னர் பிரதமராகவும் ரணில் விக்ரமசிங்க இருந்த போது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ராஜபக்சக்களே காரணம் என்று கூறினார்.

ஆனால் இப்போது அதே ராஜபக்சக்களின் ஆதரவுடன் "பின் வாசல்" வழியாக ஜனாதிபதியாகியுள்ள ரணில், பதவியேற்ற பிறகு முதல் முறையாக வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட போது எதிர்ப்பையே சந்தித்தார்.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விவாதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் பங்கேற்க அவர் சனிக்கிழமை (19) வருகை தந்தார்.

அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட செயலகத்திற்கு வெளியே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கருப்புக் கொடிகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் கெடுபிடிகளையும் மீறி அவர்களின் போராட்டம் இடம்பெற்றது.



பின்னர் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த மூன்று மாவட்டங்களில் நிலவும் பிரச்சனைகள், அதற்கான சாத்தியக்கூறுள்ள தீர்வுகள் ஆகியவை படக்காட்சிகள் மூலம் அவருக்கு விளக்கப்பட்டன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் வனத்துறை வசமுள்ள சுமார் 50,000 ஏக்கர் அளவிலான காணியை விடுவிக்க மாவட்ட நிர்வாகம் பரிந்துரைகளை முன்வைத்ததாக அறிய முடிகிறது. அதன் மூலம் மக்கள் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்ளவும், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளும் கிடைக்கும் என்றும் மாவட்ட நிர்வாகம் ஜனாதிபதிக்கு விளக்கியது.



மாவட்ட அதிகாரிகளின் விளக்கம் மற்றும் அதையடுத்த கலந்துரையாடல்களுக்குப் பின்னர் ஜனாதிபதி சில முடிவுகளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், தனது வழமையான பாணியில் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 08 குழுக்களை நியமிக்கவுள்ளதாக கூட்டத்திற்கு ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"வடக்கு மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவிப்பு".

ஆனால், எப்படியான தீர்வை அவர் எண்ணியுள்ளார், அது எப்போது அளிக்கப்படும் என்பதெல்லாம் அந்த அறிக்கையில் கூறப்படவில்லை.

இராணுவத்தால் பிடித்துவைக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படுவதில் தொடர்பில் அதிகாரிகள் மற்றும் அரச தரப்பிலிருந்து எந்த கருத்தும் இல்லை. ஜனாதிபதியும் அந்த விடயம் குறித்துப் பேசவில்லை.


வவுனியா விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவில் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் எப்போது முழுமையான பயன்பாட்டிற்கு வருமா-வராதா என்ற கேள்வி மேலோங்கியுள்ள நிலையில், அது குறித்து மௌனமாக இருந்த ரணில் விக்ரமசிங்க வவுனியா விமான நிலையத்தை தரம் உயர்த்துவது பற்றி பேசியுள்ளார்.

இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் "கூரை ஏறி கோழியைப் பிடிக்கத் தெரியாதவன் வானத்தில் ஏறி வைகுண்டம் போற கதை என்பதன் அர்த்தம் இதுதான் என்றார்".

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஏராளமான பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஏதாவது காத்திரமான தீர்வை அவர் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், காலத்தைக் கடத்தும் நோக்கில் குழுக்கள் அமைக்கப்படும் என்ற ஒரு பதிலை அளித்துவிட்டு அவர் சென்றுள்ளது மிகவும் ஏமாற்றமளிக்கிறது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# காசி தமிழ்ச் சங்கமம் | "பிரதமர் மோடியின் எண்ணத்தைக் கண்டு வியந்து மகிழ்கிறேன்" இளையராஜா



புண்ணிய பூமியான காசியில் தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியினை நடத்த வேண்டும் என்று தோன்றிய பிரதமர் மோடியின் எண்ணத்தினைக் கண்டு வியந்து மகிழ்கிறேன் என்று பிரபல இசையமைப்பாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜா தெரிவித்துள்ளார்.உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் உள்ள பனாரஸ் பல்கலையில் மத்திய அரசின் கலாசாரத்துறை சார்பில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தை ஒட்டி நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி அடுத்த மாதம் 16ஆம் தேதி வரை நடைபெறும். இந்த நிகழ்ச்சியினை பிரதமர் மோடி இன்று (சனிக்கிழமை) முறைப்படி தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில் பிரபல இசையமைப்பாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜா கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: "விழாவில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் தமிழ் பெருமக்களே.. காசிவாசிகளே, உலகம் வியக்க நடந்து கொண்டிருக்கும் இந்த காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்வுகளை காண வந்திருக்கும் திரளான பெருமக்களே உங்கள் அனைவருக்கும் எனது மகிழ்ச்சியான வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

காசி நகருக்கும் தமிழுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதை இங்கே விளக்கிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.பாரதியார் இங்கே இரண்டு வருடம் தங்கிப் படித்திருக்கிறார். இங்கு படித்து அவர் கற்றுக்கொண்ட விசயங்களை, இங்குள்ள புலவர் பெருமக்களின் விவாதங்களை நேரில் கண்டு, கேட்டு தெரிந்து கொண்ட பாரதியார், இந்தியாவில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத நேரத்தில், காசி நகர் புலவர்களின் விவாதங்களை கேட்க ஒரு கருவி செய்வோம் என்று பாடியிருக்கிறார்.

"கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம். வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்" என்று நதி நீர் இணைப்பு என்ற ஒன்று வரும் முன்பாகவே தனது 22 வயதில் அதைப்பற்றிப் பாடிவிட்டார்.அப்படியான பாரதியார் தனது ஒன்பது வயது முதல் பதினொருவயது வரை இரண்டு ஆண்டுகள் இங்கே இருந்து பயின்று அறிவு பெற்றிருக்கிறார் என்பது தமிழ் மக்களுக்கு மிகவும் அரிய விஷயமாகும். அதே போல் நீங்கள் அறியாத இதுவரை குறிப்பிடப்படாத விசயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

கபீர் "தோஹா"பாடினார் இரண்டு அடிகளில் பாடுவது அது. அங்கே தமிழில் திருவள்ளுவர் இரண்டே அடிகளில் திருக்குறள் என்ற நூலை இயற்றினார். "தோஹா"வில் எட்டு சீர்கள் அமைந்திருக்கின்றன. திருக்குறளில் ஏழு சீர்கள்தான். முதல் அடி நான்கு சீர், இரண்டாவது அடி மூன்று சீர். இதனையும் நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். கபீர்தாஸ் ஆன்மிகத்தைப் பற்றி பாட, திருவள்ளுவர் உலகப் பொதுமறையாக, அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று முப்பால்களாக 1330 பாடல்களாக அதனை எழுதினார்.இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்கிறேன்.

முத்துசாமி தீட்சிதர் கர்நாடக சங்கீதத்தின் மாமேதை என்று போற்றப்படும் மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் இங்கே வந்து கங்கை நதியில் மூழ்கி எழும்போது சரஸ்வதி தேவி அவர் கையில் வீணை ஒன்றை பரிசளித்திருக்கிறார் அந்த வீணை இன்னமும் இருக்கிறது. அருங்காட்சியகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.இப்படிபட்ட பெருமை மிகுந்த இந்த காசி நகரிலே தமிழ்ச் சங்கமத்தை நடத்த வேண்டும் என்ற எண்ணம் நமது பிரதமர் அவர்களுக்கு எப்படித் தோன்றியது என்பதை எண்ணி மிகவும் வியந்து வியந்து கொண்டிருக்கிறேன். (

இப்போது மோடி ஜி என அழைக்கும் இளையராஜா அவரிடம் ஆங்கிலத்தில் பேசுகிறார்.) மோடி ஜி என்னால் என்னுடைய உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்த முடியவில்லை. இந்த தமிழ்ச் சங்கமத்தை இந்த புண்ணிய பூமியான காசியிலே நடந்த வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது என்பதை எண்ணி நான் வியந்து மகிழ்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நீண்ட ஆயுளும், நிறைந்த புகழும் வழங்க வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்." இவ்வாறு இளையராஜா பேசினார்.

# ஒப்பந்த செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய முடியாது: மா.சுப்பிரமணியன் தகவல்



அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த முறையில் பணிபுரியும் செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய முடியாது என மாநில மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக் கோட்டையில் இன்று (நவ.24) ஆட்சியர் கவிதா ராமு தலைமையில், பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் முன்னிலையில் மருத்துவக் கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில், ஆதனக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.48 லட்சத்தில் கட்டப்பட்ட புறநோயாளிகள் பிரிவு, கொடும்பாளூரில் ரூ.25 லட்சத்தில் கட்டப்பட்ட செவிலியர் குடியிருப்பு மற்றும் கணபதிபுரம், பெருங்களூர், ஆட்டாங்குடி, வாராப்பூர், செட்டியாபட்டி, செம்பட்டிவிடுதி, தேன்கனியூர் ஆகிய இடங்களில் தலா ரூ.20 லட்சத்தில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையக் கட்டிடத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "புதுக்கோட்டையில் வட்டார அரசு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படும். அதற்கான அரசாணை இன்று வெளியிடப்படும். தேவையான கட்டிட வசதிகள், மருத்துவ உபகரணங்கள் இருப்பதால் தேவையான பணியாளர்கள் ஒரு மாதத்துக்குள் நியமிக்கப்படுவர். தமிழகத்தில் பிரசவத்தின்போது அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பதை தடுப்பதற்காக அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் யோகா, மூச்சுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் வருங்காலங்களில் குழந்தை பிறப்புக்கான அறுவைச் சிகிச்சை குறையும் என எதிர்பார்க்கிறோம்.கால்பந்து வீராங்கனை பிரியா மரணத்தில் கவனக்குறைவாக சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்வது குறித்து காவல் துறை முடிவு எடுக்கும். இதற்கிடையில், மருத்துவர்களின் தவறான சிகிச்சையை மறைப்பதாக அரசு மீது முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சுமத்துவது தவறானது.மருத்துவ தேர்வு வாரியம் மூலம் தேர்வான செவிலியர்களை பணி நிரந்தரம், பணி வரன்முறை செய்யும் பணி படிப்படியாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஒப்பந்த முறை மற்றும் அவுட் சோர்சிங் முறையில் சேர்ந்துள்ள செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய முடியாது" என்றார்.


தொடர்ந்து அவர் பேசும்போது, "புதுக்கோட்டை காமராஜபுரத்தில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும். அறந்தாங்கி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை மேம்படுத்த ரூ.46 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.இந்த விழாவில் எம்எல்ஏகள் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னதுரை (கந்தர்வக்கோட்டை), மாவட்ட சுகாதார துணை இயக்குநர் ராம்கணேஷ், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கந்தர்வக்கோட்டை தொகுதி எம்.எல்.ஏ. எம்.சின்னதுரை பேசியபோது, "புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து அவசர சிகிச்சை எனும் பெயரில் தஞ்சாவூருக்கு நோயாளிகளை அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. இதைத் தடுத்து, இங்குள்ள மருத்துவமனையில் கூடுதல் கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றித்தர வேண்டும்.மேலும், கந்தர்வக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, கீரனூர் ஆகிய அரசு மருத்துவமனை மற்றும் கிராமப்புறங்களில் செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் இல்லை. தொடர்ந்து 10 ஆண்டுகளாக இந்தத் தொகுதி புறக்கணிக்கப்பட்டு வருகிறது. மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவதோடு, தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கந்தர்வக்கோட்டையில் தாய், சேய் சிறப்பு சிகிச்சை வசதியை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

# தனுஷ்கோடிக்கு 10 பேர் அகதிகளாக வருகை: இதுவரை வந்தவர்களின் எண்ணிக்கை 209 ஆனது

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த நாட்டிலிருந்து 10 பேர் நேற்று தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்தனர். இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் முதல் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால், வாழ்வாதாரம் தேடி கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து தமிழர்கள் 199 பேர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை வவுனியா மாவட்டம் கணேசபுரத்தைச் சேர்ந்த உதயசூரியன் (47) அவரது மனைவி பரிமளாதேவி (44) மகன் தீமோத் (23) டிலாக்சன் (17) ஜோயர் (12), வவுனியா மாவட்டம் பூவரங்குளத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி ( 44), மகன் விபூஷன் (24) சுதர்ஷா (04), வவுனியா மாவட்டம் கணேசபுரத்தைச் சேர்ந்த ரீகன் (17) மற்றும்



யாழ்ப்பாணம் கச்சேரி பகுதியைச் சேர்ந்த நிதர்ஷன் (20) ஆகிய 10 பேர் தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் இரவு படகில் புறப்பட்டு நேற்று அதிகாலை தனுஷ்கோடி கடற்கரையில் வந்து இறங்கினர்.

தகவலறிந்து தனுஷ்கோடி சென்ற மெரைன் போலீஸார், அகதிகளாக வந்த 10 இலங்கைத் தமிழர்களை மண்டபம் மெரைன் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் இலங்கையில் இருந்து படகில் வருவதற்கு கட்டணமாக இலங்கை பணம் ரூ.1.65 லட்சம் மற்றும் ஒரு பவுன் தங்க மோதிரத்தை படகோட்டியிடம் கொடுத்ததாகத் தெரிவித்தனர். விசாரணைக்குப் பின்னர் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு இதுவரை வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 209 ஆக உயர்ந்துள்ளது.

# இலங்கை வரலாறு மற்றும் சமூகத்தில் வேடர்கள் பற்றிய மறுவாய்வு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

- பேராசிரியர் ஆர் எஸ் பேரின்பநாயகம்

**This methodological approach allows Obeyesekere to explore a variety of issues: the territory inhabited by the Vaddas, the religious life of the the Vaddas and the rituals they practiced, their connection to the cult of Pattini and to the temple to Murugan/Skanda at Kataragama and its relationship to that of the Sinhalas, on Buddhism and its arrival in Sri Lanka and its impact on Sri Lanka, the frequent connection to Southern Indian communities, the careers of various monarchs,the role of the Vaddas in various local conflicts etc. Insofar as this is the case, it is impossible to deal with them all here and I will deal with the overarching theme of the work which is the story of the Vaddas. I will discuss Obeyesekere 's work focusing on two themes: Who were the Väddas? And what happened to them?**

இந்த முறையான அணுகுமுறை ஒபேசேகரை பல்வேறு பிரச்சினைகளை ஆராய அனுமதிக்கிறது: வேடர்கள் வசிக்கும் பகுதி, வேடர்களின் மத வாழ்க்கை மற்றும் அவர்கள் கடைப்பிடித்த சடங்குகள், பத்தினி வழிபாடு மற்றும் கதிர்காமத்தில் உள்ள முருகன்/ஸ்கந்த ஆலயம் மற்றும் சிங்களவர்களுடனான அதன் உறவு, பௌத்தம் மற்றும் இலங்கையில் அதன் தாக்கம், தென்னிந்திய சமூகங்களுடனான அடிக்கடி தொடர்பு, பல்வேறு மன்னர்களின் தொழில்கள், பல்வேறு உள்ளூர் மோதல்களில் வேடர்களின் பங்கு போன்றவை. இதுதான் வழக்கு, அவற்றையெல்லாம் இங்கே கையாள்வது சாத்தியமில்லை. மேலும் வேடர்களின் கதையான படைப்பின் மேலோட்டமான கருப்பொருளைக் கையாள்வேன். இரண்டு கருப்பொருள்களை மையமாக வைத்து ஒபேசேகரின் பணியை நான் விவாதிக்கிறேன்: வேடர்கள் யார்? மேலும் அவர்களுக்கு என்ன நடந்தது?

**Who were the Väddas?** வேடர்கள் யார்?

**One answer to the first question was given by two early anthropologists the Seligmans. Obeyesekere notes:**

முதல் கேள்விக்கு ஒரு பதிலை இரண்டு ஆரம்பகால மானுடவியலாளர்களான செலிக்மான்ஸ் அளித்தனர்.ஓபிசேகரே குறிப்பிடுகிறார்:

**C.G. and Brenda Z. Seligmann dealing with one of the world's most "primitive" hunting and gathering groups, the Väddas of Sri Lanka, published in 1911 their work entitled The Väddas. It was one of the first systematic forays into ethnographic fieldwork.**

சி.ஜி. மற்றும் பிரெண்டா இசட். செலிக்மான், உலகின் மிகவும் ”பழமையான” வேட்டையாடும் மற்றும் சேகரிக்கும் குழுக்களில் ஒன்றான இலங்கையின் வேடர்கள், 1911 இல் அவர்களின் படைப்பை த வேடர்கள் என்ற தலைப்பில் வெளியிட்டார். இனவரைவியல் களப்பணிக்கான முதல் முறையான முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

**The Väddas, they imagined to be a wild man of the woods, clad only in a scanty loin cloth, carrying his bow and arrows on which he depended for his subsistence, simple and untrained, indeed, little removed from the very animals he hunted. Nowadays many middle-class Sri Lankans have accepted a version of this image assisted by grotesque caricatures of the Vädda represented in the local media.**

வேடர்கள் காட்டில் வாழும் ஒரு காட்டு மனிதன் எனக் கற்பனை செய்தார்கள். அவர்கள் ஒரு சிறிய இடுப்புத் துணி மட்டுமே உடுத்திக் கொண்டு தனது வாழ்வாதாரத்துக்கு வில் மற்றும் அம்புகளைச் சுமந்து கொண்டு வேட்டையாடினார்கள். அவர்கள் எளியவர்கள், பயிற்சி இல்லாதவர்கள் எனச் சொல்லப்பட்டது. உண்மையில், அவர்கள் தாங்கள் வேட்டையாடிய விலங்குகள் போலவே கருதப்பட்டார்கள். தற்காலத்தில் பல நடுத்தர வர்க்க இலங்கையர்கள் உள்ளூர் ஊடகங்களில் குறிப்பிடப்படும் வேடர்களின் கோரமான கேலிச்சித்திரங்களின் உதவியுடன் இந்தப் பிம்பத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**Obeyesekere challenges these observations. In the opening chapter Obeyesekere shows the role the Väddas played in the Kandyan kingdom. I will give a good example of this. Seeking support for a military campaign the King of Kandy tries to recruit some who can fight his battles. Obeyesekere reproduces one report:**

இந்த அவதானிப்புகளுக்கு ஒபசேகரா சவால் விடுகிறார். தொடக்க அத்தியாயத்தில் ஒபயசேகரா கண்டிய இராச்சியத்தில் வேடர்கள் ஆற்றிய பங்கை முதல் அத்தியாயத்தில் குறிப்பிடுகிறார். இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டைத் தருகிறேன். ஒரு இராணுவ முன்னெடுப்புக்கு ஆதரவைத் தேடி, கண்டி மன்னர் தனது போர்களில் ஈடுபடக்கூடிய சிலரை நியமிக்க முயற்சிக்கிறார். அதற்குச் சான்றாக ஒபயசேகரா ஓபேசேகரே ஒரு அறிக்கையை மீளப் பதிவு செய்கிறார்:

**In order to seek help from his own region of Matale, he summoned Niyarepola Alahakon Mohottala. He asked him to name the denizens (that is, men and animals) of Matale and the reply was, Your worship (hamudurvane) there are only three [noble] houses in the rata of Matale" and when the king asked what these houses were, "Your worship [hamuduruvane) there is Kulatunga Mudiyanse of Udupihilla, Vanigasekere Mudiyanse of Aluvihara, Candrasekere Mudiyanse of Dumbukola , [and then also] Gamage Vädda and Hampat Vädda of Hulangamuv. And when the king asked who are the people in the lands beyond – (epita rata), your worship, on the other side of the steep waters (hela-kandura) of Biridevela, there is Kannila Vädda in control of (hirakara hiṭiya) Kanangamuva. Herat Banda in control of Nikakotuva, and Maha Tampala Vädda at Palapatvala, Domba Vädda at Dombavela-gama, Valli Vädda at Vallivela, Mahakavudalla Vädda at Kavudupalalla, Naiyiran Vädda [some texts Nayida] at Narangamuva, Imiya Vädda at Nalanda, Dippitiya Mahage [a female] controlling an area of nine gavuvas(leagues) in the district known as Nagapattalama, and Makara Vädda and Konduruva employed in the watch of the boundary (kadaima), Mahakanda Vädda controlling Kandapalla [today's Kandapalla korale], Hempiti Mahage controlling Galevela, Baju Mahage controlling the Udasiya Pattuva of Udugoda Korale, Minimutu Mahage controlling the [same] Pallesiya Pattuva, Devakirti Mahage controlling Melpitiya**

தனது சொந்த பிரதேசமான மாத்தளையில் இருந்து உதவி பெறுவதற்காக, அவர் நியாரெபொல அழககோன் மொஹொத்தலாவை வரவழைத்தார். மாத்தளையின் குடிமக்களுக்கு (அதாவது மனிதர்கள் மற்றும் விலங்குகள்) பெயரைச் சொல்லும்படி அவர் அவரிடம் கேட்டார், அதற்கு பதிலளித்தார், உங்கள் வழிபாடு (ஹமுதுர்வானே) மாத்தளை இரதத்தில் மூன்று ஜஉன்னதமானஸ வீடுகள் மட்டுமே உள்ளன" என்று அரசன் கேட்டபோது இந்த வீடுகள் என்ன? "சங்கைக்குரியவரே ஜஹாமுதுருவனே) உடுப்பிஹில்ல குலதுங்க முடியன்சே, அலுவிஹார வணிகசேகர முடியன்சே, தும்புகொல சந்திரசேகர முதியான்சே, ஜஅதன்பின்ஸ கமகே வட்டம் மற்றும் ஹலங்கமுவின் ஹம்பட் வட்டா உள்ளது. அதற்கு அப்பால் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் யார் என்று மன்னன் கேட்டபோது - (எப்பிட்ட ரட்ட), சங்கைக்குரியவரே, பிரிதேவெலவின் செங்குத்தான நீரின் (ஹெலகந்துரா) மறுபுறத்தில், (ஹிரகர ஹிடியா) கனங்காமுவாவின் கட்டுப்பாட்டில் கன்னிலா வட்டம் உள்ளது. நிககொடுவாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹேரத் பண்டா, மற்றும் பலபட்வலவில் மஹா தம்பலா வட்டம், தொம்பவெல-கமவில் டோம்ப வட்டம், வள்ளிவேலவில் வள்ளி வட்டம், கவுடுபலல்லவில் மஹாகவுடல்ல வட்டம், நயீரன் வாப்பிட ஜசில நூல்கள் நயீடா வட்டம்) நாகப்பட்டலமா மாவட்டத்தில் ஒன்பது கவுவாக்கள் (லீக்குகள்- **leagues**)) பகுதியைக் கட்டுப்படுத்தும் பெண், மற்றும் மகர வட்டம் மற்றும் கோந்துருவ எல்லைக் கண்காணிப்பில் (கடைமா), மஹாகந்த வட்டம் கந்தபள்ளை ஜஇன்றைய கந்தபள்ள கோரலேஸ, ஹெம்பிடி மஹாகே, பாஜு கலேவெலகே ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. உடுகொட கோரளையின் உதாசிய பட்டுவைக் கட்டுப்படுத்தும் மஹகே, மினிமுத்து மஹாகே ஜஅதேஸ பல்லேசிய பட்டுவைக் கட்டுப்படுத்துகிறார், தேவகீர்த்தி மகாகே மேல்பிட்டியைக் கட்டுப்படுத்துகிறார்.

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

SECOND CAREER GRANT



JRS College of Business and Health Care Inc.

What is it?

- Better Jobs Ontario provides eligible applicants with skills training for in-demand jobs & financial support

Get A Grant Up To $28,000

- Grand includes: tuition fee, books, other instructional costs, transportation, basic living allowance

Programs we Offer

- Personal Support Worker
- Early Childcare Assistant
- Accounting & Payroll Administration
- Health Office Administration

15+ programs available with flexible start dates

For More Info Call Us:
(416) 292 2455

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்: 44 பேர் உயிரிழப்பு

உலக செய்திகள்
World News



இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் காரணமாக 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவலில், "இந்தோனேசியாவின் மத்திய ஜாவா தீவில் உள்ள சியான்ஜுர் என்ற பகுதியில் 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 5.6 ஆக பதிவாகி இருக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக 10-க்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கி இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக இஸ்லாமிய உண்டு உறைவிட பள்ளி ஒன்றும், மருத்துவமனை ஒன்றும் சேதமடைந்துள்ளன. நிலநடுக்கம் ஏற்பட்டபோது மிகப் பெரிய அதிர்வை உணர்ந்ததாகவும், இதை அடுத்து கட்டடங்களுக்குள் இருந்தவர்கள் அவசர அவசரமாக வெளியே வந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

27 கோடி மக்கள் வாழும் இந்தோனேசியாவில் அதன் நிலவியல் அமைப்பு காரணமாக அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். இதேபோல், இங்கு எரிமலை வெடிப்பும், சுனாமி பாதிப்பும்கூட நிகழ்கின்றன.

தலைநகர் ஜகார்த்தாவை ஒட்டிய பகுதிகளில் நிலநடுக்கம் அரிதாகவே ஏற்படும் என்றபோதிலும், இம்முறை ஜகார்த்தாவை ஒட்டிய பகுதியில்தான் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. ஜகார்த்தாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் நிகழ்ந்த நிலநடுக்கம் காரணமாக 25 பேர் உயிரிழந்தனர். 460-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகி இருந்தது. இதேபோல், கடந்த ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததும், 6,500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.



எல்லாவற்றுக்கும் மேலாக, 2004 டிசம்பரில் சுமத்ரா தீவையொட்டி கடலுக்குள் ஏற்பட்ட பூகம்பத்தால் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, தமிழ்நாடு உள்ளிட்ட கடலோரங்கள் "ஆழிப்பேரலை" என்னும் சுனாமியால் துவம்சம் செய்யப்பட்டு, 3 லட்சம் பேர் வரை உயிரிழந்தனர். இதில், இந்தோனேசியாவில் மட்டும் 2 லட்சம் பேர் பலியானதும், அங்கு ஒரு மாகாணமே துடைத்து எறியப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# வட கொரியாவின் அடுத்த தலைமுறை அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில் கிம் ஜொங் உன்னின் மகள் பொதுவெளியில் தோன்றினார்



வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன்னுக்கு மகள் ஒருவர் இருப்பது பற்றி நீண்ட காலமாக ஊகங்கள் வெளியான நிலையில் அவர் தனது மகளுடன் முதல் முறை பொதுவெளியில் தோன்றியுள்ளார்.

கிம் சு ஏ என்ற பெயர் கொண்டவர் என்று நம்பப்படும் அவரது மகள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை தனது தந்தையுடன் இணைந்து பார்வையிடும் படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஏவுகணை சோதனையின்போது தந்தையும் மகளும் கைகோர்த்த வண்ணம் தோன்றுகின்றனர். இந்த ஏவுகணைக்கு அமெரிக்கா கண்டனத்தை வெளியிட்டுள்ளது. உலகின் மிகவும் ரகசியங்கள் பொதிந்த நாட்டின் தலைவராக கிம் இருப்பதோடு, அவரது தனிப்பட்ட வாழ்வு பற்றி வெளி உலகுக்கு அதிகம் தெரியாதுள்ளது.


கிம்மின் மகளுக்கு 12, 13 வயது இருக்கக் கூடும் என்று நம்பப்படுவதோடு வட கொரியாவின் அடுத்த தலைமுறை அதிகார வரிசையை உறுதி செய்வதாக இது உள்ளது.



# அறிஞர் அவ்வை நடராசன் அவர்களின் மறைவு தமிழகத்திற்கு மட்டுமல்ல, தமிழ்கூறு ம் நல்லுலகிற்கும் பேரிழப்பாகும்.

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், இலங்கை**

"நில்லாவுலகில் நில்லோம் செல்வோமே" என்று மணிவாசகப் பெருந்தகை கூறிய கூற்று அனைத்து மக்களுக்கும் உரிய கூற்றாகும். செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் வாழ்வும் வளமும் கொடுத்த நாயன்மார்களில் நான்கு நாயன்மார்களை நாம் அடிக்கடி நினைவு கொள்கிறோம். "திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே வென்று ஏற அசைவில் செழுந்தமிழ் வழக்கே துறைவெல்ல தோண்டியவர் தோணிபுரத் தோன்றலார்" ஞானசம்பந்தர் என்று தமிழால் ஞாலமளந்த ஞான சம்பந்தரை சேக்கிழார் வாழ்த்துகிறார். ஆனால் இதே ஞானசம்பந்தர் அவர்கள் வாழ்ந்தது 16 ஆண்டுகள் தாம். அடுத்து மண்மேல் "நம்மை செந்தமிழ் பாடுக" என்று இறைவனைால் கட்டளையிடப்பட்ட நம்பி ஆரூரனும் வாழ்ந்தது 18 ஆண்டுகள்தாம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகத்தைத் தந்த மணிவாசகர் நாலெட்டில் தெய்வீகம் அடைந்தார். விதிவிலக்காக "என்கடன் பணி செய்து கிடப்பதே தன் கடன் அடியேனைத தாங்குதல் என்று பாடிய நாவுக்கரசர் 81 ஆண்டுகள் வாழ்ந்தார். புவிக்குப் புதுவழி காட்டிய புத்தரும் 80 ஆண்டுகள் வாழ்ந்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்த முனைவர் ஜி.யு.போப் அவர்களின் வாழ்க்கையும் அகவை எண்பதுகளில் நிறைவுற்றது. உலகியல் வாழ்க்கைக்கு அமைய எங்கள் அவ்வை நடராஜன் அவர்கள் நிலைத்த புகழ் நாட்டி நில்லாவுலகில் தனது 85ஆவது அகவையில் உயிர்நீத்தார்.



அவ்வை நடராசன் அவர்கள், தமிழ் இலக்கிய உலகிற்கு பெரும்பணியாற்றிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெரும் பணியாற்றிய அவ்வை துரைசாமி அவர்களின் மகனாவார். தந்தைக்கு ஏற்ற வகையில் வாழையடி வாழையாக தமிழுக்கு வளம் சேர்த்தவர் நம் அவ்வை நடராசன் அவர்கள். அவர் பல பட்டங்கள் பெற்றதோடு, தமிழகத்தின் செய்தித் துறையில் தலைவராக விளங்கியவர். அக்காலகட்டத்தில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஈழச் சிக்கல் எப்படி இருக்கிறதென்பதை அடிக்கடி கேட்டு தம் இன உணர்வை வெளிக்காட்டியவர். தன் அலுவலகத்தில் மட்டுமல்ல, பல கூட்டங்களில் அவர் வெல்லும் சொல் படைத்த நிலையில் அவரது சொற்பொழிவுகள் பலவற்றைக் கேட்டு உவகை உற்றவன் நான்.

மறைமலை அடிகள் (Father of Tamil Renaissance) என்று நான் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் (தமிழக மறுமலர்ச்சியின் தந்தை மறைமலை அடிகள்) சிறப்பைப் பற்றி எனக்கு நேரில் கூறியதோடு, பல கூட்டங்களிலும் அவர் அதன் சிறப்பினைக் கூறினார். நூலோ சிறிதுளூ அதன் உள்ளடக்கமோ பெரிது. அதுவும் ஆங்கிலத்தில் வெளிவந்திருப்பது தமிழினத்தின் தேவையை நிறைவு செய்கிறதென்று அவர் கூறிய கூற்று எம் நெஞ்சைத் தொடும் கூற்றாகும். நான் எழுதிய இந்நூல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடாத்துகின்ற மறைமலை அடிகள் நூலகத்திலும் இடம்பெற்றுள்ளதை நான் இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

1968ல் அறிஞர் அண்ணா முதலமைச்சராக விளங்கிய காலத்தில் அவருக்கும் இந்நூலை நான் வழங்கினேன். அவர் இந்நூலைப் படித்தபடி, பேராசிரியர் இலக்குவனார் எழுதிய தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் விழாவில் தன் தலையை அசைத்து இந்நூலுக்கு வாழ்த்துக் கூறியதை நான் பெருமிதத்தோடு கூற விழைகிறேன்.

அவ்வை நடராசன் அவர்கள் காட்சிக்கு எளியவர். தமிழகத்தின் செய்தித் துறையில் அவராற்றிய பணி தமிழ் மக்கள் பெருமை கொள்ளத் தக்கது. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசியராக விளங்கிய எனது மருமகன் முனைவர் அரசேந்திரன் அவர்களுக்கும் அவ்வை நடராசன் அவர்களுக்கும் நெருங்கிய நட்பும் உறவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது. எனது மகள் யாழினிக்கும் அரசேந்திரனுக்கும் தமிழ் மணம் கமழும் தமிழ்த் திருமணம் கலைஞர் தலைமையில் 80களில் நடைபெற்றபோது, அவ்வை நடராசன் அவர்கள் நிகழ்த்திய உரை அவையோரை ஆட்கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. இந்நிகழ்வில் பேராசிரியர் அன்பழகனும் கலந்துகொண்டிருந்தார்.

அவ்வை நடராசன் அவர்களுக்கும் எனக்குமிடையில் பற்றும் பாசமும் நெருக்கமாய் இருந்ததனால் அடிக்கடி என்னை தன் இல்லத்திற்று அழைத்து, அவரும் அவர் குடும்பமும் செல்விருந்தோம்பி, வருவிருந்து காத்திருந்த நிலையை எண்ணுகின்றபோது, நெஞ்சம் உருகுகின்றது.

அவ்வை நடராசன் அவர்கள் எழுதிய நூல்களை விஞ்சுகின்ற அளவுக்கு அவரது சொற்பொழிவுகள், பட்டிமன்றங்களுக்குத் தலைமை தாங்கிய நிகழ்ச்சிகள் அனைவரதும் உள்ளத்தை ஆட்கொண்டது. அவருடைய பிறிதோர் சொல்லை வெல்லும் சொற்கள் வள்ளுவன் கூற்றுக்கமைய கேட்போர் பிணிக்கும் வகையில் கேளாதாரும் வேட்பம் உறும் வகையில் அமைந்திருந்தது இங்கு வலியுறுத்தத் தக்கது. அவருடைய அறிவு ஆற்றலை உணர்ந்த நிலையில் தமிழக அரசு அவரை தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமித்தது அவரது பல்துறை ஆற்றலுக்கும் நிர்வாகத் திறத்திற்கும் சான்றாகும். அவர் இத்துறைக்கு நியமனம் பெற்றபோது அவ்விழாவிலும் கலந்துகொள்கின்ற வாய்ப்பு எமக்குக் கிடைத்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அவரது பல்துறை ஆற்றலை நன்குணர்ந்த தமிழக அரசு அவருக்கு சிறப்பு விருதுகள் வழங்கியதோடு, மத்திய அரசும் சாகித்திய அக்கடமி விருதை வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரது தமிழ்ப் புலமை உலகறிந்தது. அவரது ஆங்கிலப் புலமை தமிழுக்குக் குறைந்ததல்ல. பல நூல்களுக்கு அளித்த ஆங்கில அணிந்துரை அவரது ஆங்கிலப் புலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

எம்மைப் பொறுத்தவரையில் அவரது புலமை, விருந்தோம்பல் ஆகியவை போற்றுதற்குரியதெனினும், அவரது இதயத்தை ஈர்த்த ஈழத் தமிழர் சிக்கலில் அவருக்கிருந்த ஈடுபாட்டை நாம் நன்கு அறிவோம். "ஈழத் தமிழ் மக்கள் நடாத்துகின்ற போராட்டங்கள் பொருள் பொதிந்தவை. மெல்ல மெல்லப் பணிபுரியும் மேதை செல்வநாயகம் நடாத்துகின்ற அறவழிப் போராட்டம் பயன் தராத நிலையில், பிரபாகரன் நடாத்துகின்ற மற வழிப் போராட்டம் நீங்கலாக வேறு என்ன வழி இருக்க முடியும்? ஒரு இனத்தின் வாழ்வு அந்த இனத்தின் மொழியில் தான் உண்டு. ஆனால் அந்த இனமும் மொழியும் வாழ்வதற்கு நிலந்தான் உயிர் நாடி. இலங்கையில் நடைபெறுகின்ற சிங்கள வெறியாட்டம் உங்கள் மொழியை, உங்கள் பண்பாட்டை, நாகரிகத்தை, வாழ்வியல் முறையை, வாழ்வகத்தை பூண்டோடு அழித்து ஈழத்தில் தமிழினம் இருந்ததோ என்ற கேள்வியை சிங்களப் பேரினவாதம் உருவாக்கிக் கொண்டு இருப்பதை நான் உணர்கிறேன்" என்றார். இக்கூற்று அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து உருவாகியது என்பதை, அவரது கலங்கிய கண்கள் சான்று கூறின.

உலகில் நிலையாமை ஒன்றுதான் நிலைத்தது. ஆனால் அவ்வை நடராசன் அவர்கள் நிலைத்த புகழை நிலைநாட்டி, செத்தும் வாழும் சிலரின் வரிசையில் தனி இடம் பெறுகிறார். அவ்வை துரைசாமி அவர்களின் வழியில் வந்த அவ்வை நடராசன் அவர்கள் இத்தகைய புகழைப்பெற்றிருப்பது வியப்பல்ல. இத்தகைய பெருமகனுடன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகிய வாய்ப்பு எமக்குக் கிடைத்தது நாம் பெற்ற பேறாகும்.

"தமிழன் வாழ வேண்டின் தமிழன் தன்னை ஆள வேண்டும்" என்பதை நிலைநாட்டுவதுதான் நாம் அவ்வை நடராசனுக்குச் செய்ய வேண்டிய கைமாறாகும்.

"ஈழம் வெல்லும் இதைக் காலம் சொல்லும்" - இது எம் மறை மொழி. தாரக மந்திரம்.

மா.க.ஈழவேந்தன்
Eelaventhan Manickavasakar
mkeelaventhan15@gmail.com

---

## ஒரு கோப்பை
## கொஞ்சம் ☕ தேநீர் - 286

***** ***** ***** *****

**கவிஞர் தியாரூ**

சூரியக் கதிர்களை
அறுவடைசெய் – நீ
சொந்தமாய் உனக்கொரு
உலகினைச்செய்!
விதிப்படி வாழ்க்கை
என்பதுபொய் – நீ
உறுதியாய் நம்பிக்கை
உன்னிடம்வை!

உனதிரு தோள்களில்
புகழ்வாங்கு – உனைப்
பழித்தவர் பணிந்திட
வளர்ந்தோங்கு!
நினைப்பவை பிடிபட
வலைபோட்டு – நீ
தினமொரு வெற்றியை
நிலைநாட்டு!



# மரண அறிவித்தல்



தோற்றம்: 23 – 01 – 1941

மறைவு: 23 – 11 – 2022

## திருமதி- கந்தசாமி பாறுவதி

### (காளிகோவிலடி கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)

காளிகோவிலடி கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா மார்க்கம் நகரத்தை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி. கந்தசாமி பாறுவதி அவர்கள் 23-11-2022 புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும்,
திரு. திருமதி. பொன்னு சீதேவன் அவர்களின் அன்பு மருமகளும், பொன்னு கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், மனோறஞ்சிதம் (கனடா), பொன்னம்பலம் (கனடா), கலைவாணி (இலண்டன்), கவிதா (கனடா) அவர்களின் அன்பு தாயாரும்,
சின்னம்மா, சுப்பிரமணியம், பரமேஸ்வரி அவர்களின் அன்பு சகோதரியும்,
காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பசுவதி, மற்றும் சின்னமணி (கனடா), வேலாயுதம் (கனடா)
ஆகியோரின் அன்பு மைத்துனியும்,
கெங்காதரன் (கனடா), தவமலர் (கனடா), தர்சன் (இலண்டன்), தினேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,
கபிலாஷன், சகிலன், நிருஷன், சகீரா, சரண்யா, அபினாஷ், கீர்த்தீஸ், ஜெஸ்மிதா, கரிஸ், சகார்த்தன்,
லகீர்த்தன், லக்சிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், மாறன் அவர்களின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 27-11-2022 அன்று மாலை 5:00 - 9:00 மணி வரையும், திங்கட்கிழமை 28-11-2022 அன்று காலை 6:00-7:00 மணி வரையும் 8911 Woodbine Ave, Markham ON L3R 5G1 ல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் அதே இடத்தில் காலை 7:00 மணியளவில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று, 9:00 மணியளவில் 12492 Woodbine Ave, Gormley ON ல் அமைந்துள்ள Highland Hills Crematorium ல் தகனம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

மனோ (மகள்) 647 – 929 – 0824
பொன்னம்பலம் (மகன்) 416 – 618 – 4805
கவிதா (மகள்) 416 – 949 – 5747
சுப்பிரமணியம் (மணியம் – சகோதரம்) 416 – 567 – 6266
கபிலாஷன் (பேரன்) 647 – 965 – 6624
வாணி (மகள்) 44 753 925 3553

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
22-11-1943

இறப்பு
19-11-2022

# பசுபதிப்பிள்ளை வைத்தியநாதன்

அனவைதீவைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் தெற்கு மற்றும் தென்காசி இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை வைத்தியநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

புன்னகை சிந்தும் உங்கள் பூவதனம்
புண்ணியம் செய்தோம் ஐயா
உங்களுக்கு பிள்ளைகளாய் பிறப்பதற்கு
நேர் கொண்ட பார்வை நிமிர்ந்த நன்நடை
யார்க்கும் அஞ்சாத செருக்கு தமிழன் என்ற மிடுக்கு
நோயில் துவளவில்லை நொந்து மனம்
வாடாமல் பாயில் கிடவாமல் பரமனவன்
பாதத்தை பற்றிக்கொண்டீர்கள் ஐயா
வீசும் காற்றும் வீழுகின்ற மழைத்துளியும்
வாழுகின்ற காலம்வரை
வாழும் உங்கள் நாமம் ஐயா

நெற்றியில் தோன்றும் குறியில் நிதர்சனப்
பார்வைதோன்றும் கருணை பொங்கும் விழிகள்
இரண்டில் கடமையின் உறுதி தோன்றும்
தமிழனாய் மண்ணில் தோன்றி தமிழனாய்
மானம் காத்து "தமிழா " வாழத் தந்தாயே ஆசி ஐயா
ஆண்டுகள் ஒன்று என்ன ஆயிரம்தான் ஆனாலும்
ஆறுமோ எங்கள் நெஞ்சம்.உங்கள் நினைவாக உருவான
"தமிழா" உலகாளும் உங்கள் பெயரை வாழவைக்கும்.

THAMIZHA

தகவல்: குடும்பத்தினர்

# யானையைக்கட்டி தீனி போடும் இலங்கை

**- கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி & சிவா பரமேஸ்வரன்**




இலங்கையின் முக்கிய சுற்றுலா கவர்ச்சிகளில் யானைகளுக்கு முக்கிய இடமுண்டு. கண்டி பெரஹர போன்ற சமூக-சமய நிகழ்வாக இருந்தாலும் சரி அல்லது பின்னவல போன்ற சரணாலயமாக இருந்தாலும் சரி அங்கு யானைகளைப் பார்க்க வருவோரின் கூட்டம் கணிசமானது.

ஆனால் யானையைக்கட்டி தீனி போடுவது சாதாரண விஷயமல்ல. பெரிய மகாராஜாக்களே அது இயலாது என்று கைவிட்ட வரலாறுகளும் உண்டு. மெதுவாக ஆடி அசைந்து சொத்தை அசைபோட்டு உரிமையாளர்களையே திவாலாக்கும் நிலைக்கு யானைகள் இட்டுச் செல்லும். பெரும் தனவந்தர்கள் கூட சில காலம் யானைகளை வைத்திருந்து பின்னர் அவற்றை கோவில்களுக்கு தானமாக அளித்துவிடுவார்கள் என்பது சிறு வயதில் படித்தது.

சொத்துக்களை அழிக்கும் நிறுனவங்கள் "வெள்ளை யானைகள்" என்று அழைக்கப்படுகின்றன. விற்கவும் முடியாது பராமரிக்கவும் முடியாது ஆனால் தொடர்ச்சியாக செலவு மட்டும் செய்யப்பட வேண்டும். அதுதான் "வெள்ளை யானைகளுக்கான" விளக்கம் அல்லது இலக்கணம்.

இப்படியான 500க்கும் மேற்பட்ட "வெள்ளை யானைகளை" பல தசாப்தங்களாகக் கட்டித் தீனி போட்ட இலங்கை அரசு அவை நலிவுற்று, எலும்பும் தோலுமாக இருக்கும் நிலையில் வந்த விலைக்கு அவற்றை விற்றுவிடலாம் என்கிற முடிவிற்கு வந்துள்ளது.

ஆனால், "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என்று வள்ளலார் ஆன்மீக ரீதியாகச் சொன்னது இலங்கை அரசிற்கு அரசியல் பொருளாதார ரீதியாகச் செல்லும்.


இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்களின் நிலை யானையைக் கட்டி தீனி போடுவது போன்றுதான் உள்ளது.

இலங்கையில் 2022 இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி அரசுக்குச் சொந்தமான 527 நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு மிகப்பெரிய எண்ணிக்கையிலான அரசதுறை நிறுவனங்களை ஏனைய நாடுகளில் காண இயலாது.

அரசியல்வாதிகள் தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தமது ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரும் நோக்கிலேயே இலங்கையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

அரச துறையின் தொழிற்பாதுகாப்பு ஓய்வூதியம் உரித்துடைமை சமூக அந்தஸ்து என்பன காரணமாக ஆரம்பக்காலத்திலிருந்தே அரச துறையில் தொழில் புரிவது தொழிற்படையில் பிரவேசிப்பவர்களின் முதன்மைத் தெரிவாக இருந்தது. சமூகத்தின் மேல் நோக்கிய நகர்வுக்கும் இதுவே பிரதான வழியாக இருந்தது. உதாரணமாக இலங்கையின் வடபகுதி மக்களிடையே பிரபலமான இருந்த ஒரு சொற்றொடர் கோழி மேய்த்தாலும் கோர்ன்மேன்திலை கோழி மேய்க்கோனும். (கோழிப்பண்ணைப் பராமரிப்பாளராக வேலை செய்தாலும் அது அரசுபண்ணையாக இருக்கவேண்டும்) என்பதாகும். அது மட்டுமன்றி திருமணங்களின் போதும் அரசுத்துறையில் வேலை செய்வதே மணமகன்களுக்கான முக்கிய தகுதியாகப் பார்க்கப்பட்டது.

அரசியல்வாதிகள் தாம் பதவிக்கு வருகின்ற போது தமது ஆதரவாளர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் அரசதுறை நிறுவனங்களில் வேலை வழங்குவதைக் காண முடியும். இதற்கு சிறுபான்மையின பொரும்பான்மையின அரசியல்வாதிகள் என்ற பேதம் இல்லை. ஒரு மூத்த அரசியல்வாதி ஒருதடவை "எனது ஆதரவாளர்களுக்கு எனது அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் வேலை பெற்றுத்தர முடியாவிட்டால் நான் அமைச்சராக இருந்து என்ன பயன் என்று கேட்டார்". 2005 இல் பதவிக்கு வந்த ராஜபக்ச அரசாங்கம் அப்போது ஐந்து இலட்சம் பேர் அளவிலிருந்த அரச பணியாளர்களின் எண்ணிக்கையை அடுத்து வந்த பத்து வருடங்களில் பதினைந்து இலட்சமாக மாற்றி சாதனை படைத்தது. அரசதுறையை வினைத்திறனாக இயங்கவைக்க புதிய இரத்தம் பாய்ச்சப்படவேண்டும் என்று காரணம் கூறப்பட்டது. 2015 இல் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் உயர்கல்வி அமைச்சராக இருந்த கண்டிப் பிரதேச அரசியல்வாதி பல்கலைக்கழகங்களில் தனது ஆதரவாளர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் பதவிகளைப் பெற்றுத்தந்தார்.




ஆகவே அரசதுறை தொழில் முயற்சிகளும் நிறுவனங்களும் காலத்திற்கதுக் காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் ஆதரவாளர்களால் நிரப்பப் பட்டதுடன் இந்நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பகள் அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கும் அரச கட்சிகளின் அடிவருடிகளுக்கும் வழங்கப்பட்டன. இவற்றின் மூலம் தகுதியானவர்கள் தகுதியான பதவிகளுக்கு நியமிக்கப்படாமல் அரசுதுறை நிறுவனங்கள் ஊழற் கூடாரங்களாக மாறின. அவற்றின் மூலம் இந்நிறுவனங்களில் கட்சி சார் தொழிற்சங்கங்களின் கைகள் பலப்படுத்தப்பட்டதுடன் இந்த நிறுவனங்களை மீள்கட்டமைப்பு செய்யவோ சீர்திருத்தங்களை மேற்கொள்ளவோ முட்டுக்கட்டை போடுகின்றன.

சுருங்கச் சொன்னால் இந்த அரச நிறுவனங்கள் ஊழலில் ஊற்றுக்கண்ணாகவே உள்ளன. உதாரணமாக இலங்கை நிலக்கரிக்கம்பனி நிலக்கரிக் கொள்வனவில் மோசடி செய்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்த போது அதனால் நான்கு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் இது துறைசார்ந்த அமைச்சருக்குத் தெரிந்தே இடம் பெற்றதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது. இது ஊசிமுனை அளவே. ஒவ்வொரு துறையாக எடுத்தால் அது பூதாகாரமாக இருக்கும். அலட்சியம், மோசடி, உழல், உள்குத்து, மோசமான நிர்வாகம் என்பதே இவை அனைத்திற்கும் பொதுவான தொழில் இலக்கணமாகவுள்ளது.

அரசு நிறுவனங்கள் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதன் மூலம் வரவு செலவத்திட்டத்தின் வரையறைக்குள் அவை வராமல் தப்பித்துக் கொள்ளும் புதிய உத்தி கையாளப்பட்டுள்ளது. இதனால் பாராளுமன்றத்திற்கு அவை பதிலளிக்க வேண்டியதில்லை.

வரிசெலுத்துவோரின் பணத்தை விரயம் செய்யும் நிறுவனங்களாக இவை தொடர்ந்து செயற்படுகின்றன. 2006 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியில் உபாயரீதியில் முக்கியத்துவமிக்க 55 நிறுவனங்களின் நிறுவனங்கள் அடைந்த மொத்த நட்டம் 1.2 டிரில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.




இத்தகைய நிறுவனங்களை மறுசீராக்கம் செய்வதற்கான குறுங்கால மற்றும் நீண்டகாலத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் குறுங்காலத்தீர்வகளாக இவற்றைத் தனியார் மயப்படுத்தல், மறுசீராக்கம் மற்றும் முதலீட்டை விலக்கிக்கொள்வதன் மூலம் கொழும்புப் பங்குச் சந்தையில் இவற்றைப் பட்டியலிடச் செய்தல் என்பவற்றைக் கூறலாம். ஆனால் இவற்றை தீவிரமான மாற்றங்களாகக் கருதமுடியாது.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் அரசதுறை நிறுவனங்களை மீள் சீர்திருத்தம் செய்ய இரு பிரதான கொள்கைகளைப் பயன்படுத்துகின்றன. ஒன்று அவற்றுக்கு வழங்கப்படும் மானியங்களை குறைத்தல். இரண்டு அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல். இவற்றின் மூலம் தனியார் துறையுடன் போட்டியிட அவற்றை நிர்ப்பந்திக்கலாம். அவற்றை முழுமையாகவோ பகுதியளவிலோ தனியார்மயமாக்கம் செய்வது சாத்தியமான தீர்வாகலாம்.

நீண்டகால அடிப்படையில் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தி, ஊழலை ஒழிக்க முயன்று, அரசியல் செல்வாக்கை முற்றாகத் தடுத்து உற்பத்தியை அதிகரித்தால் ஓரளவிற்கு அவற்றை மீட்க முடியும்.

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவை தொடர்ச்சியாக பெருநட்டத்தில் இயங்கி, அரசு நிதியை வீண்விரயம் செய்து வருகின்றன.

இவை அவசரமாகவும் அவசியமாகவும் மறுசீரமைக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவற்று சிறிலங்கன் எயார்லைன்ஸ் தற்காலிகமாக எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போது இலாபகரமாக இயங்கியது. அரசியல் காரணங்களுக்காக 2008 இல் அது மீண்டும் அரசுடைமையாக்கப்பட்டதிலிருந்து 316 பில்லியன் ரூபாய்கள் நட்டத்தை அடைந்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.


அண்மையில் பெற்றோலிய பொருள்களின் விலைகள் மும்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ள நிலைமையிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படுகிறது. இதே காலப்பகுதியில் போட்டி நிறுவனமான இந்தியன் ஒயில் கம்பனி மிகப் பெரிய இலாபத்தைச் சம்பாதித்தமை இந்நிறுவனத்தின் புரையோடிப்போயுள்ள பிரச்சினைகளை விலை அதிகரிப்பின் மூலம் சீராக்க முடியாது என்பதைக் காட்டுகிறது. அதே நிலைமையிலேயே இலங்கை மின்சார சபையும் இயங்குகிறது. மக்கள் அதிக விலையை செலுத்தியபோதிலும் இவை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குமாயின் இவற்றை தனியார்மயப்படுத்துவதே பொருத்தமான தீர்வாக இருக்கக் கூடும். ஆனால் அனைத்திலும் அரசியல் என்பதால் இது சாத்தியமா என்ற கேள்வி உள்ளது.

2023 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது அரச நிறுவனங்கள் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. சுமார் 420 அரச நிறுவனங்களின் சுமையை அரசு சுமப்பதாகவும் அவற்றுள் 52 பிரதான நிறுவனங்கள் 86 பில்லியன் நட்டத்தை எதிர்கொள்வதாகவும் இவற்றை மறுசீரமைக்க வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன் முதற்கட்டமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் சிறிலங்கா டெலிகொம் கொழும்பு ஹில்டன் வோட்டர்ஸ் எட்ஜ் மற்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை மறுசீரமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவற்றுள் பல இலாபம் ஈட்டும் நிறுவனங்களும் உள்ளடக்கம். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மறுசீரமைப்பது நியாயமாக இருப்பினும் இலாபமீட்டும் நிறுவனங்களை ஏன் விற்கவேண்டும்? என்ற குற்றச்சாட்டு உடனடியாக எழுந்தது. ரணில் அரசாங்கங்கள் பொதுவாகவே இவற்றை விற்பது தொடர்பில் அதிக கரிசனை காட்டும். கடந்த காலங்களில் 2005 இதற்கு முன்னர் வரவு செல்வுத்திட்டக் குறைநிலையை இட்டு நிரப்பும் ஒரு உபாயமாக அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தல் மூலம் பெறப்படும் நிதி பயன்படுத்தப்பட்டது.

ராஜபக்ச காலப்பகுதியிலேயே இது நிறுத்தப்பட்டு ஏற்கெனவே தனியார்மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களும் மீண்டும் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியும் இது அரச வங்கிகளையும் தனியார் மயப்படுத்துமாறு தொடர்ச்சியாகப் பலகாலம் கூறி வந்துள்ளமையும் மறந்துவிடக் கூடிய ஒன்றல்ல. காகத்தின் கூட்டில் முட்டையிட்ட குயிலைப்போல ராஜபக்ச கூடாரத்தில் ரணில் பட்ஜெட் முட்டை போட்டிருக்கிறார். பாராளுமன்றத்தில் அதிர்ஷ்டவசமாக அது நிறைவேற்றப்பட்டு குஞ்சு பொரித்திருக்கிறது. குஞ்சு கோழியாக வளருமா அல்லது அடித்து கோழிக்குஞ்சு ரசம் வைத்துவிடுவார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இப்போதுள்ள பொருளாதார நெருக்கடி பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள போதிலும் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை பகுத்தறிவான வகையில் மீளக்கட்டமைப்புச் செய்வதற்கு உரிய வாய்ப்பினையும் அதற்கான பின்புலத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த அரசநிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதால் கிடைக்கும் பணம் இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையாவிட்டாலும் தொடர்ச்சியாக வரிசெலுத்துபவர்களின் பணத்தை விரயம் செய்து வயிறுவளர்க்கும் அரசியல் வாதிகள் எதிர்காலத்தில் அவற்றை தொடர்வதற்கான வாய்ப்பை இது குறைக்கும்.




ஆனால் தனியார்மயப்படுத்தலில் முதலீட்டாளர்களை முறையாகத் தெரிவு செய்வதுடன் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இலஙகை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பற்றை மறுசீரமைப்பது அரசாங்கத்திற்கு இலகுவாக காரியமாக இருக்கப்போவதில்லை.

அதேவேளை அரச நிறுவனங்களை விற்க முயன்றாலும் அதை வாங்க ஆள் வேண்டும். எந்தவொரு முதலாளியும் யானையைக் கட்டித் தீனி போடுவதை விட ஆட்டைக் கட்டி தீனி போடுவதே சிறந்தது என்று கருதுவார்கள்.

அனைத்திலும் பார்க்க விடவும் முடியாது விற்கவும் முடியாத தொடரும் தலைவலியாக இருக்கும் மிகப்பெரும் வெள்ளை யானை ஒன்று உள்ளது.

இதை அடுத்தவாரம் பார்ப்போம்.

**கட்டுரையாளர்கள் பற்றி:**
**பேராசிரியர் முருகேசு கணேசமூர்த்தி**
**பொருளாதர பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்**
**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்.**



# அன்று தமிழர்கள். இன்று தென்னிலங்கை!

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• ஆளும் வர்க்கத்தின் தொடர் வெற்றிகள் குறித்து அரகலயா உற்பட அனைத்துதரப்பினரும் சிந்தித்தாக வேண்டும்.

இன்று நாங்கள் நாளை நீங்கள். அந்த நாள் உங்களை நோக்கி இன்று வந்துள்ளது. அது பற்றி தமிழர்கள் புளங்காகிதம் அடைவதற்கில்லை. ஏனெனில் அதன் வலி தமிழர்களுக்குத் தெரியும். தமிழர்கள் பயங்கரவாதிகள், துரோகிகள், பிரிவினைவாதிகள், தீவிரவாதிகள் என பல்வேறு முத்திரைகள் குத்தப்பட்டு அரச பயங்கரவாதத்தால் வேட்டையாடப்பட்டவர்கள்.

அவ்வேளைகளில் அரச தரப்புகள் கூறியதை தென்னிலங்கையின் பெரும்பாலானவர்கள் ஆமோதித்தனர், அங்கீகரித்தனர். இதே அரச பயங்கரவாதம் தம்மீது திருப்பப்படும் என்று தென்னிலங்கை மக்கள் அவ் வேளையில் எதிர்பார்க்கவில்லை.

இன்று அதே அரச பயங்கரவாதம் "மாற்றத்தைக்" கோரி நிற்பவாகளுக்கு எதிராக திசை திருப்பப்பட்டுள்ளது. ஊழல்வாதிகளுக்கு எதிராகவும், உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரிகளுக்கு எதிராகவும், நாட்டைக் கொள்ளை அடித்தவர்களுக்கு எதிராகவும், நாடு வங்குரோத்து நிலை அடைய காரணமானவர்களுக்கு எதிராகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது பயங்கரவாத் தடைச் சட்டம் அமைதி காக்கின்றது.

எந்த பயங்கரவாத தடைச் சட்டம் தமிழ் மக்களை சீரழித்து சின்னா பின்னமாக்கியதோ அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அகிம்சை வழிப் போராட்டக்காரர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதற்கு எதிராக வீதியில் இறங்கியுள்ள தென்னிலங்கை மக்கள் மீதும் பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டு வேட்டையாடப்படுகின்றனர்.

தென்னிலங்கை மக்களுக்கு முன்பே தமிழ் மக்கள் அகிம்சை வழி, சத்தியாக்கிரகம் என அனைத்து வழிகளிலும் போராடி தோற்றுப் போனவர்கள். இன்று காலிமுகத் திடலில் அரகலயாக்கள் முகம் கொடுத்ததைவிட மிக மோசமான அனுபவங்களை தமிழ்த் தலைமைகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் அன்று சந்தித்தது. இது தமிழ் மக்களுக்குப் புதிய விடயம் இல்லை. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் வரலாராக உள்ளது.

அன்று தமிழ் மக்கள் மீது பயங்கரவாதியென முத்திரை குத்திய பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் மக்கள் மீது துரோகிகள் என முத்திரை குத்துகின்றது. பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கின்றது.

• இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தத்தை மாத்திரமல்ல அணுகுமுறை குறித்தும் ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும்.

இந்த வரலாற்றில் தமிழ் மக்கள் மாத்திரம் அல்ல ஜேவிபி தற்போது அரகலயா உட்பட அனைத்துத் தரப்பினரும் இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தத்தை மாத்திரமல்ல அணுகுமுறை குறித்தும் ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும்.

இலங்கைச் சமூகத்தை வெற்றிகரமாக பிரித்து ஆள்கின்றனர். இந்தப் பிரிவினைக்குள் முரண்பாடுகளுக்குள் மிக லாவகமாக வெற்றிகரமாக இவர்களால் தமது அரசியலை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. அதாவது தமது அரசியலை தொடர்ந்தும் சந்தைப்படுத்தலில் வெற்றி கண்டுள்ளனர். அது மாத்திரமல்ல அரசியல் அதிருப்தியாளர்களை தமது அரசியல் வட்டத்திற்குள் இழுத்து செயல் இழக்கச் செய்வதிலும் வெற்றி கண்டுள்ளனர். தற்போதும்கூட அரகலய அலைக்குள் மூழ்கிய கையுடன் மீண்டு வந்து அரசியலில் தலை நிமிர்ந்து நிற்கின்றனர். தலை நிமிர்ந்து நின்ற அரகலயாக்கள் தடுப்புக்காவலிலும், பொலிஸ் நிலையத்திலும், நீதிமன்ற வாசலிலும் நிற்கின்றனர். இது எவ்வாறு அரகலய போராட்டத்தை அரசியல் ஆளும் வர்க்கம் திசை திருப்பி முதுகெலும்பை முறித்து கிடப்பில் போட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

• மாக்ஸியவாதிகள் தோற்றனர்

இலங்கை அரசியலில் மாக்ஸியவாதிகள் கோலோச்சிய காலம் இருந்தது. சுதந்திர இலங்கையில் படிப்படியாக வலதுசாரிகளால் மாக்ஷியவாதிகள் ஓரங்கட்டப்பட்டு இன்று முகவரி அற்றவர்களாக சிவப்பு சாயம் கழன்று வேறு கலர்களுக்குள் கலந்துவிட்டனர். வலதுசாரி அரசியல் வெற்றிகரமாக மாக்ஷிய அரசியலை ஓரங்கட்டி தமது அரசியலுக்குள் இரண்டறக் கலக்க வைத்துவிட்டனர்.

- வர்க்க ரீதியில் இணைய வேண்டிய இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் ஏ.ஈ.குணசிங்க போன்றவர்களின் தொழிற்சங்க அரசியல் நலன்களுக்காக பலியாகி தெழிலாளர் வர்க்கத்தை இனரீதியாகக் கூறுபோட்டனர். இது இலங்கையின் வலதுசாரி இனவாத அரசியலை பலப்படுத்தியது.

- ஒரு மொழி இரு நாடு இரு மொழி ஒரு நாடு என சித்தாந்தம் பேசிய சிவப்பு சட்டைக்காரர்களும் இறுதியில் சியப்பு சாயம் வெளுத்து நீலமாகவே பர்ணமித்தனர்.

- தென்னிலங்கையின் சிவப்ப சட்டைக்காரர்களுடன் பயணித்த தமிழர் தரப்பும் இந்த போக்கினை உணரத் தவறியது. *1981 ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்டபோது தெற்கில் இருந்து வணக்கத்துக்குரிய போல்கெஸ்பஸ் போராசிரியர் சிறிவர்தன ஆகியோர் அடங்கிய குழுவினர் நல்லூர் கோவிலுக்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரையும் சிவில் செயற்பாட்டாளர்களையும் சந்தித்தனர். யாழில் அவ்வேளையில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கில் மண்ணைத் தூவிவிட்டு இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு நிறைவடைந்து வெளியேறியபோது மாஸ்கோ சார்பு மாக்ஷியவாதி ஒருவர் மிகுந்த நம்பிக்கையுடன் "இந்தப் பிரச்சனைகள் அனைத்தும் வர்க்கப் புரட்சிக்குள் தீர்ந்துவிடும்" என்று நம்பிக்கை வெளியிட்டார்.* இதனை அவதானித்த இந்த பத்தியாளர் "தமிழர்களின் சாம்பலில்தான் வர்க்கப் புரட்சி சாத்தியமாகுமா? ஏன கேள்வி எழுப்பியதை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

- *1958 1977 1983 என தொடர்ச்சியாக தமிழர்களின் சாம்பலைக் கண்ட தமிழினம் இறுதியில் முள்ளிவாய்க்காலைக் கண்டதை மறப்பதற்கில்லை.*

- தமிழ் மாக்ஷியவாதிகள் எவ்வாறு ஏமாந்தனரோ அதேபோன்று வலதுசாரித் தமிழ்த் தலைமைகளும் ஏமாந்தனர். சேர். பொன். அருணாச்சலம், சேர். பொன். இராமநாதன் ஈராக தமிழ்த் தலைமைகளும் ஏமார்ந்தனர். அந்த வரலாறு இன்றும் தொடர்கின்றது.

- மறுபுறம் கேட்பீரியு. தேவநாயகம் லக்ஷ்மன் கதிர்காமர் தற்போது டக்ளஸ் தேவானந்தா வியாழேந்திரன் அங்கஜன் போன்ற பலர் தமிழர் தரப்பில் இருந்து பச்சைஇ நீலத்திற்குள் சங்கமமாகியுள்ளனர். இவர்கள் தமிழ் மக்களின் குரலாக அன்றி சிங்களக் கட்சிகளின் குரலாகவே உள்ளனர். சிங்களக் கட்சிகளுக்கு இவ்வாறானவர்கள் தேவை. ஆனால் இவர்களை சிங்கள ஆட்சியாளர்கள் இன விவகாரத் தீர்வுக்கு தமிழர் தரப்பாகக் கொள்வதில்லை.

• ஜேவிபி தோற்றது.

தென்னிலங்கை அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவரமுயன்ற ஜேவிபிக்கு எதிராக இலங்கையின் ஆளும் வர்க்கத்துடன் இந்தியா கை கோர்த்து நின்றது. இறுதியில் ஆளும் வர்க்க அரசியல் நண்பர்கள் வெற்றி பெற்றனர். தென்னிலங்கை இளைஞர்கள் தோற்றனர்.

ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து அரசியல் செய்ய வாருங்கள் என அழைத்தனர். இருக்கும் அரசியல் அமைப்புக்களுடன் போட்டியிட்டு மேல் எழுந்துவிட முயன்றும் சாண் ஏற முழம் சறுக்கம் நிலைதான் ஜேவிபியின் அரசியல் உள்ளது.

- சஜித் அணி போன்று பொதுஜன பெரமுன போன்று இளைஞர்களால் அரசியலில் மேலெழும்ப முடியவில்லை.

- இப்பொழுதும் அரகலய திமிறி எழுந்தது. ஆனால் என்ன நடந்தது ஆளும் வர்க்கம் இணைந்து ஒரு வட்டத்தை வரைந்து அந்த வட்டத்திற்குள் அமர வைத்துவிட்டது. தற்போது தமது படைத் தரப்பை அனுப்பி அதன் சப்பாத்து கால்களுக்குள் அமர்த்திக் கொண்டிருக்கின்றது.

- தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்திற்கெதிராக வடக்குக் கிழக்கில் இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தனர். இறுதியில் இந்தியா உற்பட சர்வதேச சக்திகள் இலங்கையின் ஆளும் வர்க்கத்துடன் இணைந்து தமிழ் இளைஞர்களைத் தோற்கடித்தனர்.

இந்த வரலாற்றுப் பின்னணியில் இருந்து அரகலயாக்கள் ஒரு விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அரகலயாக்களின் போராட்டம் வீரியம் பெற்ற வேளை ரணில் விக்ரமசிங்க அரகலயாக்களுக்கு ஒரு செய்தியை விடுத்திருந்தார்.

• மாற்றத்தை எதிர்பார்க்கும் சக்திகளுக்கு எதிரானதாகவே வரலாற்றுரீதியாக ஆளும் வர்க்கம் இருந்துள்ளது.

ஆரகலயாக்கள் தமது அரசியல் அபிலாஷைகள் குறித்து கட்சி அமைத்து அமைப்பு ரீதியாக அணுக முன்வரவேண்டுமென செய்தி அனுப்பினார். அரகலயாக்கள் அரசியல் கட்சி அமைத்து தற்போதைய அரசியல் தலைமைகளுடன் பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்புவர் என எதிர்பார்த்தார். ஆனால் அது நடைபெறாது போகவே மகிந்த அணியினர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இரும்புக் கரம் கொண்டு அடக்கத் தலைப்பட்டனர்.

இலங்கையின் வரலாறு மாற்றத்தை எதிர்பார்க்கும் சக்திகளுக்கு எதிரானதாகவே வரலாற்றுரீதியாக ஆளும் வர்க்கம் இருந்துள்ளது. இலங்கையின் ஆளும் வர்க்கத்தைப் பொறுத்து புரட்சி போராட்டம் எல்லாம் சரிவராது உங்களுக்கேற்ற சிஸ்டத்திற்கு இங்கு இடமில்லை. எங்களுடைய "ஜனநாயக சிஸ்டத்திற்குள்" வாருங்கள். ஏன்பததான் அந்தச் செய்தி.

ஆனால் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க கூறுகின்ற சிஸ்டம் தோற்றுப் போனதன் விளைவே தென்னிலங்கை மக்கள் மாற்றத்தைக் கோரி நிற்கின்றனர் என்ற யதார்த்தத்தை ஆளும் வர்க்கம் ஏற்றுக் கொள்ள மறுத்து அடங்க மறுக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரம் எந்தளவுக்கு மோசமாக இருக்கின்றதோ அதை விட மோசமாக இலங்கையின் அரசியல் உள்ளது. மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி. தோற்றுப்போன நாட்டை உருவாக்கி விட்டு எவ்வித பொறுப்புக் கூறலும் இன்றி ஆட்சியில் அமர்ந்துள்ள ஆட்சியாளர்.

எனவேதான் சட்டங்கள் ஒரு நபர் அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு மட்டுமே அதிகாரம் அளிக்கிறது. அத்தகைய அதிகாரம் ஒரு குழு அல்லது ஒரு நபருக்கு வழங்கப்படுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கும். எனவே நமக்கு மாற்றம் தேவை. நாம் விரும்பும் மாற்றம் உண்மையான ஜனநாயகத்தை அனுமதிக்கும் புதிய அரசியலமைப்பை உறுதிப்படுத்த வேண்டும். என கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகப் போக்குகளுக்கு ஏற்றவாறு புதிய பொருளாதார ஒழுங்குமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றும், 2023 வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக இலங்கை இந்தப் புதிய பாதையில் இறங்கும் என்றும் குறிப்பிட்டார். 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பொருளாதார ஒழுங்குமுறை செல்லுபடியாகாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். "நாட்டை புதிய பொருளாதார ஒழுங்கை நோக்கி அழைத்துச் செல்வதே இப்போது எங்களின் நோக்கம்" என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஆனால் அந்த புதிய ஒழுங்கில் தென்னிலங்கை மக்கள் பேசுகின்ற மாற்றம் குறித்த கரிசனை இருப்பதாகத் தெரியவில்லை. ஊழல்வாதிகளுடனும் நாட்டைக் கொள்ளை அடித்தவர்களுடனும் இணைந்து இது சாத்தியமா? தன்னையோ தானும் தான் சார்ந்தவர்களும் உருவாக்கிக் கொண்டுள்ள மக்கள் மற்றும் நாட்டுக்கு விரோதமான கட்டமைப்புடன் "நாட்டை புதிய பொருளாதார ஒழுங்கை நோக்கி அழைத்துச் செல்வது சாத்தியமா?".

மொத்தத்தில் வரலாற்றில் இருந்து புதிய பாடத்தைக் கற்றுக் கொள்ள இலங்கையின் ஆளும் வர்க்கம் மறுக்கின்றது. இதனை இலங்கையின் அனைத்து சக்திகளும் உணர்ந்தாக வேண்டும். இது உணரப்படாதவரை இலங்கையில் மாற்றம் என்பது கானல் நீரே.

Email : vathevaraj@gmail.com

# தாயகக் கனவுடன்...

- குரு அரவிந்தன்



(அவள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாள். குமர்ப்பிள்ளைகளோடு கண்டபடி பேசக்கூடாது என்ற அம்மாவின் அறிவுறுத்தல் ஒரு பக்கம் என்னைப் பின் வாங்க வைத்தது. நாங்கள் வெளியே ஓடியாடி விளையாடும்போதெல்லாம் அறையன்னலுக்கால் அவள் ஏக்கத்தோடு எட்டிப் பார்ப்பதை அவதானித்திருக்கிறேன்)

ஸ்டோர்ரூம் சுவரில் சாய்ந்தபடி நான் விம்மியழுததை சுவேதா கவனித்திருக்க வேண்டும்.

"அப்பா, ஏன் அழுவுறீங்க?" என்றாள்

"இல்லை, ஒன்றுமில்லை." என்று தலையை அசைத்தபடி கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

"அழாதீங்கப்பா, அத்தைப் பாட்டியோட வீடு மட்டுமல்ல, இங்கே எல்லா வீடும்தான் சிதைந்து போச்சு. மெல்ல மெல்லத் திருத்தியிடுவாங்க." ஏன்று தனது அறிவுக்கேற்ற அறிவுரை தந்தாள்.

யுத்தம் முடிந்தபின் நான் குடும்பத்தோடு விடுமுறைக்குத் தாயாரின் ஊரான சண்டிலிப்பாய் சென்றிருந்தேன். ஏனைய வீடுகள் போல அத்தையின் வீடும் யுத்தத்தின் அவலத்தை எடுத்துக் காட்டியது. செல் குண்டுகள் வந்து விழுந்ததில் கூரை முற்றாகவே தூர்ந்து போயிருந்தது. செடி கொடி பற்றைகளுக்கு நடுவே வீடு ஒன்று இருந்ததற்கு அடையாளமாய் ஆங்காங்கே இடிந்து போன சுவர்கள் தலை தூக்கி நின்றன.

நான் கண் கலங்கியதற்குக் காரணமிருந்தது. என்னை அழவைத்தது கூரையற்ற அந்த ஸ்டேர்ரூமில் முளைத்திருந்த பற்றைச் செடிகளுக்கு மத்தியில் முளைத்துப் பூத்திருந்த கார்த்திகைச் செடியின் பூதான் என்பது மகளுக்குத் தெரியாது.

மஞ்சள் சிகப்பு நிறத்தில் பளீச்சென்று கண்ணில் பட்டது. பழைய நினைவுகள் எல்லாம் திடீரெனக் கண்முன்னால் வந்து நின்றன. என்னால் மறக்க முடியாத அந்த நிகழ்வு இங்கே, இந்த ஸ்டோர்ரூமில்தான் அன்று நடந்தது. ஒவ்வொரு விடுமுறையின்போதும் நாங்கள் ஓடியாடிக் கும்மாளம் போட்ட இந்த வீடு இன்று சீரழிந்து கேட்பாரற்றுக் கிடந்தது. குடியிருந்த அந்த வீட்டைப் பார்க்கவே எவருக்கும் அழுகை வரும், ஆனால் நான் அழுதது அதற்காக அல்ல, என் அத்தை மகள் பிரியாவுக்காகத்தான்.

மனதைவிட்டகலாத எவ்வளவு மகிழ்ச்சியான நாட்கள் அவை என்பதால் அந்த நாட்களை நினைத்துப் பார்த்தேன். எங்கள் இளமைக் கனவுகளைத் தின்றுவிட்ட யுத்தத்தை மனசுக்குள் திட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

அத்தையின் குரல் கேட்டு வெளியே விளையாடிக் கொண்டிருந்த நாங்கள் சமையல் அறைக்கு ஓடிச் சென்றோம். சாப்பிட வரும்படி எல்லோரையும் அழைத்த அத்தையின் "கை அலம்பியாச்சா" என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் கையலம்பக் கொல்லைப் பக்கத்தில் இருந்த கிணற்றடி நோக்கி ஓடினோம்.

கொழும்பு பட்டணத்தில் இருந்து நானும் தங்கையும் விடுமுறையைக் கழிக்க அத்தை வீட்டிற்கு வந்திருந்தோம். யாழ்ப்பாணத்தில் இருந்த சண்டிலிப்பாய் என்ற கிராமத்தில்தான் அத்தையின் வீடு இருந்தது. பட்டிணத்தில் வளர்ந்த எங்களுக்குக் கிராமத்து மருதநில சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது.

வயல் வரம்பு வழியே ஓடிப்பிடிப்பது, இலுப்பங்கொட்டை பொறுக்கி அடித்து விளையாடுவது, வானரப்படைகளோடு ஒல்லித்தேங்காய் கட்டிப் பூவல் குளத்திலே தாமரைக் கொடிகளில் சிக்காமல் நீச்சலடிப்பது, ஐயர் வீட்டு வளவிலே கொய்யாப்பழம் பறிப்பது, வேப்பமர நிழலில் மாங்கொட்டை அடிப்பது, மாட்டுவண்டில் சவாரி விடுவது இப்படிப் பொழுது போவதே தெரியாது.

வேப்பமர நிழலில் விளையாடினாலும், வெய்யில் அதிகமாகையால் ஓடியாடி விளையாடியதில் உடம்பெல்லாம் வியர்த்து வழிந்தது. முகம் கைகால் அலம்பி ஓடிவந்த எல்லோரையும் உட்காரவைத்து அத்தை பிட்டு பரிமாறினாள். பிட்டுக்குத் தொட்டுக் கொள்ள மிளகாய்ச் சம்பல். வறுத்த மிளகாயை இடித்து தேங்காய்த் துருவலுடன் உப்பும் புளியும் கலந்து தயாரிப்பதுதான் சம்பல். நான் ஒரு கவளம் எடுத்து வாயில் வைத்துவிட்டு, சாப்பிடாமல் அத்தை முகத்தையே பார்த்தேன்.

"என்ன அரிசிமாப்பிட்டு பிடிக்கலையா?"

"பிட்டுப்பிடிச்சிருக்கு ஆனா.."

"என்ன சம்பல் வேண்டாமா? உறைக்குதா?"

"ஆமா உறைப்பாயிருக்கு, எனக்கு மாம்பழம் சீவித் தாறீங்களா?"

"மாம்பழமா? ஓ அதுக்கா இந்தத் தயக்கம், சரி ஓடிப்போய் ஸ்டோர்ரூமில இருக்கு பழுத்ததாய் பார்த்து இரண்டு எடுத்துவா" என்றாள் அத்தை.

நான் சந்தோஷமாய் எழுந்து ஓடிப்போனேன். ஓடி ஒளித்து கண்ணாமூச்சி விளையாடும் போதெல்லாம் இந்த ஸ்டோர் ரூமுக்குள் நாங்கள் ஓடிவந்து பதுங்கி இருந்திருக்கின்றோம். வீட்டின் கடைசியாக இருந்த சிறிய அறையைத்தான் ஸ்டோர் அறையாகப் பாவித்தனர். அந்த அறைக்குச் சிறிய யன்னல் ஒன்று தான் இருந்தது. அதுவும் அரைகுறையாக மூடியபடியிருந்தது.

உள்ளே போதிய வெளிச்சம் இல்லாமல் இருட்டாய் இருப்பதால் என்ன உள்ளே இருக்கிறது என்று உடனே கண்டு கொள்வது கடினம். நேற்று இங்கேவந்து ஒளித்திருந்த போதுதான் மாம்பழ வாசம் குப்பென்று அடித்தது. அங்கே மாம்பழம் பழுக்க வைத்திருப்பதை அவதானித்தேன். அருகே சென்று பார்க்க முடியவில்லை, வாசத்திலிருந்து கறுத்தக் கொழும்பு மாம்பழமாய் இருக்கலாம் என்று ஊகித்தேன்.

கறுத்தக் கொழும்பு மாம்பழம் என்றாலே எனக்கு வாய் ஊறும். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. மாம்பழங்களில் பலவகையாகன மாம்பழங்கள் யாழ்ப்பாண மண்ணிலே இருந்தன. ஒவ்வொரு வீட்டுக் காணியிலும் குறைந்தது இரண்டு மூன்று மாமரங்களாவது இருக்கும். முக்கனிகள் என்று சொல்லப்படுகின்ற கனிகளில் மாம்பழமும் ஒன்றாக இருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண நகரத்திற்கு வடக்கே காங்கேசந்துறைக்குத் தெற்கே இணுவில் என்ற ஊர் ஒட்டு மாம்பழக் கன்றுகளுக்குப் பிரபலமாக இருந்தது.

பாண்டி, கொழும்பு, பச்சைதின்னி, மல்கோவா, விலாட், அம்பலவி, செம்பாட்டான், சேலம், என்று காங்கேயந்துறை வீதிவழியாக யாழ்ப்பாண நகரம் நோக்கிப் போகும்போது இந்த ஒட்டு மாங்கன்றுகளை விற்பனைக்காக வீதி ஓரங்களில் வைத்திருப்பதை அவதானிக்கலாம். கொழும்பு மாம்பழங்களில் இரண்டுவகை உண்டு. ஒன்று வெள்ளைக் கொழும்பு, மற்றது கறுத்தக் கொழும்பு. சற்றுக் கரும்பச்சை நிறம் கொண்டதால் கறுத்தக் கொழும்பு மாம்பழம் என்று பெயர்பெற்றது. பழுக்கும்போது காம்புப்பக்கம் மஞ்சளாக மாறும். இது சற்று நீண்ட சதைப்பிடிப்புள்ள மிகவும் ருசியானமாம்பழம்.

ஸ்டோர் ரூம் திறந்தேயிருந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றேன். உள்ளே சற்று இருட்டாக இருந்தது. கண்களை இருட்டுக்குள் பழக்கப்படுத்திக் கொண்டு பார்த்தேன். ஒரு சாக்குப் பைமேலே வைக்கோல் பரப்பி அதன்மேல் மாம்பழங்களைப் பரப்பியிருந்தனர். பெரிய பெரிய கறுத்தக் கொழும்பு மாம்பழங்கள் கொழுகொழு என்றிருந்தது மட்டுமல்ல வாசமும் தூக்கியடித்தது. விரல்களால் மெதுவாக அமத்திப் பார்த்து பழுத்த பழங்களாக இரண்டு பழங்களை கையில் எடுத்து முகர்ந்து பார்த்தேன். திருப்திப் படாமல் போகவே அதை வைத்துவிட்டு சற்றுப் பெரிதான ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்தேன்.

எனக்கருகே "க்ளுக்" என்ற சிரிப்பொலி கேட்டது.

திடுக்கிட்ட நான், என்னை நானே சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த போது தான் அவள் கண்ணில் பட்டாள். கால்களை மடித்து முழங்கால்களைக் கைகளால் அணைத்தபடி ஸ்ரோர் ரூம் மூலையில் கிடந்த பலகைக் கட்டிலில் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். ஒரு நிமிடம் திகைத்துப்போய் நின்றேன். இவளேன் இங்கே மௌனமாய் உட்கார்ந்து இருக்கிறாள்.

"ஏய் பிரியா, ஏன் இங்கே தனியே உட்கார்திருக்கிறாய்?" என்றேன்.

"சும்மாதான்" என்றாள் தலை குனிந்தபடி.

"உனக்கு இங்கே இருட்டிலே இருக்கப் பயமேயில்லையா?"

"இல்லையே" என்று தலையசைத்தாள்.

"நாங்க சாப்பிடப்போறோம். நீயும் வாவேன் சாப்பிட.."

"நான் அங்கெல்லாம் வரக்கூடாது"

"வரக்கூடாதா.. ஏன்? யார் சொன்னா?"

"அம்மா!"

"தண்டனையா, அப்போ மாம்பழம் சீவிக்கொண்டு வந்து தரட்டா"

"ம்.. கூம்.. வேண்டாம். நான் சாப்பிடக்கூடாது"

"ஏன் உனக்கு மாம்பழம் பிடிக்காதா?"

"பிடிக்கும்!"

"பிடிக்குமா, அப்போ ஏன்?"

"அப்படித்தான்..!"

"அப்போ எங்களோட விளையாட வரமாட்டியா?"

"இனிமேல் வரமாட்டேன்!"

"ஏன் என்னாச்சு உனக்கு? எங்களோட கோபமா? என்னைப்பார்த்துச் சொல்லு" மெல்ல அருகே நகர்ந்தேன்.

"கிட்ட வராதே வேணாம் கிட்ட வராதே" கைகளை குறுக்கே அசைத்துத் தடுத்தாள்.

இவ்வளவு காலமும் இல்லாத பதட்டம் இவளுக்கு இப்போ ஏன் வந்தது?

அவளை முறைத்துப் பார்த்தேன், அவளது கண்கள் கலங்கியிருந்தன. அவளோ அழுதுவிடுவாள்போலக் கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தாள். எனக்கு எதுவும் புரியவில்லை. இருட்டறைக்குள் இப்படி ஏன் உட்கார்ந்திருக்கிறாள்?

"வேண்டாம் என்றால் போ" என்று சொல்லிவிட்டு பசி வயிற்றைக் குடையவே நான் மாம்பழங்களை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தேன்.

"ஏன்டா இவ்வளவு நேரம்?" என்ற அத்தையிடம் மாம்பழங்களைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தேன். அத்தை பழங்களின் தோலைச் சீவி, சிறுதுண்டுகளாக நறுக்கி எனது தட்டில் போட்டாள். ஒரு கவளம் பிட்டும், ஒரு கடி மாம்பழமும்.. ஆகா என்ன ருசி. மாங்கொட்டையைச் சூப்பிவிட்டு திருப்தியோடு எழுந்து கை அலம்பினேன்.

சாப்பிட்டு முடித்தாலும் சிந்தனை எல்லாம் ஸ்டோர் ரூமைச் சுற்றித்தான் இருந்தது. இருட்டறைக்குள் தனிமையில் பிரியா ஏன் உட்கார்ந்திருக்கிறாள்?

நேற்று நடந்ததை நினைத்துப் பார்த்தேன். கண்ணாமூச்சி விளையாடும் போது அவள் திடீரென அழுதது ஞாபகம் வந்தது. அந்த இருட்டறையில்தான் கட்டிலுக்குப் பின்னால் அவளுக்குப் பக்கத்தில் நானும் ஒளித்திருந்தேன். யாரோ உள்ளே தேடிவரும் காலடியோசை கேட்டது.

"ஸ்.. யாரோ தேடி உள்ளே வர்றாங்க..!" அந்தச் சிறிய இடத்தில் கட்டிலுக்குப் பின்னால் இடித்துக்கொண்டு இருட்டுக்குள் என்னோடு ஒளித்திருந்த அவளது காதுக்குள் கிசுகிசுத்தேன். சற்று நேரம் அறைமுழுவதும நிசப்தம் நிலவியது. தேடிப்பிடிக்க வந்தவன் இருட்டுக்குள் எங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் திரும்பிச் செல்லும் காலடி ஓசை காதில் மெல்ல விழுந்தது. அதையும் மீறி பிரியா மூச்சிரைக்கும் சத்தம் கேட்டது.

"ஏய்.. கையை எடுக்கிறியா?"

அவளது தோளின் மேல் எனது கை பட்டிருந்ததை அப்போதுதான் நானும் அவதானித்தேன்.

யாரும் உள்ளே இல்லை, ஆனாலும் காரணம் சொல்லாமல் திடிரென அவள் விம்மி அழுதது எனக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. தப்பித்தவறி வேறு எங்கேயாவது பட்டிருக்குமோ?

"ஏய்,.. ஏன் அழுகிறாய்?" என்று பதட்டத்துடன் கேட்டேன். அவள் எதுவும் சொல்லாமல் மிரண்டு போனவள்போல மீண்டும் ஓவென்று அழுதாள்.

"வா, வெளியே போயிடுவோம்" என்றேன்.

"மாட்டேன்" என்று அடம் பிடித்தவள் மீண்டும் விம்மினாள்.

பயந்துபோன நான் அத்தையிடம் ஓடிப்போய் முறையிட்டேன். அத்தை ஸ்டோர் ரூமுக்குள் வந்து அவளிடம் ஏதோ கேட்டுவிட்டு, தறதறவென்று அவளை இழுத்துச் சென்றாள். எனக்குப் பயமாக இருந்தது. அவள் அழுததற்குக் காரணம் நான்தான் என்று என்னை வம்பில் மாட்டி விடுவாளோ என்ற பயம் எனக்குள் இருந்தது.

அப்புறம் சற்று நேரம் கழித்து பக்கத்து வீட்டுப் மாமியை அவசரமாக அழைத்து வரச் சொன்னாள் அத்தை. நாங்கள் பீ..பீ என்று ஹார்ண் அடித்துக் கைகளால் கார்விட்டபடியே ஓடிப்போய் மாமியை அழைத்து வந்தோம். அத்தையும் மாமியும் ஏதோ கிசுகிசுத்தார்கள். எங்களை வெளியே போய் விளையாடச் சொல்லிவிட்டு அவளைக் கிணற்றடிக்குக் கொண்டு சென்று தலையிலே தோயவார்த்தனர். அப்புறம் என்ன நடந்தது என்று தெரியவில்லை. நாங்கள் விளையாடிவிட்டு வந்து அந்தக் களைப்பில் அப்படியே தூங்கிவிட்டோம்.

இன்று இவள் இந்த அறையில் தனிமைப்படுத்தப் பட்டிருந்தாள். கேட்டால் எதுவும் சொல்ல மறுக்கிறாள். அத்தை நல்லெண்ணையும், முட்டையும் எடுத்துக் கொண்டு ஸ்டோர் ரூமுக்குப் போவதை அவதானித்தேன்.

"அத்தை, பிரியா எங்களோட விளையாட வரமாடேன் என்கிறாள்" என்று முறைப்பாடு செய்தேன்.

"இனிமே அவள் உங்களோட எல்லாம் விளையாட வரமாட்டாள்" என்றாள் அத்தை.

"ஏன் அத்தை?" என்றேன்.

"அப்படித்தான்..!" அத்தை ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

(தொடர்ச்சி 21 பக்கம்)

*(20ம் பக்கத் தொடர்ச்சி)*

# *தாயகக் கனவுடன்...*

அன்று ஞாயிற்றுக்கிழமை, அப்பா வந்து எங்களை அழைத்துப் போகப்போவதாக அத்தை சொன்னாள். நாங்க அப்பாவோட போயிடுவோம் என்பதால் நானும் தங்கையும் பிரியாவிடம் விடைபெறச் சென்றோம். நான் தயங்கித் தயங்கி நின்றேன். எத்தனை நாளைக்குத்தான் இவள் இந்த இருட்டறைக்குள் அடைந்து கிடக்கப் போகிறாளோ?

இருட்டறைக்குள் நிற்கப் பயந்த தங்கை அவளை அணைத்து முத்தம் கொடுத்து, அவளுக்கு பாய் சொல்லிவிட்டு சட்டென்று வெளியேறினாள். நானும் என் பங்குக்கு அருகே சென்று,

"ஏய் பிரியா, நாங்க போயிட்டு வர்றோம்" என்று கை அசைத்துக் காட்டிவிட்டுத் திரும்பினேன்.

சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவள் சட்டென்று என் கையை எட்டிப்பிடித்து இழுத்தாள். நான் தடுமாறித் திரும்பிப் பார்த்தேன்.

என்னை நானே சுதாரித்துக் கொள்ளுமுன் என்னை அருகே இழுத்துக் கன்னத்தில் அழுத்தி முத்தம் ஒன்று பதித்தாள்.

"ஏய் என்ன செய்கிறாய்?" நான் தடுமாறிப்போனேன்.

"எனக்கு இந்த கறுத்த கொழும்புதான் பிடிக்கும்" என்று காதுக்குள் மெதுவாகச் சொன்னவள் சட்டென்று என்னை அணைத்தாள், அவளது மூச்சுக் காற்று கன்னத்தில் சுட்டதில் உடம்பு சிலிர்த்தது.

உறைந்து போய் நின்ற நான், அத்தை அழைக்கும் குரல் கேட்கவே, கன்னத்தைத் தடவிக்கொண்டு மெல்ல வெளியேறினேன்.

சுகமான அந்த அனுபவம் மீண்டும் அவளைத் தேடிப் போக வைத்தது. அடுத்த விடுமுறைக்கு ஆவலோடு ஓடிவந்தபோது பிரியாவை எங்களோடு சேர்ந்து விளையாட அனுமதிக்கவில்லை. அத்தை சொன்னதுபோல பெரியபிள்ளையானதால் அவள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தாள்.

குமர்ப்பிள்ளைகளோடு கண்டபடி பேசக்கூடாது என்ற அம்மாவின் அறிவுறுத்தல் ஒரு பக்கம் என்னைப் பின்வாங்க வைத்தது. நாங்கள் வெளியே ஓடியாடி விளையாடும் போதெல்லாம் அறை யன்னலுக்கால் அவள் ஏக்கத்தோடு எட்டிப்பார்ப்பதை அவதானித்திருக்கிறேன். சமுதாயக் கட்டுப்பாடுகள் எங்கள் இருவரையும் நெருங்கவே விடவில்லை.

அவள் வளர்ந்து அழகாய் கவர்ச்சியாய் இருந்தது மட்டுமல்ல, அவளிடம் சில மாற்றங்களையும் அவதானித்தேன்.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக மூன்றாம் வருடம் எங்களால் விடுமுறைக்குப் போகமுடியவில்லை. அதற்கு அடுத்த வருடம் போவதென்று முற்கூட்டியே ஆயத்தங்கள் செய்தபோதுதான் அந்தச் செய்தி வந்தது.

பிரியா வீட்டைவிட்டுப் போய்விட்டதாகவும், விடுதலைப் போராட்டத்தில் அவளுக்கு இருந்த ஈடுபாடு காரணமாக அவள் இயக்கத்தில் சேர்ந்து விட்டதாகவும் செய்திகள் வந்தன. எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது.

பிரியாவா.. எப்படி..? தாய்மண்ணை நேசித்த வயது வந்த ஒரு பெண் என்பதால் அவளது விருப்பத்தை யாராலும் தடுக்க முடியவில்லை.

ஆண்களைவிடப் பெண்களிடம்தான் இனவுணர்வு அதிகமாக இருக்கலாம் என நான் நினைத்தேன். மகளின் பிரிவால் மட்டுமல்ல, யுத்தம் காரணமாக அவர்களின் குடும்பமும் சொல்லெனாத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு சொந்த வீட்டைவிட்டு இடம் பெயரவேண்டி வந்தது. யுத்தம் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டாலும், இறுதி யுத்தத்தின் போது பிரியாவிற்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

கால்களை மடித்து முழங்கால்களைக் கைகளால் அணைத்தபடி ஸ்ரோர் ரூம் மூலையில் கிடந்த பலகைக் கட்டிலில் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்த, கள்ளங்கபடமற்ற அவளின் சிரிப்புத்தான் என் மனதில் பதிந்து நின்றது. தங்களிடம் சரணடைந்தவர்களையே இல்லை என்று சொல்லும்போது, ஏமாற்றப்பட்ட இனத்தைச் சேர்ந்த இவள் இருக்கிறாளா இல்லையா என்பது கூட உறவுகளுக்குத் தெரியாத ஒரு அவலம்.

"அம்மா, அத்தைப்பாட்டி வீடு எல்லாம் இடிஞ்சு போய்க்கிடக்குது. அதைப் பார்த்ததும் அப்பாவிற்கு அழுகையே வந்திடிச்சு" என்றாள் என் மகள் சுவேதா தாயைப்பார்த்து.

எனது மனைவி சங்கீதம் கற்றவள். பாரதி பாடல்கள் என்றாள் அவளுக்கு மிகவும் பிடித்தமானவை. என் கண்கள் கலங்கியிருந்ததை அவளும் அவதானித்திருக்க வேண்டும்.

"பின்னே இருக்காதா, இந்த அநியாயத்தைப் பார்த்தால் யாருக்குத்தான் அழுகை வராது".

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிவ்வீடே.. அதன் முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே.." என்ற பாரதி பாடலின் வரிகளைச் சற்று மாற்றி மெல்லிய குரலில் பாடியபடியே கலங்கிய கண்களோடு என் கைகளைப்பற்றிச் சமாதானப் படுத்தினாள்.

நான் ஏன் அழுதேன் என்பது, என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. மண்ணை நேசித்த தியாகிகளுக்காகக் கண்ணீரைத் தவிர வேறெதைத் தரமுடியும்?

## வீணாவின் கவிக்கணை

காசு பணம் எவ்வளவு இருந்தாலும்,
கோபுரம் போல் வீட்டில் வாழ்ந்தாலும்,
வீடு முழுதும் சொந்தங்கள் இருந்தாலும்
உன்னை உண்மையாக நேசிக்கவோ,
உன்னுடன் சேர்ந்து வாழ்நாள்
முழுவதும் பயணிக்கவோ
உனக்கானவனோ அல்லது
உனக்கானவளோ
இல்லையெனில்,
அவளும் சரி, அவனும் சரி
வாழ்நாள் அனாதைகளே.






(13ம் பக்கத் தொடர்ச்சி)

**One can't think of a better example of the integration of the Väddas and the Sinhala people. That some Väddas shared high social status with the Sinhala others.–that is to say, they were not just primitive hunters and gatherers.**

வேடர்களும் சிங்கள மக்களும் ஒன்றிணைந்தமைக்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டை யாரும் நினைக்க முடியாது. சில வேட்டுவர்கள் சிங்களவர்களுடன் உயர் சமூக தகமையை பகிர்ந்து கொண்டனர்.-அதாவது, அவர்கள் பழமையான வேட்டைக்காரர்கள் மற்றும் (உணவு) சேகரிப்பாளர்கள் மட்டுமல்ல.

**Here is another example from Obeyesekere' s work that shows the integration of the Vaddas with the mainstream and that they like their Sinhala neighbors. have taken to agriculture.:**

ஒபயசேகராவின் படைப்புகளில் இருந்து மற்றொரு எடுத்துக்காட்டு. இது வேடர்கள் மைய நீரோட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படுவதையும் அவர்கள் அயலவர்களான சிங்களவர்கள் போல் விவசாயத்திற்கு மாறியுள்ளனர்.:

**The text goes on to say that King Prakramabahu (that is Vira Prakrama) gave the Vädda followers of Eriyave Malala Vädda equal proportions of land from the four sub-districts (hatara pattuva) of the Vanni and advised them not to quarrel among themselves. Their lands were demarcated with stone markers, earth bunds and with fences made of sticks (that presumably will sprout). The king also gave deeds of gift or sannas indicating that the lands were theirs "till the sun and moon lasted," a standard phrase in all such deeds. When they were given the lands they were now to be called vanni unnähäla or "lords of the Vanni" by royal command and they were entitled to dues and/or services from villages of carpenters (k ṭṭ badda), washer folk (rada-badda), drummers (berava-badda), and villages that have unspecified new sources of services (nava-badda).**

வன்னியின் நான்கு துணை மாவட்டங்களிலிருந்தும் (ஹட்டார பட்டுவா) எரியவே மலல வட்டத்தின் வேட்டைப் பின்பற்றுபவர்களுக்கு மன்னன் பராக்கிரமபாகு (அதாவது வீர பராக்கிரமன்) சமமான நிலத்தை வழங்கியதாகவும், தங்களுக்குள் சண்டையிட வேண்டாம் என்று அறிவுறுத்தியதாகவும் உரை தொடர்கிறது. அவர்களின் நிலங்கள் எல்லைக் கற்கள், மண் கட்டுகள் மற்றும் குச்சிகளால் ஆன வேலிகள் (ஊரகமாக துளிர்விடும்) ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டன. "சூரியனும் சந்திரனும் இருக்கும் வரை" நிலங்கள் தங்களுடையவை என்பதைக் குறிக்கும் காணிக்கை அல்லது சன்னங்களையும் மன்னர் வழங்கினார். அவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டபோது, அரச கட்டளையால் அவர்கள் இப்போது வன்னி உன்னஹாலா அல்லது "வன்னியின் பிரபுக்கள்" என்று அழைக்கப்படுவார்கள், மேலும் அவர்கள் தச்சர்களின் **(k ṭṭ badda),** சலவைத் தொழிலாளர்கள் **(rada-badda)** கிராமங்களில் இருந்து நிலுவைத் தொகை மற்றும்/அல்லது சேவைகளுக்கு உரிமையுடையவர்கள். பறையடிப்போர் (பேரவா-பட்டா), மற்றும் குறிப்பிடப்படாத புதிய சேவை ஆதாரங்களைக் கொண்ட கிராமங்கள் (நவ-பத்தா).

**It is clear from these descriptions that the Vaddas were not isolated from the mainstream society but were an essential part of it.**

இந்த விளக்கங்களிலிருந்து, வேடர்கள் மைய சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படவில்லை, மாறாக அதன் இன்றியமையாத பகுதியாக இருந்தனர் என்பது தெளிவாகிறது.

**Where have all the Väddas gone?** எல்லா வேடர்களும் எங்கே போனார்கள்?

**The numbers of the Vadda people have dwindling seriously over the years leading to this question.**

இந்தக் கேள்விக்குக் காரணம் பல ஆண்டுகளாக வேட்டுவ மக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது.

**Here is Obeyesekere' s summary:**
**"I want to make a preliminary conclusion by addressing the implications of the physical omnipresence of the Väddas, if not their demographic significance, in a tentative manner. Let me emphasize that as far as Sri Lanka was concerned there were no "indigenous peoples," no "aborigines," no "wild men" and "tribes" of the Western imagination. I am as much an "aborigine" as anyone else and as genetically and culturally hybrid.**

ஒபயசேகராவின் சுருக்கம் இதோ:
"வட்டாக்களின் மக்கள்தொகை முக்கியத்துவம் இல்லாவிட்டாலும், அவர்களின் உடம்பால் எங்கும் பரவியிருப்பதன் தாக்கங்களை தற்காலிகமான முறையில் எடுத்துரைப்பதன் மூலம் நான் ஒரு தொடக்க முடிவை எடுக்க விரும்புகிறேன். இலங்கையைப் பொறுத்த வரையில் மேற்கத்திய கற்பனையின் "பூர்வீக மக்கள்," "பூர்வகுடிகள்," "காட்டு மனிதர்கள்" மற்றும் "பழங்குடிகள்" இல்லை என்பதை வலியுறுத்துகிறேன். நான் மற்றவர்களைப் போலவே ஒரு "பூர்வகுடி" மற்றும் மரபணு மற்றும் கலாச்சார ரீதியாக கலப்பினமாக இருக்கிறேன்.

**Nowadays, we are accustomed to think that the main structural opposition in history is between Sinhalas and Tamils. Yet, this oppositional relationship is a historically contingent one, that is, it depends on particular historical circumstances such that periods of Sinhala-Tamil opposition might be followed by alliances expressive of amity; or both opposition and amity might co-exist in the same time span; at other times neither opposition nor amity seem to matter and both communities went on "living and partly living" if I might borrow a well-known phrase."**

தற்காலத்தில், வரலாற்றில் பிரதானமான கட்டமைப்பு எதிர்ப்பு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலானது என்று நாம் சிந்திக்கப் பழகிவிட்டோம். ஆயினும்கூட, இந்த எதிர்ப்பு உறவு என்பது வரலாற்று ரீதியாகத் தொடர்பற்றது, அதாவது, சிங்கள - தமிழ் எதிர்ப்புக் காலங்களைத் தொடர்ந்து நல்லுறவை வெளிப்படுத்தும் கூட்டணிகள் வரலாம் என்பது போன்ற குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளைச் சார்ந்தது அல்லது எதிர்ப்பு மற்றும் நட்பு இரண்டும் ஒரே நேரத்தில் ஒன்றாக இருக்கலாம் மற்ற சமயங்களில் எதிர்ப்போ அல்லது நட்புறவோ முக்கியமில்லை, மேலும் நான் நன்கு அறியப்பட்ட சொற்றொடரைக் கடன் வாங்கினால் இரு சமூகங்களும் "வாழும் மற்றும் ஓரளவு வாழ்கின்றன".

**Obeyesekere' s conclusion about the significance of his work in modern Sri Lanka needs to be quoted in full:**
**"Ultimately, we hope that this research questions the current nationalist ideology of the Sinhala-Buddhists that Sri Lanka was an exclusive Buddhist civilization. I hope to eventually demonstrate that the non-Buddhist Väddas were a powerful visible presence although their approximate numbers cannot be calculated. Contrary to early European and current Buddhist prejudice we shall show that there was a constant interplay between Väddas and Sinhala Buddhists, such that over historical time Väddas could become Sinhala Buddhists and Sinhala Buddhists could become Väddas."**

நவீன இலங்கையில் அவரது பணியின் முக்கியத்துவம் பற்றி ஒபயசேகரவின் முடிவானது முழுமையாக மேற்கோள் காட்டப்பட வேண்டும்:
"இறுதியில், இலங்கை ஒரு பிரத்தியேக பவுத்த நாகரீகம் என்ற சிங்கள-பௌத்தர்களின் தற்போதைய தேசியவாத சித்தாந்தத்தை இந்த ஆய்வு கேள்விக்குள்ளாக்குகிறது என்று நாங்கள் நம்புகிறோம். பவுத்தர் அல்லாத வேடர்கள் அவர்களின் தோராயமான எண்ணிக்கையைக் கணக்கிட முடியாத போதிலும் அவர்கள் ஒரு சக்திவாய்ந்த புலப்படும் இருப்பு என்பதை இறுதியில் நிரூபிக்க நம்புகிறேன். ஆரம்பகால ஐரோப்பிய மற்றும் தற்போதைய பௌத்த தப்பெண்ணத்திற்கு மாறாக, வேதாக்களுக்கும் சிங்கள பௌத்தர்களுக்கும் இடையில் ஒரு நிலையான தொடர்பு இருந்ததைக் காண்பிப்போம், அதாவது வரலாற்று காலத்தில் வத்தர்கள் சிங்கள பவுத்தர்களாகவும் சிங்கள பவுத்தர்கள் வேதாக்களாகவும் மாறலாம்.

**Another of his observations deserves to be quoted too:**
**"This leads to my final point: if Vädda versus Sinhala was a structural opposition of the long run and a historically consistent phenomenon> the opposition between Tamil and Sinhala was historically contingent> and only emerges when Tamilness is associated with false belief or heresy. Otherwise> Tamil affinity> in its technical sense> is intrinsic to Sinhala-ness and this is primordially recognized in the Vijaya story of Sinhala origins. The historically contingent oppositional feature against which the Sinhala place themselves is the Tamil-Shaivite one and that also when it is expressed in terms of invasion or conquest. This is in radical contrast to the oppositional dialectic of Tamil and Sinhala nationalism of our own day. However> the Kandyan discourse> as with contemporary nationalism> anchors the discourse on the exemplary example of "kings of yore." Is this an invention of tradition or a truth about history or both?**

அவருடைய மற்றொரு அவதானிப்பும் மேற்கோள் காட்டத் தக்கது:
"இது எனது இறுதிக் கருத்துக்கு இட்டுச் செல்கிறது: வேடர் மற்றும் சிங்களம் என்பது நீண்ட காலத்திற்கு ஒரு கட்டமைப்பு எதிர்ப்பாகவும், வரலாற்று ரீதியாக நிலையான நிகழ்வாகவும் இருந்தால், தமிழுக்கும் சிங்களத்துக்கும் இடையிலான எதிர்ப்பு வரலாற்று ரீதியாகத் தொடர்ந்தது. மேலும் தமிழினம் தவறான நம்பிக்கை அல்லது மதவெறியுடன் தொடர்புடையதாக இருக்கும்போது மட்டுமே வெளிப்படுகிறது. மற்றபடி, தமிழ்த் தொடர்பு, அதன் தொழில்நுட்ப அர்த்தத்தில், சிங்கள - தன்மைக்கு உள்ளார்ந்ததாக உள்ளது. மற்றும் இது சிங்கள தோற்றம் பற்றிய விசயன் கதையில் முதன்மையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்கள் தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்ளும் வரலாற்றுத் தற்செயலான எதிர்ப்பு அம்சம் தமிழ் - சைவர் இனமாகும், அதுவும் படையெடுப்பு அல்லது வெற்றியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் போது. இது நமது நாளில் தமிழ் மற்றும் சிங்கள தேசியவாதத்தின் எதிர்ப்பு இயங்கியலுக்கு முற்றிலும் மாறுபட்டது. எவ்வாறாயினும், சமகால தேசியவாதத்தைப் போலவே கண்டிய சொற்பொழிவுகளும், "முந்தைய அரசர்களின்" முன்மாதிரியான உதாரணத்தில் உரையை தொகுத்து வழங்குகின்றன. இது பாரம்பரியத்தின் கண்டுபிடிப்பா அல்லது வரலாறு பற்றிய உண்மையா அல்லது இரண்டுமா?

**He observes in conclusion:**
**"Ultimately, we hope that this research questions the current nationalist ideology of the Sinhala-Buddhists that Sri Lanka was an exclusive Buddhist civilization. I hope to eventually demonstrate that the non-Buddhist Väddas were a powerful visible presence although their approximate numbers cannot be calculated. Contrary to early European and current Buddhist prejudice we shall show that there was a constant interplay between Väddas and Sinhala Buddhists, such that over historical time Väddas could become Sinhala Buddhists and Sinhala Buddhists could become Väddas."1**

அவர் முடிக்கும் போது பின்வருமாறு அவரது பார்வை இவ்வாறு இருக்கிறது. வில் கவனிக்கிறார்:
"இறுதியில், இலங்கை ஒரு தனித்துவமான பவத்த நாகரீகம் என்ற சிங்கள- பவுத்தர்களின் தற்போதைய தேசியவாத சித்தாந்தத்தை இந்த ஆய்வு கேள்விக்குள்ளாக்குகிறது என்று நாங்கள் நம்புகிறோம். பவுத்தர் அல்லாத வேடர்கள் அவர்களின் தோராயமான எண்ணிக்கையைக் கணக்கிட முடியாத போதிலும் அவர்கள் ஒரு சக்திவாய்ந்த புலப்படும் இருப்பு என்பதை இறு-தியில் நிரூபிக்க நம்புகிறேன். ஆரம்பகால அய்ரோப்பிய மற்றும் தற்போதைய பவுத்த தப்பெண்ணத்திற்கு மாறாக, வேடர்களுக்கும் சிங்கள பவத்தர்களுக்கும் இடையில் ஒரு நிலையான தொடர்பு இருந்ததைக் காண்பிப்போம். அதாவது வரலாற்றுக் காலத்தில் வத்தர்கள் சிங்கள பவுத்தர்களாகவும் சிங்கள பௌத்தர்கள் வேடர்களாகவும் மாறலாம்.

**This work, ostensibly about the Väddas, is much more than that: It is, to begin with, about the heterogeneous composition of Lankan society with the Sinhala society as the dominant one but the Sinhalas contain former and current Väddas, Indians such as the Mallalas from Malladesa, Malayalees from Kerala, Tamils from Tamil Nadu, many of whom came as soldiers to fight for the local kings and some were given land grants in return for their services and stayed behind.**

இந்த ஆக்கம், வேடர்களைப் பற்றிய வெளித்தோற்றத்தில், அதைவிட மேலானது: இது, தொடங்குவதற்கு, சிங்கள சமூகத்தை ஆதிக்கம் செலுத்தும் இலங்கை சமூகத்தின் பன்முகத்தன்மை பற்றியது. மல்லதேசத்தில் இருந்து மல்லர்களும், கேரளாவிலிருந்து மலையாளிகள், தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள், அவர்களில் பலர் உள்ளூர் அரசர்களுக்காகப் போரிடபடை வீரர்களாக வந்தவர்கள். மற்றும் சிலருக்கு அவர்களின் சேவைகளுக்கு ஈடாக நில மானியம் வழங்கப்பட்டு பின் இங்கேயே (இலங்கை) தங்கிவிட்டனர்.

**Obeyesekere further challenges the simple use of the logic of structuralist theories. While its basic premises, in my view, are not disputable, it can be used in crude and mechanical ways: the civilized (we) and savages (they), we (eaters of animals and birds) and they (eaters of each other), we (have great literature and you don't.) George Babington McCauley famously said:"A single shelf of a good European library was worth the whole native literature of India and Arabia." And so it goes.**

ஒபயசேகர மேலும் கட்டமைப்புவாத கோட்பாடுகளின் தர்க்கத்தின் எளிமையான பயன்பாட்டுக்கு அறைகூவல் விடுகிறார். அதன் அடிப்படை, என் பார்வையில், விவாதத்துக்குரியவை அல்ல என்றாலும், இது மொட்டையாக மற்றும் இயந்திர வழிகளில் பயன்படுத்தப்படலாம்: நாகரிகம் (நாம்) மற்றும் காட்டுமிராண்டிகள் (அவர்கள்), நாங்கள் (விலங்குகள் மற்றும் பறவைகளை உண்பவர்கள்) மற்றும் அவர்கள் (ஒருவருக்கொருவர் உண்பவர்கள்), எங்களிடம் (சிறந்த இலக்கியங்கள் உள்ளன, உங்களிடம் இல்லை.) யோர்ஜ் பாபிங்டன் மெக்காலே **(George Babington McCauley )** பிரபலமாகக் கூறினார்: "ஒரு நல்ல அய்ரோப்பிய நூலகத்தின் ஒரு அடுக்கம் **(shelf)** இந்தியா மற்றும் அரேபியாவின் முழுப் பூர்வீக இலக்கியத்திற்கும் மதிப்புள்ளது." அதனால் அது செல்கிறது.

**Clearly anthropologising Sri Lanka through empirical studies, with both historical data and studies of modern times have inestimable value in every imaginable way and this work is a signal example of the contribution that such studies can make to dispel misconceptions as well as ideological reconstructions.2**

அனுபவ ஆய்வுகள் மூலம் இலங்கையைத் தெளிவாக மானுடவியல் ஆக்குவது, வரலாற்றுத் தரவுகள் மற்றும் நவீன கால ஆய்வுகள் ஆகிய இரண்டும் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு வகையிலும் மதிப்பிட முடியாத மதிப்பைக் கொண்டுள்ள. மேலும் தவறான எண்ணங்களையும் கருத்தியல் புனரமைப்புகளையும் அகற்றுவதற்கு இத்தகைய ஆய்வுகள் ஆற்றக்கூடிய பங்களிப்பிற்கு இந்த ஆய்வு ஒரு சமிக்ஞை எடுத்துக்காட்டு.

**NOTES**/குறிப்புகள்

**1. Obeyesekere discusses these topics with due regard to evidence and connects them to the larger story of Sri Lanka while keeping faith with his theme of the search for the hunter. The documents from which he draws his information were composed in the immediacy of the people and the events they describe and have a strong claim to authenticity.**

1. ஒபயசேகரா இந்த தலைப்புகளை ஆதாரங்களுடன் விவாதித்து, வேடுவர்களைத் தேடும் தனது கருப்பொருளில் நம்பிக்கை வைத்து, அவற்றை இலங்கையின் பெரிய கதை-யுடன் இணைக்கிறார். அவர் தனது தகவல்களைப் பெறும் ஆவணங்கள் மக்கள் மற்றும் அவர்கள் விவரிக்கும் நிகழ்வுகளின் உடனடித் தன்மையில் உருவாக்கப்பட்டன மற்றும் நம்பகத்தன்மைக்கு வலுவான உரிமையைக் கொண்டுள்ளன.

**One may add these documents are in many ways comparable the Doomsday Book from England and the Scottish Chronicles and the Anglo-Saxon Chronicle>.**

இந்த ஆவணங்களை இங்கிலாந்து மற்றும் ஸ்கொத்தி' புராண வரலாறுகள் **(Scottish Chronicles)** மற்றும் ஆங்கிலோ-சாக்சன் புராண வரலாறுகள் **(Anglo-Saxon Chronicle)** போன்றவற்றின் இறுதித் தீர்ப்பு நாள் புத்தகம் (னுழழஅளனயல டீழழம) பல வழிகளில் ஒப்பிடலாம்.

**2. One can see also the use of the Vaddas and their relations with the Sinhala people in Leonard Woolf's novel The Village in the Jungle.It shows the Sinhala characters treating the Vadda people with contempt To treat them thus, it is obvious that they were not isolated in jungle habitats but part of the community. Further, Woolf's characters both the Vaddas and the Sinhalas are shown to be hunting for their sustenance. It seems to me that Woolf was describing not only a village in the jungle but also jungle in the village! Woolf must surely know since he was king of Beddagama—or at least the agent of King George of England!**

2. லியோனார்ட் வூல்ஃப்பின் தி வில்லேஜ் இன் தி ஜங்கிள் நாவலில் **(Woolf's novel The Village in the Jungle)** வேடர்களின் பாவனையையும் சிங்கள மக்களுடனான அவர்களின் உறவுகளையும் ஒருவர் பார்க்கலாம். சிங்கள கதாபாத்திரங்கள் வேட்டுவ மக்களை இழிவாக நடத்துவதை இது காட்டுகிறது. அவர்கள் காடுகளின் வாழ்விடங்களில் தனிமைப்படுத்தப்படவில்லை, சமூகத்தின் ஒரு பகுதியாக இருந்தார்கள். மேலும், வூல்ஃப் கதாபாத்திரங்கள் வேடர்கள் மற்றும் சிங்களவர்கள் இருவரும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக வேட்டையாடுவதாகக் காட்டப்படுகின்றன. வூல்ஃப் காட்டில் உள்ள ஒரு கிராமத்தை மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள காட்டையும் விவரிக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது! வூல்ஃப் பெத்தகமவின் **(Beddagama)** அரசனாக இருந்து - அல்லது குறைந்த பட்சம் இங்கிலாந்தின் யோர்ஜ் மன்னரின் முகவராக இருந்ததை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும்!

***Robert Sidharthan Perinbanayagam – Professor of Sociology (emeritus), Hunter College of the City University of New York**


கல்கண்டு ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் அவர்களிடமிருந்து உதயன் 2001 கவிதைப் போட்டியின் முதல் பரிசாக தங்கப் பதக்கம் பெறும் நமது கவிஞர் புகாரி

# கனடாவில் தமிழ்க் கவிதைகளை ஓர் இயந்திர ஆற்றல் போன்று எழுத ஆரம்பித்த கவிஞர் புகாரி 'சிந்தனைப்பூக்கள்' எஸ். பத்மநாதன்

**க**னடாவில் தமிழ்க் கவிதைகளை ஓர் இயந்திர ஆற்றல் போன்று எழுத ஆரம்பித்தகவிஞர் புகாரிக்கு. 2001ம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசுக்கான தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தது. இதுவே கனடாவில் இவரது ஆரம்பப் படியும் தட்டிக் கொண்ட தங்கப் பரிசுமாகும்.

இவ்வாறு கனடா வாழ் விருது பெற்ற இலக்கியவாதி சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்கள் கவிஞர் புகாரியின் **"அன்புடன் நயாகரா"** கவிதை நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த கவிதை நூல் எதிர்வரும் **டிசம்பர் 3ம் திகதி** பிற்பகல் 1.30 தொடக்கம் 4.00 மணிவரை ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கிய விழாவில் வெளியிடப்பெறவுள்ளது.

சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்களின் அணிந்துரை இயல்பான இலக்கிய நயத்துடன் பின்வருமாறு தொடர்கின்றது.

***சூரியக் கதிர்களாய் உலகெங்கும் விரியும் வெளிச்சக் கவிதைகள்***

"கடல்தாண்டி இருந்தாலும் தமிழையே சுவாசிக்கும் புகாரியைப் போன்ற படைப்பாளிகளின் புதிய வரவுகளால் தமிழ்க்கவிதை தழைக்கும் என நம்புகிறேன்".

கவிஞர் புகாரியின் முதல் நூலான வெளிச்ச அழைப்புகளுக்கு **கவிப்பேரரசு வைரமுத்து** வழங்கிய அணிந்துரையில் உள்ள வைர வரிகளே இவை.

இந்த வரிகளை இன்றுவரை நிதர்சனமாக்கி, உலகெங்கிலும் செறிந்து வாழும் இலக்கிய நெஞ்சங்களில் ஆழமாக வேரூன்றி நிற்கும் இவரது ஆற்றல் அளவிடக்கரியது. ஒப்பீட்டிற்கும் அப்பாற்பட்டது.

நீராரும் கடலுடுத்த நிலமடந்தையாகிய பரத கண்டத்தின் திலகமான தமிழ்நாட்டில் பிறந்த இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று கணினி வல்லுனராகி தமிழையும் கணினியையும் ஒன்றுசேர்த்தார். இந்த அடிப்படை பின்னணியே இவரை இணையத்தின் அருங்கவிஞராக உயர்த்தியுள்ளது.

தன் நினைவுக்கு வராத காலத்திலேயே கவிதை எழுத ஆரம்பித்த இவரை கவிஞரே என்று பள்ளிக்கூட ஆசிரியர்களே அழைத்தனர். 1979ல் இவரது முதல் கவிதை அலிபாபா சஞ்சிகையில் பிரசுரமானது!

பணி நிமித்தமாக 1981ல் சவுதி அரேபியாவிற்குச் சென்ற இவர் அங்கிருந்துகொண்டே தீபம், தாய், குமுதம் போன்ற சஞ்சிகைகளுக்கு கவிதைகளை அனுப்பலானார். 1987ல் கணினி அச்சு எழுத்துக்களை தமிழுக்கென உருவாக்கி வெற்றிகண்ட இவரது கவிதைகள் சூரியக் கதிர்களாகி உலகெங்கும் விரிகின்றன.

1999ல் கனடாவுக்கு புலம்பெயர்ந்த பின்பே எனக்கு அறிமுகமானார் கவிஞர். இவரது அழகான தமிழ் உச்சரிப்பும், தமிழ் எழுத்தும் தமிழ்ப்-பற்றும் வெகுவாக என்னைக் கவர்ந்துகொண்டன.

**தமிழ்க் கவிதைகளை ஓர் இயந்திர ஆற்றல் போன்று எழுத ஆரம்பித்த இவருக்கு கனடா உதயன் கவிதைப் போட்டியில் முதற் பரிசுக்கான தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தது. இதுவே கனடாவில் இவரது ஆரம்பப் படியாகும்.**

இவரது முதலாவது நூல் 2002ல் வெளிச்ச அழைப்புகள் என்ற பெயரில் கனடாவில் வெளியானது.

முதன்முதலாக தமிழ்நாட்டுக் கவிஞர் ஒருவர் வட அமெரிக்கா ஐரோப்பா ஆகிய மேற்குலக நாடுகளில் கவிதைத் தொகுதி வெளியிட்ட பெருமைக் குரியவர் ஆனார்.

கவிஞர் புகாரியின் பல்வேறு ஆற்றல்கள் ஊடகத்தமிழ் வழியாக வெளிவரத் தொடங்கின. வானொலி, தொலைக்காட்சி, இணையம், மின்குழுமங்கள், முகநூல் போன்றவை அவரது திறன்களை உள்வாங்கிக்கொண்டன.

தமிழகத்திலும் இவரது நூல்கள் வெளியானமையால் கவிப்பேரரசு வைரமுத்து, மூத்த பத்திரிகையாளர் மாலன் தொடங்கி பலரது தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தன் விசாலத்தைப் பெருக்கிக்-கொண்டார். எண்ணற்ற கவிஞர்கள் இன்று இவருடன் பயணிக்-கின்றனர். 5000க்கும் மேற்பட்ட இணைய நேயர்கள் இவருடன் வலம் வருகின்றனர்.

கனடாவில் தமிழர் தகவல் சஞ்சிகை இவருக்கான இலக்கிய விருதினையும் தங்கப்பதக்கத்தையும் 2019ல் வழங்கி கௌரவித்துள்ளது.

கவிஞரின் புதிய இலக்கியத் தடம் அன்புடன் நயாகரா என்ற பெயரில் பதிவாகிறது. பன்னிராயிரம் ஆண்டுகள் வரலாறுகொண்ட நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை. அவ்வண்ணமே இவரின் இக்கவியரங்கக் கவிதைகளையும் வாசகர்கள் வாசித்து வியப்பார்கள் என்று நம்புகின்றேன்.

கவியரங்கக் கவிதைகளை சரமாக்கிய இந்நூல் பத்து அற்புதமான கவிதைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். கவிஞர் புகாரியின் நுண்ணிய உணர்வும், மூச்சும், அறிவும் இவற்றில் அப்படியே விரவிவருகின்றன.

அழகின் ஒலிநயப் படைப்பே கவிதை என்ற அலன் போ (Edgar Allan Poe) என்பவரின் சிந்தனை வரிகளுடன் கவிஞரும் ஒத்துப் போகிறார். கவிதை என்பது கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றின் மொழியாகும். ஹாஸ்லிட் (William Hazlitt) அவர்களது அற்புத வரிகளும் இவருக்குப் பொருந்துகிறது.

முதலாவது கவிதை தமிழ்காப்புத் தொல்காப்பியம். இப்படி ஒரு கவிதையை தொல்காப்பியத்திற்காக எவராவது எழுதி உள்ளார்களோ என்பது தெரியவில்லை. ஆனால், தமிழுக்கும் தமிழருக்கும் முதல் நூலான தொல்காப்பியம் இவரால் பெருமை பெறும் என்று கூறலாம்.

இன்று கிடைக்கப்பெறும் மூத்த தமிழ் இலக்கண நூல், இலக்கிய வடிவில் எழுந்த இலக்கண நூல், ஒல்காப்புகழ் கொண்ட நூல், உயர் தமிழ்ச் செம்மொழி நூல் என்றெல்லாம் புகழ்பெற்ற தொல்காப்பியம், இந்நூலின் முதலாவதாக வருவது மிகவும் பொருத்தமானதே.

தொல்காப்பியா நீ புதுமைக்காரனடா என்று புளகாங்கிதம் கொள்ளும் கவிஞர் அவரை ஞானத் தந்தை என்றும் அழைக்கிறார்.

**பெருவெடிப்பில் பிறந்து**
**சூரியனோடு சுற்றி விளையாடி**
**பூமியையே பெற்றெடுத்தவன் நீயென்று**
**பொய்யழகு கூட்டிப்**
**பாடத் தோன்றுதடா தொல்காப்பியா!**

இப்படிக் கவிதையெழுத கவிஞரால் எப்படி முடிகிறதென வியந்து-போனேன்.

2016 ஜூன் ஐந்தாம் தேதி உலகத் தொல்காப்பிய மன்றம் கனடா கிளையினரின் முத்தமிழ் விழாவில் அரங்கேறிய இக்கவிதை உலகெங்கிலும் சென்று சேரவேண்டும் என்பதே என் அவா.




மொழிதொட்டு இலக்கியம், இலக்கியம் தொட்டு வாழ்க்கை என்ற அறிய சிந்தனையை வழங்கிய தொல்காப்பியருக்கு இது ஓர் அர்ப்பணக் கவிதை.

அடுத்துள்ள கவிதை சொர்க்கம் இரண்டு. இயற்கையை அப்படியே தோய்த்து தன் சொர்க்கங்களான பிள்ளைகளுக்கு அர்ப்பணிக்கும் அற்புதக் கவிஞரே புகாரி. எழிற்கொள்ளை என்ற தலைப்பில் பாடிய இக்கவிதை உண்மையிலேயே ஓர் எழிற்கொள்ளைதான்.

அடுத்துள்ள கவிதை புலம்பெயர் வாழ்வு தேவைதானா? என்பதாகும். இன்றுள்ள சூழ்நிலையில் புலம்பெயர்தல் என்பது தவிர்க்க முடியாத-தாகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்கொள்கின்ற அவலங்களைக் கவிதைகளில் கொட்டித் தீர்க்கிறார் கவிஞர்.

முதலாவதாக எமது தமிழ்மொழி இங்கு அழிந்துபோகுமோ என்று ஏங்குகிறார். ஈழத் தமிழர்கள் பிறந்த மண்ணைவிட்டு ஈர உதடுகளில் இரத்தம் கசியக் கசியப் புலம்பெயர்ந்தனர். இன்று பல்வேறு ஊடகத்திலும், அரசியல் உயர்மட்டத்திலும்கூட உயர்பதவிகள் பெற்று உண்மையாலுமே சொந்த குடிமக்களாகியுள்ளோம் என்று மகிழ்கிறார் கவிஞர்.

அடுத்துள்ள கவிதை மழையல்ல பிழை. அழகு மழை அமுத மழை எனத் தொடங்கிய கவிஞரின் உள்ளம் மழையின் கொடுமைகளைத் தாங்க முடியாமல், டைனசோர் குட்டிகள் என்று சாடுகிறார். மழையைப் பற்றி இன்னொரு கவிஞரால் இப்படி எழுத முடியுமோ என்ற பிரமிப்பை ஏற்படுத்திவிடுகிறது.

அடுத்துள்ள கவிதை விபுலாநந்தர். காரைத்தீவில் பிறந்த விபுலாநந்தர் உலகம் போற்றிய தமிழ் அறிஞர், ஆன்மிக ஞானி, அறநெறியாளர், சிந்தனையாளர், யாழ்நூலைத் தந்த அற்புதர், தமிழ்ப் பாடசாலைகளைக் கட்டியெழுப்பிய முன்னோடி.

இவரைப்பற்றி கவிஞர் எழுதிய பாடலின் பின்னரே முழுமையாக என்னாலும் அறிய முடிந்தது. கவிதை அரங்குகளுக்கு கவிதை இயற்றுவது புகாரிக்கு அவல் தின்கிறமாதிரி. எவ்வளவு சொல்லாட்சிகள், எவ்வளவு நுணுக்கமான பார்வைகள், எவ்வளவு உணர்ச்சிப் பிரவாகங்கள் என்று ஆச்சரியப்படுகிறேன்.

கனடா நூற்றைம்பது என்பது அடுத்துள்ள கவிதை. கனடாவில் முப்பத்தி நான்கு வருடங்களாக வசிக்கும் எனக்கு இதுவே தாயக பூமியாக மாறிவிட்டது. 20 வருடங்களாக கனடாவில் வாழும் கவிஞருக்கும் இது ஒரு தாயகம் போலத்தான். அவர் கனடா பற்றிப் பாடும்போது ஏற்பட்ட மகிழ்ச்சி கவிதைகளில் தெரிகிறது.

கனடா இரண்டாம் தாயகம் அல்ல எங்கள் முதலாம் தாயகம் என்று கூறி மகிழ்ந்துபோகிறார். கனடாவைப் பாராட்டுவது சொர்க்கத்தைப் பாராட்டுவது போல் அல்லவா என்கிறார்.

அடுத்துள்ள கவிதை ஊடகத் தமிழ். ஊடகமே இன்று தமிழ் வளர்க்கும் ஆரம்பப் புள்ளி என்பதனை அழகுற விளக்குகிறார் கவிஞர். தாயிடம் கற்க வேண்டியதை இன்று ஊடகமே ஊட்டுகிறது. ஊடகம் என்பது தமிழின் உயிர். ஊடகத்தமிழ் உயர்ந்தால், தமிழன் உயர்வான் என்கிறார்.

அடுத்துள்ள கவிதை வன்னிமகள். வன்னியில் வாழாது விட்டாலும் வன்னியைப் பற்றி நிறையவே அறிந்துகொண்டவர் கவிஞர். வன்னியில் நிகழ்ந்த யுத்த வலியை அப்படியே கவிதைகளில் வடித்துள்ளார். ஓர் ஈழத் தமிழராகவே மாறியிருக்கிறார். வன்னிமகளின் கண்ணீரில் அவரும் நனைந்து எம்மையும் நனைய வைக்கிறார்.

நாளைய தமிழன் எதிர்காலத் தமிழன் பற்றிய கவிதை. தமிழிலேயே உரையாடுவான் தமிழன், தமிழ் இணையம் கணினி யுகம் ஆளும், தமிழ் என்றும் அழியாது, அறிவியலில் சாதிப்பான் தமிழன் என்று மிக அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். தமிழனாய் வாழ்வோன் எவனோ அவனே தமிழன் என்று இடித்துரைத்து முடிக்கிறார் கவிஞர்.

அடுத்த கவிதை நீராக நானிருந்தால். உயிர் மூல வேர், பரிணாம வேர், மரணமற்ற நீர், உயிர் தந்தேன் உடல் தந்தேன் உணவும் தந்தேன் வேறு என்னதான் தரவில்லை நான், உன் உடல், உன் அழுக்கைக் கழுவுவேன், நானின்றி நீயில்லை உன் எதிர்காலமே நான் தான் நீ எனக்குள் இறங்கு என்று நீர் கூறும் விதமாகக் கவிஞர் கூறுவது சிலிர்க்க வைக்கிறது.

கவியரங்கக் கவிதைகளை இவ்வாறு ஒன்றுசேர்த்து தொகுத்த ஒரு நூலை நான் இதுவரை பார்க்கவில்லை. அளவுக்கு மீறிய பிரமிப்பைத் தரும் கவிதைகளை என்னால் இத்தொகுப்பில் பார்க்க முடிகிறது.


உலகத் தமிழ் ஊடாக உலகறிந்த கவிஞராக வலம்வரும் இவரது கவிதைகள் அனைத்தும் இவரது ஆத்மாவிலிருந்து உருவானவை-யாகும். அறிவியல் அழகியல் உளவியல் சமூகவியலென எல்லாவற்றையும் ஒரு சேரக் கட்டும் திறம் இவருக்கே உள்ள தனித்துவம்.

கவிதை உலகில் கவிஞர் புகாரியின் இருப்பிடம் இணையில்லாத ஒன்று. தொல்காப்பியருக்கு பலகோடி முத்தங்கள் தரவேண்டும் என்று எழுதிய கவிஞருக்கு தமிழர்களாகிய நாமும் பலகோடி முத்தங்கள் தரவேண்டும் போல் உள்ளது.

இந்த நூற்றாண்டில் தமிழ் வாழ்வதற்குரிய பெருமைக்கு கவிஞர் புகாரியின் பங்களிப்பு மிகவும் முக்கியம் ஆகும். அவரது கவிதைகள் ஞானச் சூரியன்களாய் வலம்வர வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

**சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்'இல்
மாவீரர் துயிலும் இல்லம்
நவம்பர் 27-2022 ஞாயிற்றுக்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
றொறன்ரோ
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
27-11-2022 ஞாயிற்றுக்கிழமை
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
Tel: 514-660-5891
ஒட்டாவா
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex
Hall - A
1701 Woodroffe Avenue
Ottawa, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.com/tamilremembrance

# 5–ஆவது பிரதமராக வேண்டிய அன்வார் மலேசியாவின் 10–ஆவது பிரதமர் ஆனார்

## சதிநாயகன் மகாதீருக்கு இரட்டைத் தோல்வி



நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.24:

மலேசியாவின் 10-ஆவது பிரதமராக இன்று பொறுப்பேற்றுள்ள டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமிற்கு முதற்கண் கனடாவின் ஊடகமான உதயன் வாழ்த்து தெரிவிக்கிறான்.

20-ஆம் நூற்றாண்டின் நிறைவுக்கட்டத்தில் நாட்டின் 5-ஆவது பிரதமராக ஆகியிருக்க வேண்டியவர், நாட்டில் எந்தத் தலைவரும் சந்தித்திராத வஞ்சகத்திற்கும் துரோகத்திற்கும் ஆளாகி, கடந்த கால் நூற்றாண்டாக பல்வேறு சவால்களை சந்தித்தபின் இன்று நாட்டின் 10ஆவது பிரதமராகி இருக்கிறார்.

1990-ஆம் ஆண்டுகளில் அன்வாரிடம் சற்று தள்ளியே நின்ற அம்னோவின் 2-ஆம் கட்ட தலைவர்கள், அன்வார் அம்னோவில் இருந்தும் துணைப் பிரதமர் பொறுப்பில் இருந்தும் விளக்கப்பட்டு, “சீர்திருத்தம்” என்னும் முழக்கத்தை முன்வைத்து மாற்று அரசியலுடன் மலேசிய அரசியல் களத்தில் நுழைந்தபோது, முன்னர் மிரட்சியின் ஒதுங்கி நின்றவர்கள் வரிசையாக துணிந்து எதிர்த்து நின்றனர்.

2013-பதின்மூன்றாவது பொதுத் தேர்தலிலும் நம்பிக்கைக் கூட்டணி வெல்ல முடியாத நிலையில், இடைக்கால ஏற்பாடாக சிலாங்கூர் மாநில அரசியலில் நுழைய முயன்றார் அன்வார்; அந்த நேரத்தில் அன்வாருக்கு இன்னொரு நோக்கமும் இருந்தது.



அப்போதைய சிலாங்கூர் மந்திரி பெசாரும் (முதல்வர்) சொந்தக் கட்சியைச் சேர்ந்தவருமான டான்ஸ்ரீ காலிட் இப்ராகிமை அந்தப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு அந்தப் பதவிக்கு குறிவைத்த அன்வார், இதற்காக காஜாங் சட்டமன்றத் தொகுதியில் இருந்து தேர்வான சொந்தக் கட்சி உறுப்பினரை பதவிவிலக வைத்து, இடைத்தேர்தல் மூலம் சட்டமன்றத்திற்கு நுழைய முயன்றார்.

மலேசிய அரசியல் வரலாற்றில் “காஜாங் நகர்வு” என்றழைக்கப்படும் அந்தத் திட்டத்தையும் முறியடித்தார் அப்போதைய பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப்.

இவ்வாறு, தேசிய அரசியலிலும் மாநில அரசியலிலும் மாற்றிமாற்றி அடிவாங்கிய அன்வாருக்கு இப்போழுது-இன்று காலம் கனிந்துள்ளது.

நாட்டின் முதல் பிரதமரும் தேசத் தந்தை என்று புகழப்படுபவருமான துங்கு அப்துல் ரகுமானின் பெயரில் உள்ள RAHMAN என்னும் பெயர்ச் சொல்லில் இடம்பெற்றுள்ள எழுத்துக்களை தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள் வரிசையாக பிரதமர் ஆனார்கள்.

R- ரகுமான், A- அப்துல் ரசாக், H- உசேன் ஓன், M- மகாதீர், A- அப்துல்லா படாவி, N- நஜீப் ஆகியோர்தான் நாட்டின் முதல் ஆறு பிரதமர்கள்.

இவர்களில், மகாதீருக்குப் பின் அப்துல்லா பிரதமர் ஆவார் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை 1993-இல் அன்வார் துணைப் பிரதமர் ஆனதும் அடுத்த பிரதமர் அவர்தான் என்று மலேசியாவில் மட்டுமல்ல; பன்னாட்டு அரசியல் அரங்கிலும் எதிர்பார்ப்பு நிலவியது.

கடைசியில், பாலியல் விவகாரம் அரசியல் ஆக்கப்பட்டு, அன்வாரை அடியோடு வீழ்த்தினார் துன் மகாதீர். அதன்பிறகு நடந்ததை யெல்லாம் ஊரும் உலகும் அறியும்.

இப்பொழுது, ஒருவழியாக அன்வார் பிரதமராகிவிட்டார். கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் எதிர்பார்த்தபடி பக்கத்தான் கூட்டணி என்னும் நம்பிக்கைக் கூட்டணிக்கு ஆட்சி அமைக்கும் அளவிற்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில், நான்கு நாள் இழுபறிக்குப் பின் இன்று அவரை நாட்டின் 10-ஆவது பிரதமராக மாட்சிமைக்குரிய மாமன்னர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்த.்.பா பில்லா ஷா அறிவித்தார்.



பதவியேற்ற ஒருசில மணி நேரத்திலேயே அன்வார் அதிரடி படைத்திருக்கிறார். பங்கு சந்தை வர்த்தகக் குறியீடு உயர்ந்ததைப் போல மலேசிய நாணயம் ரிங்கிட்டின் மதிப்பும் உயர்ந்துள்ளது.



15-ஆவது நாடாளுமன்றம் டிசம்பர் 19-ஆம் நாள் கூடவிருக்கிற நிலையில், தனக்கான நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோருவதுதான் முதல் வேலை என அன்வார் அறிவித்திருக்கிறார்.

இதில் வேடிக்கை என்றால், அன்வார் தனக்கான பெரும்பான்மையை நாடாளும்மன்றத்தில் நிரூபிக்க வேண்டும் என்று கொல்லைப் புற ஆட்சியை நடத்தியவரும் தவளை அரசியலை அறிமுகப்படுத்தியவருமான டான்ஸ்ரீ முகைதீன், அன்வார் பதிவியேற்ற அடுத்த ஒரு மணி நேரத்தில் தான் நடத்திய செய்தியாளர்க் கூட்டத்தில் வலியுறுத்தியதுதான்.

முகைதீன், 17 மாதங்களாக கொல்லைப்புற ஆட்சியை நடத்திய காலத்தில், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பைப் பெறாமலேயே ஆட்சி நடத்தினார். அது குறித்த கோரிக்கை வலுத்த நேரத்தில் அவசரகால சட்டத்தைப் பிறப்பித்தும் கொரோனா பரவலை காரணம் காட்டியும் ஜனநாயக நடைமுறையை மதிக்காமல் காலந்தள்ளிய இவர், அன்வாரைப் பார்த்து நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோர வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

2020 மார்ச் 1-இல் 8-ஆவது பிரதமராக பதவியேற்ற முகைதீன், மார்ச் 10-ஆம் நாள்தான், அதுவும் இந்த சின்னஞ்சிறு நாட்டில் 70 பேர் கொண்ட அமைச்சரவையை அறிவித்தார். தன்னுடைய பதவிக் காலம் முழுவதும் நம்பிக்கை வாக்கெடுப்பு கோராமலேயே காலந்தள்ளிய முகைதீனின் கோரிக்கை சாத்தான் வேதம் ஓதுவதைப் போல இருக்கிறது.

தான் பிரதமர் ஆனால், முதலில் மகாதீருக்குத்தான் காய்ச்சல் வரும் என்று தேர்தல் பிரச்சாரத்தின்போது அன்வார் குறிப்பிட்டிருந்தார். அதன்படி, இதுவரை மகாதீருக்கு உண்மையில் காய்ச்சல் வந்துள்ளதா என்று தெரியவில்லை.

ஆனால், அவருக்கு ஒரு நாள் நிச்சயம் காய்ச்சல் வரும் அன்வார் மேற்கொள்ள விருக்கும் அடுத்தடுத்த நடவடிக்கை மகாதீருக்கு காய்ச்சல் வருகிற மாதிரி அமையும்.

மொத்தத்தில், கடைசியில் அன்வார் பிரதமராகி விட்டார்; அதேவேளையில், அன்வார் பிரதமர் ஆகாமல், அடுத்தடுத்த சதி, வஞ்சக வேலைகளைப் புரிந்துவந்த மகாதீர் தோல்வி அடைந்துவிட்டார்.

பொதுத் தேர்தலில் வைப்புத் தொகை பறிபோகும் அளவுக்கு மண்டியிட்டு மண்ணைக் கௌவிய மகாதீர், அடுத்த ஒருவாரத்தில் அன்வாரிடம் தோல்வி அடைந்துள்ளார்.

அன்வார் பிரதமர் ஆகாமல் தடுப்பதற்காக மகாதீர் மேற்கொண்ட தந்திர நடவடிக்கைகளால், நாட்டின் அரசியல் நிலைத்தன்மை பாழானது; கட்சி தாவும் தவளைக் கூட்டம் கூச்சமின்றி சதிராட்டம் நடத்தியது; மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் மீண்டும் கொல்லைப்புற வழியாக பதவி சுகம் கண்டனர்; மாநிலங்களுக்கு தனித்தனியாக தேர்தல் நடத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு நாட்டின் பொருளாதாரம் பாழாகிறது;

போனது போகட்டும்; இப்பொழுதாவது மக்களும் ஜனநாயகமும் மகாதீருக்கு தக்க பாடத்தைப் புகட்டிவிட்டனர். புத்தகம் எழுதப் போவதாக மகாதீர் கூறி இருக்கிறார். அதில் நல்ல அம்சங்கள் இருக்குமா அல்லது இன-சமய உணர்ச்சியைத் தூண்டும் பொல்லாத அம்சங்கள் இருக்குமா என்பது அது வெளியாகும் கட்டத்தில்தான் தெரியவரும்.

மொத்தத்தில் நாட்டின் புதிய நிருவாகத் தலைவர் அன்வார் வெல்க;

மலேசியத் திருநாடு வாழ்க!



நக்கீரன் - Nakkeeran 013-244 36 24






மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1024



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

"அரிஹர குமாரா அடியேன் அழைக்க
வருவா யுன்றன் மனமுவந் தென்முன்
மாயவன் சிவன் மகன் வருக வருக
நேயமாய்ப் பூரணை நினைவோன் வருக
புட்கலை மணாளா போற்றிட வருக வருகவே..."

தற்காலத்திலே மானிடவியல், சமூகவியல், ஒப்பீட்டுச்சமயம், தென்னாசிய வரலாறு ஆகிய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்து சமய வழக்காறுகள், வழமைகள், இந்து சமூக அமைப்பிலே ஆலயங்களும், சமயமும் பெறும் பங்கு, குடும்பம், தொழில் போன்றவற்றோடு சமயம் கொண்டுள்ள தொடர்பு, போன்ற பல விடயங்களை கல்வித்துறைசார்ந்த அறிஞர்கள் பலமொழிகளிலும் எழுதி வருகின்றனர். தற்காலத்தில் மேற்குலகிலும் இந்துசமயத்தின் கூறுகள் பலவும் மேற்குலக மக்களால் பின்பற்றப்பட்டு வருவதோடு, வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்பட்ட பொருளாகவும் இந்துசமயம் விளங்கி வருகின்றது. இவை யாவற்றினுடைய அடிநாதமாக விளங்குபவை இந்து ஆலயங்கள் எனின் அவை மிகையாகாது.

இந்துக்களின் வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆலய வளர்ச்சியின் மூலம் மக்களிடையே ஆன்மீக வளர்ச்சி ஏற்பட்டு வந்தமையை வரலாறுகள் மூலம் அறிய முடியும். பண்டைக்காலத்திலே அரசர்களும், சான்றோர்களும், அறங்காவலர்களும், ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஆலயங்களின்மூலம் சமயஉண்மைகளையும், சமய வாழ்க்கை முறையையும் உணர முடிவதோடு, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் சான்றோராகவும் விளங்க ஆலயங்கள் வழிகாட்டி வருகின்றன.

பாரம்பரியம் மிக்க இனமான தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, கலாச்சாரத்தை அழித்தொழிக்க எண்ணுவோர், இந்து ஆலயங்களை அழிப்பதில் முதன்மை வகிக்கின்றனர். தற்காலத்திலும் தமிழீழ தாயகத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள பல ஆலயங்கள் அழிவுக்குள்ளாகி இருப்பது கண்கூடு. இத்தகைய சூழ்நிலையில் ஆலய வரலாறுகளையும் அதனோடு தொடர்புடைய தமிழர் வரலாறு, மற்றும் தமிழர் பின்பற்றும் மரபுகளையும் அறிந்து பாதுகாப்பது அவசியமாகின்றது.


இந்து மதத்திலே கூறப்பட்டுள்ள புராணக்கதைகளை மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது அவை கற்பனை சார்ந்தவையாகக்காணப்பட்டபோதிலும், அடிநாதமாக அறிவியல் சார்ந்த உண்மைகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றன. புராணம் என்றால் பழமையானது தொன்மையானது என்ற கருத்துடையது. ஐயனார், ஐயப்பன் இருவரும் ஒருவரா? அல்லது இருவேறு தெய்வங்களா என்ற கேள்வி பலரிடையே காணப்படுகின்றது. இருவர் வரலாறும் இருவேறு கதைகளாகக் காணப்பட்டபோதிலும் ஒன்றோடொன்று இணைந்தும் காணப்படுகின்றது. தற்பொழுது ஐயப்பன் விரதகாலமாகையால் சிறு விளக்கத்தை அறிந்த பின்னர் ஆரையம்பதி ஐயனார் ஆலய வரலாற்றினை அறியலாம்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் வழிபாட்டு முறையில் ஐயப்பழிபாடு பெரிதும் போற்றப்படுகின்றது. ஈழத்தில் கிராமிய வழிபாடாகக்காணப்படும் ஐயனார் வழிபாட்டிற்கும், தமிழ்நாடு, கேரளா போன்ற இடங்களில் 'போற்றப்படும் ஐயப்ப வழிபாட்டிற்கும் தொடர்புகள் பல காணப்படுகின்றன. இவ்விரு வழிபாடுகளின் வழிபடுமுறைகளும் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் பாலில் படுநெய்போல இருவழிபாடுகளும் ஒன்யையே குறிப்பதாகக் காணப்படுகின்றது. ஐயனாரின் வழிபாடு, அகந்தையை அழிக்க ஏற்பட்ட தோற்றப்பபாடாகும். புராண வரலாற்றின்படி, துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை, மகிஷி என்னும் அரக்கி, தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்றாள். இதனால் தேவர்களைப் பழிக்குப் பழிவாங்களண்ணி, பிரம்மனை நோக்கித் தவமிருந்தாள்.

அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் மரணம் ஏற்படக்கூடாது எனும் வரத்தைப் பெற்று, தேவர்களைக் கொடுமைப்படுத்தினாள். அவளிடமிருந்து தப்பித்து வாழ எண்ணிய தேவர்களும், அசுரர்களும் அமுதுண்டு நீண்டகாலம் வாழ விரும்பினர். இதனால் பாற்கடலைக் கடைந்து, அமுதினைப் பெற்றனர். இவ்வேளையில் அசுரர்கள் தேவர்களிடமிருந்து அமுதினைப் பறித்து உண்ணத் தொடங்கினர். செய்வதறியாது திகைத்த தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். தேவர்களைக் காப்பாற்ற வேண்டி மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களை மயக்கி, அசுரர்களிடமிருந்து அமுதத்தினைப் பெற்று, தேவர்களுக்கு அளித்தார். இந்தக் கன்னி உருக்கொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த திருக்குழந்தைக்கு தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். தர்மசாஸ்தாவின் தோற்றம், சிவ வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

அருவ உருவமாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரனார் ஐக்கியம் ஏற்பட்டதென்பது ஞானிகளின் கூற்றாகும். தழிழகத்திலும், கேரளத்திலும் நெடுங்காலமாக வழிபட்டுவந்த மாசாத்தான், கண்டன்சாஸ்தா, சாத்தப்பன். ஆரிஹரபுத்திர ஐயனார் ஆகிய திருப்பெயர்கள், அரிகரபுத்திரனாகிய தர்மசாஸ்தாவையே குறிப்பதாகும். தேவதைகளின் வழிபாடாகப் போற்றப்பட்ட இவ்வழிபாடு, சைவ வைணவக் கொள்கைகளாலும், கி.மு 2 ஆம் நூற்றாண்டு முதல் பரவிய புத்தமதக் கோட்பாடுகளாலும் தழுவப்பெற்று வழிபாட்டுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. புத்தமதத்திற்கே உரித்தான சரணம் போடும் முறையும், கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதலும், பகவான் பகவதி சரணம் விளித்தலும், புத்த மதத்திலிருந்து தழுவிக்கொள்ளப்பெற்ற வழக்கங்களாகும். கேரளத்தை உருவாக்கிய பரசுராமர், பதினெட்டு மலைகளில் அரிஹர புத்திரனாகிய தர்மசாஸ்தாவின் கோயில்களை அமைத்தார். அவற்றில் சிலவே தற்பொழுதும் காணப்படுகின்றது. அவற்றுள் சபரிமலையும் ஒன்றாகும். கேரளராச்சியம் கொள்ளையர் வசப்பட்டபோது, சபரிமலையிலிருந்த அரிஹரபுத்திரராகிய தர்மசாஸ்தாவின் கோயிலை கொள்ளையடித்து, மூலவிக்கிரகமாகிய தர்மசாஸ்தாவின் விக்கிரகத்தையும் நாசப்படுத்தினர். காலம்மாறி கொள்ளையரிடமிருந்து அரசு மீட்கப்பட்டபின் மார்கழித்திங்கள் சனிக்கிழமை, உத்தரநட்சத்திரம், பஞ்சமிதிதி விருச்சிகலக்கினம் கூடிய நன்னாளில், ஐயந்தனுக்கும், பந்தள இராஜகுமாரிக்கும் ஐயப்பன் மகவாக அவதரித்தார். "இக்குழந்தை தர்மசாஸ்தாவின் அவதாரம்" என அசரீரி ஒலித்தது. இதன்பின்னர் ஐயப்பன் பல அற்புதங்களைப் புரிந்து, இறுதியில் சபரிமலை தர்மசாஸ்தாவின் கோயிலுக்கு. தந்தை ஐயந்தனுடன் சென்றார். அங்கு கொள்ளையர்களால் அழிக்கப்பட்ட அரிஹரபுத்திரராகிய தர்மசாஸ்தாவின் மூலவிக்கிரக்தை, ஐயந்தன் மூலபீடத்தில் நிலைநிறுத்த, தீடீரென விக்கிரகத்திலிருந்து ஜோதி ரூபமான ஒளி தோன்றியது, பிரதிஷ்டை செய்யப்பட்ட அரிஹரபுத்திரர் தர்மதர்மசாஸ்தாவின் விக்கிரகத்தில் தோன்றிய அந்த ஒளியில், ஐயப்பன் ஐக்கியமாகிவிட்டதை அனைவரும் கண்கூடாகக் கண்டனர். தமிழகத்திலும், இலங்கையின் பல ஊர்களிலும் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தெய்வமான ஐயனார், ஹரிஹர சுதன் ஐயப்பனே ஆவார் என்பதை சுருக்கமாக இவ்வரலாறு எடுத்தியம்புகின்றது. இக்காரணத்தாலாயே ஐயனார் எழுந்தருளியுள்ள கோவில்களில் ஐயப்ப வழிபாடு பெரிதும் போற்றப்படுகின்றது.

***வளரும்...***




## புகழ் போதையில் ஜெமினியை கழட்டிவிட்ட நடிகை.. மறைக்கப்பட்ட நடிகையர் திலகத்தின் மறுபக்கம்



தமிழ் சினிமாவில் காதல் மன்னனாக வலம் வந்த நடிகர் தான் ஜெமினிகணேசன். திரைப்படங்களில் மட்டுமல்லாமல் அவர் நிஜ வாழ்க்கையிலும் காதல் மன்னனாகத் தான் இருந்தார். ஏனென்றால் அவரை சுற்றி எப்போதுமே பெண்கள் கூட்டம் இருக்குமாம். அது மட்டுமல்லாமல் அவருக்கு நான்கு மனைவிகள் என்று சொல்லப்பட்டாலும் கணக்கில் இல்லாத சிலரும் இருக்கிறார்கள். இப்படி அவர் ஒரு பிளேபாய் ஆகவே நமக்கு காட்டப்பட்டிருக்கிறார். ஆனால் உண்மையாகவே இவர் எந்த பெண்களையும் தேடி சென்றதே கிடையாதாம். மாறாக தன்னைத்தேடி வருபவர்களுடன் தான் அவர் ரிலேஷன்ஷிப்பில் இருந்திருக்கிறார்.

அந்த வகையில் இவர் நடிகையர் திலகம் சாவித்திரியின் மீது நிஜமான அன்பு கொண்டு திருமணம் செய்து இருக்கிறார். சில காலங்கள் வரை நன்றாக சென்று கொண்டிருந்த அவர்களுடைய வாழ்வில் திடீரென சறுக்கல் ஏற்பட்டது. அதாவது ஜெமினியின் மார்க்கெட் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்து இருக்கிறது.

அதே நேரத்தில் சாவித்திரியின் புகழும் உச்சத்தில் இருந்துள்ளது. அந்த புகழ் போதையின் காரணமாகவே அவர் ஜெமினியிடம் இருந்து சிறிது சிறிதாக விலக ஆரம்பித்திருக்கிறார். ஒரு கட்டத்தில் சக நடிகர்களுடன் நட்பு, குடிப்பழக்கம் என்று அவருடைய போக்கு முற்றிலுமாக மாறி இருக்கிறது. அது மட்டுமல்லாமல் இனி ஜெமினி தனக்கு தேவையில்லை என்று அவரை உதாசீனப்படுத்தி இருக்கிறார். அதனால் வேறு வழி இல்லாமல் ஜெமினி கணேசனும் சாவித்திரியை விட்டு பிரிந்திருக்கிறார். உண்மையில் இதுதான் நடந்திருக்கிறது. ஆனால் சாவித்திரியின் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தில் அது அப்படியே வேறு விதமாக காட்டப்பட்டிருக்கிறது. இதை பார்க்கும் போது எனக்கு வயிறு பற்றி எரிந்தது என ஜெமினிக்கு நெருக்கமாக இருந்த டாக்டர் காந்தராஜ் தெரிவித்துள்ளார். இவர் எம்ஜிஆர் ஆட்சியில் சபாநாயகராக இருந்த ராஜாராமின் உடன் பிறந்த சகோதரர் ஆவார்.

மேலும் சாவித்திரியின் இறுதி காலத்தில் அவருடைய நிலையை பத்திரிகைகளில் தெரிந்து கொண்டு தான் ஜெமினி அவருக்கு உதவி செய்தார் என்றும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் அவருடைய இன்னொரு மனைவி புஷ்பவல்லியும் இவரை ஒதுக்கிவிட்டு சென்றதாகவும் குறிப்பிட்டார். இப்படி இவரை தேடி வந்த பெண்களே இவரை கழட்டி விட்டு சென்ற கதைதான் நடந்திருக்கிறது. ஆனால் உலகத்தின் பார்வையில் இவர் ஒரு காதல் மன்னனாக சித்தரிக்கப்பட்டது தான் சோகம்.

# இவ்வார ராசிபலன்

## 25-11-2022 வெள்ளி தொடக்கம் 01-12-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரினம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H





**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும் தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமண பாக்கியம் கூடி வரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு, தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,T



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

**'ராஜயோகம்'**

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,6,4,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P

*(தொடர்ச்சி 30 பக்கம்)*

# வலதுசாரி திசையில் மலேசிய அரசியல்: நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்காது

## அன்வாரின் பிரதமர் கனவு நனவாகுமா?



நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.20:

அமெரிக்கா உட்பட உலகெங்கும் பரவி வருகின்ற இன-மத அடிப்படை-யிலான வலச்சாரி அரசியல் மலேசியாவையும் ஆக்கிரமித்துள்ளதற்கு போதுமான சான்று, நாட்டின் 15-ஆவது பொதுத் தேர்தல் கண்டுள்ள தொங்கு நாடாளுமன்றத்தில் பாஸ் கட்சி பெற்றுள்ள மிருக பலம்.

மதவாதம் இனவாதம் இரண்டையும் இரு கண்ணென கொண்டிருக்கும் பாஸ் கட்சிதான் நாட்டில் வலுவான அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளது.

தேற்தல் நடந்த 220 தொகுதிகளுக்கான முடிவும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் கட்சி மட்டும் 49 இடங்களைக் கைப்பற்றி, அடுத்த ஆட்சியை அமைக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத்தில் 18 உறுப்பினர்களை மட்டும் கொண்டிருந்த இக்கட்சி, இப்பொழுது நெருக்கமாக மும்மடங்கு இடங்களை வென்றுள்ளது. 18 வயதை எட்டிய இளம் வாக்காளர்களில் பெரும்பாலும் பாஸ் கட்சி - பெர்சத்து - கெராக்கான் கூட்டணியை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

தொடக்கக் கல்வியை சமயப் பள்ளியில் பெற்ற மாணவர்களில் பெரும்பான்மையினர், இன-சமய அடிப்படையிலான "மலாய்-முஸ்லிம் அதிகாரக் கொள்கையை முன்னெடுத்துள்ள பாஸ்-பெர்சத்து கட்சிகளை ஆதரிக்கும் முடிவை எடுத்திருப்பதற்கான சாத்தியம் தெரிகிறது.

கடந்த தேர்தலின்போது உருவான நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு கொல்லைப்புற ஆட்சியின் முதல் அங்கத்தை வழிநடத்திய டான்ஸ்ரீ முகைதீன் யாசினும் இப்பொழுது பாஸ் தலைவர் டத்தோஸ்ரீ அவாங் அடிக்கு இணையாக இனவாத அரசியலை முன்னெடுக்கிறார். இவர்கள் இணைந்த தேசியக் கூட்டணியின் இலட்சியமே, "மலாய்-முஸ்லிம் அதிகாரக் கட்டமைப்பு"தான்.

இந்தக் கூட்டணிக்குத்தான் 15வது பொதுத் தேர்தல் மூலம், இவர்களே எதிர்பாராத வெற்றியை மக்கள் அளித்துள்ளனர். இந்தக் கூட்டணி, பெர்லிஸ் மாநிலத்திலும் பேராக் மாநிலத்திலும் தேசிய முன்னணியை பந்தாடி களத்தில் இருந்தே தூக்கி அடித்துள்ளது.

திரங்கானு, கிளந்தான், கெடாவைத் தொடர்ந்து, இப்பொழுது பெர்லிஸ் மாநிலமும் பாஸ் கட்சியின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. பேராக் மாநில சட்டமன்றத்தின் 56 தொகுதிகளுக்கான முடிவு வெளியாகும் நிலையில், அந்த மாநிலத்திலும் பாஸ் கட்சி மேலாண்மை செய்வதற்கான சூழல் தென்படுகிறது.



நாடாளுமன்றத் தேர்தலுடன் 3 மாநில சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் நடந்துள்ள நிலையில் பகாங் மாநிலத்தை மட்டும் தேசிய முன்னணி தக்கவைக்கும் என்று தெரிகிறது.

இதற்கிடையில், நம்பிக்கைக் கூட்டணித் தலைவரும் 30 வருடங்களாக பிரதமராகக் காத்திருப்பவருமான டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம், தன்னுடைய தலைமையில் ஆட்சி அமைக்க போதுமான எண்ணிக்கை பலம் இருப்பதாக அறிவித்து இருக்கிறார்.

தேசிய முன்னணி, நம்பிக்கைக் கூட்டணி, தேசியக் கூட்டணி ஆகிய 3 அணிகளில் எந்த அணிக்கும் ஆட்சி அமைப்பதற்கான தெளிவான அதிகாரத்தை மக்கள் அளிக்காமல், தொங்கு நாடாளுமன்றத்தை உருவாக்கி விட்டனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நீடித்த அரசியல் நிலையற்றத் தன்மையைக் கருத்தில் கொண்டு, மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக அன்வார் விரைந்து செயல்பட்டு பாஸ்-பெர்சத்து கட்சிகளை முந்திக்கொண்டு போர்னியோ மண்டல மாநிலங்களான சபா-சரவாக் மாநிலங்களின் கட்சிகளை இணைத்துக் கொண்டு உடனே புத்தாட்சி அமைக்க ஆவண செய்ய வேண்டும்.




தேசிய முன்னணியைப் பொருத்தவரை ஒரேயொரு தமிழர் டத்தோஸ்ரீ மு.சரவணன் மட்டும் வெற்றி பெற்றிருக்கிறார் எனத் தெரிகிறது; அதேவேளை, நம்பிக்கைக் கூட்டணி சார்பில் அதிகமான தமிழர்கள், இந்தியர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

புதிதாக தேர்வாகியுள்ள 15-ஆவது நாடாளுமன்றத்திற்கு இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்கூட தேர்ந்தெடுக்கப்படாதது வருத்தத்திற்கு உரியது. கோல லங்காட் தொகுதியில் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்த மோகனா வெற்றி பெறாத நிலையில், நம்பிக்கைக் கூட்டணியின் கோ. மணிவண்ணனும் தேர்வாகாதது வருத்தம்தான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தத் தேர்தலில் ஒரேயொரு ஆறுதலான அம்சம், அணிதாவும் தவளைக் கூட்டத்தை உருவாக்கி வழிநடத்திய தலைமைத் தவளைகளின் பின்னங்கால்கள் அடியோடு நறுக்கப்பட்டதுதான்.

வக்கரிக்கும் சேவலைப் போல ஓயாமல் இரைச்சல் எழுப்பிவந்த பெஜுவாங் கட்சியும் வாரிசான் கட்சியும் விரட்டியடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, துன் மகாதீரின் வைப்புத் தொகையை லங்காவி வாக்காளர்கள் தட்டிப் பறித்ததை நினைக்க நினைக்க ஆனந்தமாக இருக்கிறது.

இனியாவது அவர் அமைதிகாத்து, வாயாடித்தன அரசியலைத் தவிர்த்தால் நல்லது. வாக்களித்த மக்களுக்கு பச்சைத் துரோகம் இழைத்து தானும் அணிதாவி, இன்னும் 10 பேரையும் அணிதாவ வைத்து நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியைக் கெடுத்த டத்தோஸ்ரீ அஸ்மின் அலி, கோம்பாக் தொகுதியில் மண்டியிட்டதும் அவரின் வழியில் அக்கிரம அரசியல் புரிந்த ஸுரைடா கமாருடின் அம்பாங் தொகுதியில் வைப்புத் தொகையைப் பரிகொடுத்ததும் இனிப்பான செய்தி! டத்தோஸ்ரீ எட்மண்ட் சந்தாராவிற்கும் இத்தகைய தண்டனை கிடைத்திருக்க வேண்டும். ஆனால், அவர் சிகாமாட் தொகுதியில் இருந்து தொடைநடுங்கி பின்வாங்கிவிட்டார்.

நம்பிக்கைக் கூட்டணியைப் பொறுத்தவரை இப்பொழுதும் ஒன்றும் கைமீறிப் போகவில்லை. அவர்கள், தீபகற்ப மலேசியாவில் 86 முதல் 94 இடங்களை இலக்கு வைத்தனர். ஆனால், 82 தொகுதிகள் கிடைத்துள்ளன. இதை ஆதாரமாகக் கொண்டு விரைந்து காரியமாற்றினால், அன்வார் பிரதமர் ஆவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மதவாதம் பேசும் பாஸ் கட்சியின் முனைப்பை அவரால் முறியடிக்க முடியும். இத்தகைய முனைப்பு, பேராக், பகாங் மாநில ஆட்சிகளையும் நிறுவ துணைபுரியும்.

நவம்பர் 20-ஆம் நாள் முடிவு தெரியவரும்; நாட்டின் அடுத்த பிரதமர் யார் என்று!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com





# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்'ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**மீனம்:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R


ஈழமுரசு
ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்
தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
68
இருப்பாய்
தமிழா
நெருப்பாய்!
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
2022
நவம்பர்
26
சனிக்கிழமை
மாலை
5 மணி
இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புகளுக்கு: (647) 657 8566, (647) 783 3466










26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்








உதயம் 1390 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 25, 2022


# HERITAGE BEYOND BORDERS ANNUAL AWARDS AND GALA NIGHT





*(முன் பக்கத் தொடர்ச்சி)* பல்லின மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பல பிரமுகர்கள் வர்த்தக அன்பர்கள் பத்திரிகையாளர்கள் கலைஞர்கள் இளம் பெண்மணிகள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டனர்.
கனடிய மத்திய அரசின் முன்னாள் குடிவரவு அமைச்சரான ஜோ வோல்ப்பே அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.
வர்த்தகப் பிரமுகர் திரு சங்கர் நல்லதம்பி அழைக்கப்பெற்ற விருந்தினர்களில் ஒருவராக அங்கு கலந்து கொண்டார்.
இந்த அழகிய நிகழ்வில் என்னும் “ ஆற்றல் மிகு அழகிகள்“ போட்டி இடம்பெற்றது. அதில் பல்லினங்களைச் சேர்ந்த பல இளம் பெண்கள் பங்கெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
வெற்றியாளர்களுக்கு பணப் பரிசும் வழங்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ---படங்கள்ூ சத்தியன்--

# கப்பல் மூலம் கனடா வருவதற்கு முற்பட்டு வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாவகச்சேரியை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் மரணம்



அண்மையில் கப்பல் மூலம் கனடா வருவதற்கு முற்பட்டு வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.
சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரன் என்ற 32 வயதான இளம் குடும்பஸ்தரே மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் பொருளாதார சூழல் காரணமாக புலம் பெயர முயற்சித்ததாக குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.
இவருக்கு பிறந்து ஆறு மாதங்களே ஆன பெண் குழந்தையும் இருப்பது குறிப்பிடத்தக்கது.
இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலத்தை நாட்டுக்கு கொண்டு வர வழியறியாது குடும்பத்தினர் தவித்து வருவதோடு, சம்பந்தப்பட்ட தரப்புக்களின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

# கனடாவில் தமிழ்க் கவிதைகளை ஓர் இயந்திர ஆற்றல் போன்று எழுத ஆரம்பித்த கவிஞர் புகாரி ‘சிந்தனைப்பூக்கள்’ எஸ். பத்மநாதன்


கனடாவில் தமிழ்க் கவிதைகளை ஓர் இயந்திர ஆற்றல் போன்று எழுத ஆரம்பித்தகவிஞர் புகாரிக்கு. 2001ம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசுக்கான தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தது. இதுவே கனடாவில் இவரது ஆரம்பப் படியும் தட்டிக் கொண்ட தங்கப் பரிசுமாகும்.
இவ்வாறு கனடா வாழ் விருது பெற்ற இலக்கியவாதி சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்கள் கவிஞர் புகாரியின் ‘அன்புடன் நயாகரா’ கவிதை நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த கவிதை நூல் எதிர்வரும் டிசம்பர் 3ம் திகதி பிற்பகல் 1.30 தொடக்கம் 4.00 மணிவரை ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கிய விழாவில் வெளியிடப்பெறவுள்ளது. (தொடர்ச்சி 23ம் பக்கத்தில்)

# அறிஞர் அவ்வை நடராசன் அவர்களின் மறைவு தமிழகத்திற்கு மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகிற்கும் பேரிழப்பாகும்

## – மா.க.ஈழவேந்தன்

## (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், இலங்கை)

**(உள்ளே விபரமான கட்டுரை)**



‘என்கடன் பணி செய்து கிடப்பதே தன் கடன் அடியேனைத் தாங்குதல் என்று பாடிய நாவுக்கரசர் 81 ஆண்டுகள் வாழ்ந்தார். புவிக்குப் புதுவழி காட்டிய புத்தரும் 80 ஆண்டுகள் வாழ்ந்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்த முனைவர் ஜி.யு.போப் அவர்களின் வாழ்க்கையும் அகவை எண்பதுகளில் நிறைவுற்றது. இந்த வழியில், உலகியல் வாழ்க்கைக்கு அமைய எங்கள் அவ்வை நடராஜன் அவர்கள் நிலைத்த புகழ் நாட்டி நில்லாவுலகில் தனது 85ஆவது அகவையில் உயிர்நீத்தார். (தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# தாயகக் கனவுடன் – சிறுகதை



குரு அரவிந்தனின் படைப்பு உள்ளே முழுமையாக பிரசுரமாகியுள்ளது (அவள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாள். குமர்ப்பிள்ளைகளோடு கண்டபடி பேசக்கூடாது என்ற அம்மாவின் அறிவுறுத்தல் ஒரு பக்கம் என்னைப் பின் வாங்க வைத்தது. நாங்கள் வெளியே ஓடியாடி விளையாடும்போதெல்லாம் அறையன்னலுக்கால் அவள் ஏக்கத்தோடு எட்டிப் பார்ப்பதை அவதானித்திருக்கிறேன்)






ஸ்டோர்ரூம் சுவரில் சாய்ந்தபடி நான் விம்மியழுததை சுவேதா கவனித்திருக்க வேண்டும்.
‘அப்பா, ஏன் அழுவுறீங்க?’ என்றாள்
‘இல்லை, ஒன்றுமில்லை.’ என்று தலையை அசைத்தபடி கண்களைத் துடைத்துக் கொண்டேன். (தொடர்ச்சி 20ம் பக்கத்தில்)